# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 ஆடி / ஜூலை 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்:

## அடிமை மன்றத்துக்கு ஆண்டு நூறு!




தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு நூற்றாண்டு விழா எடுத்துள்ளது மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி. தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் தலைமையேற்க, ஆளுநரும் இந்தியக் குடியரசுத் தலைவரும் விழாவைச் சிறப்பித்துள்ளனர். நீண்ட காலம் தமிழ்நாட்டுச் சட்ட மன்ற உறுப்பினராகவும் மாநில

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. சமூகநீதியும் சாதி அரசியலும் - 9
3. மூன்றாவது கோவிட் அலையை வரவேற்கும் பாஜக - 16
4. ஐயா சுபவீ, உங்களைக் கூண்டில் ஏற்றுகிறோம் - 25
5. களம் காலம் - 36
6. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(21) -39
7. செங்காட்டான் குறிப்புகள் - 46
8. ஒளி-ஒலி மாசுபாடு - 49
9. நாடு நமதே! நகரமும் நமதே - 63
10. மின்காந்த மாசுபாடு - 70
11. சூழலைக் காக்க சரிபார்ப்பு பட்டியல் - 78
12. தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு– 84



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

முதலமைச்சராகவும் பொறுப்பு வகித்த கலைஞர் மு. கருணாநிதியின் படம் பேரவைக் கூடத்தில் திறந்து வைக்கப்பட்டது. அரசியல் தலைவர்களும் நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்களும் உயர் நீதிமன்ற நீதியரும் அவையடக்கத்துடன் அமர்ந்திருக்க, முதலமைச்சர் மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் உரையாற்ற, சீரும் சிறப்புமாக விழா நடந்தேறியது.

இந்தச் சட்ட மன்றம் தோன்றக் காரணமாக இருந்த மாண்டேகு, செம்ஸ்போர்ட்டு ஆகிய ஆங்கிலேயருக்கும் அவர்களுக்கு முன்னோடிகளான மிண்டோ, மார்லி ஆகிய ஆங்கிலேயருக்கும் படத்திறப்பு ஏதும் நடக்கா விட்டாலும் யாரும் அவர்களை நினைவுகூர்ந்து நன்றி சொல்லக் கூட இல்லை. அந்தப் பிரபுமார்களை விடுங்கள், எல்லாவற்றுக்கும் ஆசி வழங்கிய விக்டோரியா மகாராணியைக் கூட மறந்து விட்டார்களே! இப்படியா நன்றி மறப்பது?

கிழக்கிந்தியக் கும்பினியார் சென்னைக்கு வந்து ஆட்சியைக் கைப்பற்றிய காலத்தைக் கணக்கிட்டு அதன் இருநூற்றைம்பதாவது ஆண்டைக் கொண்டாடலாம், அதற்கு எலிசபெத் மகாராணியை அழைத்து வந்து, சர் பட்டம் பெற்று சரிகைக் குல்லாய் அணிந்த அரண்மனை அரசியல்வாதி ஒருவரின் படத்தைத் திறக்கச் செய்யலாம். இராபர்ட் கிளைவின் போர்க்கள வெற்றிக்கும் கூட விழாவெடுக்கலாம். இன்னும் எதற்கெல்லாம் விழாவெடுக்கலாம் என்பதைக் கண்டறிய உலகப் புகழ் பெற்ற வரலாற்று அறிஞர் குழு ஒன்றையும் அமைக்கலாம்.

நூறாண்டு காணும் இந்தச் சட்டமன்றத்தின் வரலாறு தெரியுமா?

1600 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கும்பினி நிறுவப்படுகிறது.

1707 - ஔரங்கசீப் மறைவுடன் முகலாயப் பேரரசு நலிவுறுகிறது. பிரித்தானியக் கிழக்கிந்தியக் கும்பினி கல்கத்தா, மும்பை, சென்ன நகரங்களில் வணிக நிறுவனங்கள் தொடங்குகிறது. மூன்று கிளைகளும் தனித்தனியாக இயங்கி அரசாட்சி கொண்ட இராணுவ ஆற்றல்களாக வளர்கின்றன.

1773 - பிரித்தானியப் பாராளுமன்றம் தலையிட்டு ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றி, வங்காள மாகாணத்துக்குப் பிற மாகாணங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் கொடுக்கிறது. வங்காள







LORD CHELMSFORD.

ஆளுநர் தலைமை ஆளுநர் (கவர்னர்-ஜெனரல்) என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். அவருக்கென்று ஓர் ஆட்சிமன்றம் (Council) அமைக்கப்படுகிறது. கல்கத்தா இந்தியாவின் தலைநகரமாகிறது. பிரித்தானிய இந்தியாவின் முதல் நடுவணரசு இப்படித்தான் தோற்றமெடுக்கிறது. சென்னைக்கும் மும்பைக்குமான ஆளுநர்கள் வங்காள ஆளுநருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றாலும் அவர்களுக்கென்று சில அதிகாரங்கள் விட்டு வைக்கப்படுகின்றன.

1833 - பிரித்தானியப் பாராளுமன்றம் இயற்றிய சட்டப்படி சென்னை, மும்பை அதிகாரங்கள் பறிக்கப்பட்டு கல்கத்தா நடுவணரசுக்கு - தலைமை ஆளுநருக்கு - மாற்றப்படுகின்றன. சென்னை, மும்பை மாகாணங்கள் இலண்டனுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். தலைமை ஆளுநர், ஆளுநர்கள் எல்லாருமே பிரித்தானிய அதிகார வகுப்பினரே, வேறு எவருமில்லை.

1852-53 - நடுவணரசுக்கும் மாகாண அரசுகளுக்குமான உறவுகளை ஆராய பாராளுமன்ற விசாரணைக் குழு அமைக்கப்படுகிறது.

1857 - சிப்பாய்க் கலகம் எனப்பட்ட முதல் இந்திய விடுதலைப் போர் அடக்கி ஒடுக்கப்படுகிறது.

1858 - விக்டோரியா மகாராணியின் சாற்றுரை கும்பினி ஆட்சியை நீக்கி இந்தியாவை



பிரித்தானிய அரசின் நேர் ஆட்சிக்கு உட்படுத்துகிறது.

1861 - இந்திய மன்றங்கள் சட்டம் (Indian Councils Act) இயற்றப்பட்டு, மாகாண சட்ட மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. ஆளுநரின் ஆட்சிக் குழு உறுப்பினர்களோடு நான்கு முதல் எட்டுப் பேர் வரை இந்தச் சட்ட மன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்களில் பாதிப்பேர் அதிகாரியல்லாதவர்கள் என்றாலும் ஆளுநரால் அமர்த்தப்படுகிறவர்கள். இவர்களைத் தவிர அரசத் தலைமை வழக்குரைஞரும் (அட்வகேட் ஜெனரல்) சட்டமன்ற உறுப்பினராக இருப்பார். இதுதான் சென்னை மாகாணத்தின் முதல் சட்ட மன்றம் என்று 160ஆம் ஆண்டு விழா எடுக்கலாம்.

1871 - தலைமை ஆளுநரும் வைசிராயுமான மேயோ பிரபு நிதி தொடர்பான நடுவணரசின் பிடியைக் கொஞ்சம் தளர்த்துகிறார். காவல், சிறை, கல்வி, பதிவு, நல்வாழ்வு, சாலைகள், குடியியல் கட்டடங்கள் ஆகிய துறைகளில் மாகாணங்களுக்கு நிபந்தனைகளுடன் அதிகாரமளிக்கப்படுகிறது.

1877 - வைசிராய் லிட்டன் பிரபு காலத்தில் நில வரி, சரக்குத் தீர்வை, முத்திரைகள், பொது நிர்வாகம், சட்ட-நீதித் துறை ஆகிய பொறுப்புகள் மாகாணங்ளுக்கு மாற்றப்படுகின்றன.

1882 - வைசிராய் ரிப்பன் பிரபு வருவாய் இனங்களை நடுவண், மாகாணம், இரண்டுக்கும் பங்கு என்று மூன்றாகப் பிரிக்கிறார். மாகாண அரசுகள் அப்போதும் நடுவணரசின் நிர்வாக முகவர்களாகவே இருந்தன. மாகாண நிதிநிலை அறிக்கைகள் நடுவண் நிதிநிலை அறிக்கையின் பகுதிகளாகவே கருதப்பட்டன. மாகாண சட்ட மன்றங்களில் ஒரு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதற்கு முன்பே நடுவணரசின் அனுமதி பெற வேண்டும். சட்டம் இயற்றிய பிறகும் நடுவணரசின் இசைவு பெற வேண்டும்.

1905 - வங்கம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. வங்கப் பிரிவினையை எதிர்த்துத் தேசிய இயக்கம் வீறுகொண்டெழுகிறது. கர்சான் பிரபு வைசிராய் பதவியிலிருந்து விலகி ஊர் திரும்புகிறார். மிண்டோ பிரபு வைசிராய் பொறுப்பேற்கிறார். மார்லி பிரபு இந்தியாவுக்கான பிரித்தானிய அமைச்சர் (இந்தியா மந்திரி) ஆகிறார்.

1906 - சுயராஜ்யம் எமது பிறப்புரிமை என்று காங்கிரஸ் முழங்குகிறது. திலகரின் இந்த முழக்கம் விடுதலைக்கானதன்று, பிரித்தானிய மேலாட்சியில் இந்தியருக்கு அதிகாரம் கோருவதே.

1909 - அதிகாரப் பரவலாக்கத்துக்கான மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் எனும் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு மத்திய சட்ட மன்றத்திலும் மாகாண சட்ட மன்றங்களிலும் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தொகை கூடுதலாக்கப்படுகிறது. ஆனால் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல் நடைபெறாது. நகராட்சிகள், மாவட்டக் கழகங்கள் சார்பாகச் சிலர், நிலவுரிமை கொண்டவர்கள், பல்கலைக்கழகப் பகராளர்கள்… இப்படிச் சிலருக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு. இறுதியாகப் பார்த்தால் மாகாணங்களின் குடுமி மத்திய அரசின் கையில்! மத்திய அரசின் குடுமி பிரித்தானிய வல்லரசின் கையில்!

1914 - 1918 - முதல் உலகப் போர்! படையியல் நோக்கிலும் பொருளியல் நோக்கிலும் பிரிட்டனுக்கு இந்தியாவின் தயவு பெரிதும் தேவைப்படுகிறது. இந்திய முதலாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகள் பெருகுகின்றன. காங்கிரசின் ஆண்டுப் பேரவைகளில் பிரித்தானியரின் போர் வெற்றிக்கு ஆதரவாகத் தீர்மானங்கள் இயற்றப்படுகின்றன.

1919 - போர் முடிந்த பின் எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகிப் போராட்டங்கள் வெடிக்கின்றன. இப்போது காந்தியார் தலைமை ஏற்கிறார். போராட்டங்களை அடக்க ரௌலத் சட்டம் இயற்றப்படுகிறது. ரௌலத் சட்டத்தை எதிர்க்கத் திரண்ட மக்களை டயர் சுட்டுக் குவித்த ஜாலியன்வாலாபாக் கொடுமை நிகழ்கிறது. இந்தப் பகைப்புலத்தில் 'இந்தியா மந்திரி'யாக இருந்த மாண்டேகு பிரபுவும், வைசிராயாக இருந்த செம்ஸ்போர்டும் சேர்ந்து பிரித்தானிய அரசுக்கு அறிக்கை கொடுக்கின்றனர். இதுதான் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை எனப்படுகிறது.

1920 - மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டம் இயற்றப்படுகிறது. தேர்தெடுக்கப்பட்ட பேராளர்களிடம் மாகாண அரசின் ஒருசில அதிகாரங்களை ஒப்படைப்பதுதான் இதில் புதிய செய்தி. ஆனால் நிதி, காவல் போன்ற முகன்மையான துறைகள் ஆளுநரால் அமர்த்தப்பட்டவர்கள் கையில் இருக்கும். இதற்குத்தான் இரட்டையாட்சி (Diarchy) என்று பெயர்!

1921 - மாகாணச் சட்ட மன்றத்தில் சற்றொப்ப 70 விழுக்காடு தேர்தல் வழி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 20 விழுக்காடு அதிகாரிகள். 10 விழுக்காடு ஆளுநரால் அமர்த்தம் செய்யப்படுவார்கள். தேர்தலில் வாக்குரிமை சொத்துள்ளவர்களுக்கு மட்டுமே! குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமான வரி அல்லது நகராட்சி வரி செலுத்துகிறவர்கள், சொந்தமாக வீடு வைத்திருப்பவர்கள், வீடு வாடகைக்கு விடுகிறவர்கள் ஆகியோர் மட்டுமே வாக்களிக்கலாம். இந்தியா முழுக்க வயது வந்தோரில் 8.8 விழுக்காடு மட்டுமே வாக்காளர்கள்.

மாகாணத் தன்னாட்சியையும் குடியாட்சியத்தையும் கேலிக்கூத்தாக்கும் மாண்டேகு-செம்ஸ்போர்டு திட்டப்படி நடைபெற்ற தேர்தலை காந்தியார் தலைமையிலான காங்கிரஸ் கட்சி புறக்கணித்தது. சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு போன்ற சில தலைவர்கள் தேர்தலில் பங்கேற்க விரும்பினார்கள். ஆனால் காங்கிரஸ் பெயரில் போட்டியிட காந்தியார் அனுமதிக்கவில்லை. அவர்கள் சுயராஜ்யக் கட்சி என்ற பெயரில் போட்டியிட நேரிட்டது. காந்தியாரின் தேர்தல் புறக்கணிப்பு சட்ட மன்றப் புறக்கணிப்பு அழைப்பை அன்றைய சென்னை மாகாணத்தில் பெரியார், இராஜாஜி உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களும் ஆதரித்தார்கள். காங்கிரஸ் புறக்கணித்த அந்தத் தேர்தலில்தான் சொத்துக்காரர்களின் வாக்குகளைப் பெற்று நீதிக்

கட்சி வெற்றி கண்டது.

1921ஆம் ஆண்டில் பிரித்தானியக் காலனி ஆட்சியாளர்கள் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவும் தங்கள் சமூக அடித்தளத்தை விரிவாக்கவும் அமைத்த மோசடியான மாகாணச் சட்ட மன்றத்துக்கும் இழிந்த இரட்டையாட்சிக்கும்தான் மு.க. ஸ்டாலின் நூற்றாண்டு கொண்டாடுகிறார். அன்றைய ஆண்டைகளின் சாதனையைக் கொண்டாட இன்றைய ஆண்டைகளை அழைத்து வந்துள்ளார்.

1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது மாகாண சுயாட்சிக்கான சட்டம் என்று காலனியாதிக்க ஆட்சியாளர்கள் சொல்லிக் கொண்டார்கள். “இல்லை, இது மாண்புமிகு நகராட்சிகளையே உருவாக்கியுள்ளது” என்று காந்தியார் சாடினார். ஆனால் 1937 தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டு வென்றது, நீதிக் கட்சி தோற்றுப் போனது. இராஜாஜி சென்னை மாகாணத் தலைமை அமைச்சர் ஆனார். 1939ஆம் ஆண்டு தங்களைக் கேட்காமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைக் கண்டித்து அந்த அமைச்சரவை பதவி விலகியது.

அந்த 1935 சட்டத்தை ஒட்டியே 1950ஆம் ஆண்டின் இந்திய அரசமைப்புச் சட்டமும் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் மாநிலங்களின் உரிமைகளை மெய்யாகவே உறுதி செய்கிறதா? இல்லையா? என்ற விவாதம் ஒருபுறமிருக்க, மாநிலத் தன்னாட்சி என்ற ஒரு வகையில் அது குறித்தான நம் பட்டறிவு என்ன? என்று பார்த்தாலே போதும்.

காலனியாதிக்க அரசு நுழைத்த இரட்டையாட்சி முறைதான் சாறத்தில் இன்றளவும் தொடர்கிறது என்று நாம் சொன்னால் திமுக தலைமையால் ஏற்க முடியாதுதான். ஆனால் இதையே அறிஞர் அண்ணா சொன்னால்?

1967 பொதுத்தேர்தலில் வென்று அண்ணா தலைமையிலான திமுக தமிழ்நாட்டில் ஆட்சியமைத்தது. சற்றொப்ப ஈராண்டு காலம் அண்ணா முதலமைச்சராக இருந்தார். மறைவதற்கு சற்றுமுன் 1969 சனவரியில் கடைசியாகத் தம்பிக்கு எழுதிய மடலில்

“இன்றைய அரசமைப்புச் சட்டம் கொல்லைப் புறமாகக் கொண்டுவரப்பட்ட ஓர் இரட்டை ஆட்சிதான்” என்று தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

1969 ஹோம்ரூல் (Homerule) ஏட்டின் பொங்கல் சிறப்பிதழில் வெளிவந்த அண்ணாவின் அந்த இறுதி மடலை திமுக தலைமையில் இருப்பவர்கள் படித்துப் பார்க்க வேண்டும்.

[”If by being in office, the DMK is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door, that would be a definite contribution indeed to the political world”

Dr. Anna, in his last essay “HAIL THE DAWN!” published in HOME RULE, Pongal Number 1969, pp.11-12.]


சட்ட மன்றத்துக்கு நூற்றாண்டு, சமூக நீதிக்கு நூற்றாண்டு என்றெல்லாம் வாய்ப்பந்தல் போடாமல், வெள்ளைக்காரன் கொண்டுவந்து தில்லிக்காரன் காத்து வரும் இரட்டையாட்சிக்கு நூற்றாண்டு என்று உண்மையைச் சொல்லிக் கொண்டாடியிருக்கலாம்! தில்லி வல்லரசியத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளவாவது பயன்பட்டிருக்கும்.

அடிமை மன்றத்துக்கு ஆண்டு நூறு கொண்டாட முடியுமா?

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# சமூகநீதியும் சாதி அரசியலும்

**தியாகு**





எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அஇஅதிமுக ஆட்சி 2021 பிப்ரவரி 26ஆம் நாள் தமிழ்நாட்டுச் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரின் கடைசி நாளில் கடைசி அமர்வில் கடைசி நேரத்தில் இயற்றிய சட்டம்தான் வன்னியர் சமுதாய மக்களுக்கு 10.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் (தமிழக அரசு சட்டம் 8/2021).

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பிற சமுதாயத்தினர் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்; இன்றளவும் தெரிவித்து வருகின்றனர். எவ்விதக் கருத்தாய்வுமின்றி, எல்லாத் தரப்புகளுடனும், குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பார் (மிபிவ = MBC) என்ற தொகுப்பிலடங்கிய பிற சமுதாயங்களுடன் எவ்விதக் கலந்தாய்வுமின்றி அவசரகோலமாய் அள்ளித் தெளித்த இந்த வன்னியர் தனி இடஒதுக்கீட்டுச் சட்டத்தை எதிர்த்து சீர்மரபினர் (டிஎன்டி) உள்ளிட்ட மிகவும் பிற்பட்ட சமுதாயத்தினர் கொடுத்த குரலுக்குப் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி செவிகொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு பொய்யாகி விட்டது.

அண்ணா வழி, கலைஞர் வழி என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்த மு.க. ஸ்டாலின் எடப்பாடி

வழியில் பயணம் செய்து, வன்னியர் தனி இடஒதுக்கீட்டை உடனே செயலாக்கிட அரசாணை பிறப்பித்துள்ளார். வன்னியருக்கு 10.5, சீர்மரபினருக்கு 7.5, மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் எஞ்சிய சமுதாயங்களுக்கு 2.5 என்று பாகப் பிரிவினை செய்யப்பட்டுள்ளது. எடப்பாடியாரைப் போலவே கோபாலபுரத்து இளையவரும் இந்த அரசாணையைப் பிறப்பிக்குமுன் எவ்விதக் கருத்தாய்வும் கலந்தாய்வும் செய்யவில்லை.

வன்னியருக்குத் தனி இடஒதுக்கீடு என்பது மருத்துவர் இராமதாசு தலைமையிலான வன்னியர் சங்கம் எழுப்பிய கோரிக்கையாகும். இதற்காக அவர்கள் நீண்ட போராட்டங்களும் நடத்தியுள்ளனர். சாலை மறியலும் துப்பாக்கிச் சூடும் உயிரிழப்புமாக இந்தப் போராட்டங்கள் தீவிர வடிவெடுத்தன. ஒரு பக்கவிளைவாக சாதியம் தலைதூக்கி தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளும் நிகழ்ந்தன. விழுப்புரம் நிகழ்ச்சிகளை மறக்க முடியாதே!

பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டின் பலன்கள் அம்மக்களுக்குள் மிகவும் பிற்படுத்தப்பட்டோரைச் சென்றடையவில்லை என்ற பட்டறிவின் அடிப்படையில் அந்தப் போராட்டத்துக்கு ஒரு நியாயம் இருந்தது. எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்தப் போராட்டம் நடந்தது. அவர் அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசினார். ஒவ்வொரு சமுதாயத்தினரும் தமிழ்நாட்டு மக்கள்தொகையில் என்ன விழுக்காடு என்பதைக் கூட உறுதியாகக் கணிக்க முடியாமல் போயிற்று.

1989ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான திமுக ஆட்சியில் வன்னியர், சீர்மரபினர் உட்பட 108 சாதிகளை இணைத்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (மிபிவ = MBC) என்ற தொகுப்பு உருவாக்கப்பட்டது. இது ஒரு நல்ல ஏற்பாடு என்று அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்ட போதிலும் மரு. இராமதாசு ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து வன்னியர்களுக்கான தனி இடஒதுக்கீட்டையே கோரி வந்தார்.

இந்திய அரசமைப்பு ஒரு சாதியை மட்டும் தனி அலகாய்க் கொண்டு இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யவில்லை. சமூகவகையிலும் கல்விவகையிலும் பிற்பட்ட வகுப்புகள் (SOCIALLY AND EDUCATIONALLY BACKWARD CLASSES - SEBC) என்பதே அரசமைப்பு குறிப்பிடும் வரையறை. அட்டவணைச் சாதிகள் (SC), அட்டவணைப் பழங்குடிகள் (ST) தவிர. ஏனைய பிற்பட்ட வகுப்புகள்

(OBC) என்ற தொகுப்புகள் மட்டுமே சட்டப்படி செல்லும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஏனைய பிற்பட்ட வகுப்புகளைத்தான் பிற்பட்ட வகுப்புகள் (BC) என்கிறோம். அவர்களுக்குள் மிகவும் பிற்பட்ட வகுப்புகள் (MBC) என்ற புதிய தொகுப்பைச் செய்துள்ளோம். இவையலாமல் சாதியின் பேரில் வன்னியர் என்ற புதிய தொகுப்பை நுழைப்பது சட்டப்படி செல்லாது. இடஒதுக்கீடு சற்றே சிறப்பாகச் செயல்படும் கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் தொகுப்புமுறை இடஒதுக்கீடு வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒற்றைச் சாதியை இடஒதுக்கீட்டுக்குரிய அலகாகக் கருதும் நடைமுறை எங்கும் இல்லை, சட்டப்படி இருக்கவும் முடியாது.

சட்டம் ஒருபுறம் இருக்க, சாதிக்கு சாதி தனித்தனியே இட ஒதுக்கீடு என்பது சாதி அரசியலுக்கு உரமூட்டும், மக்கள் ஒற்றுமைக்கு உலைவைக்கும். தமிழ்த் தேசிய ஓர்மையைச் சிதைக்கும். சமூகநீதிப் போராளியாகக் களத்துக்கு வந்த மரு. இராமதாசு சந்தர்ப்பவாதத்தில் ஊறிய சாதி அரசியல்வாதியாக, கூட்டணி பேர வணிகராகச் சீரழிந்து போனது நமக்கு ஓர் எச்சரிக்கையாகப் பயன்பட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான 50 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காட்டை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு வழங்குவது என்ற ஏற்பாட்டை முதலில் குறைகூறிய மருத்துவர் இராமதாசு பிறகு அதை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, அதற்கான பெருமைக்கு உரிமையும் கொண்டாடினார். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையிலிருக்கும் இந்த இட ஒதுக்கீட்டினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன? நிறைகுறைகள் என்ன? பயனாளிகளும் பயன்பெறாதாரும் யார்? இந்த வினாக்களுக்கு விடைகாணப் புறஞ்சார் ஆய்வுகள் ஏதும் நடைபெறவில்லை.

இடைக்காலத்தில் சீர்மரபினராகிய டி.என்.டி. சமுதாயத்தை டி.என்.சி. என்று அரசு மாற்றிய செயல் அம்மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. டி.என்.டி. (DNT) என்றால் Denotified Tribes அதாவது பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் குற்றப் பரம்பரை (Criminal Tribes) என்று அறிவிக்கை செய்யப்பட்டு, நீண்ட போராட்டங்களுக்குப் பின் அந்த அறிவிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள். இதைத்தான் சீர்மரபினர் என்று மங்கல வழக்கில் குறிக்கிறோம். இந்த அறிவிக்கை நீக்கம் அவர்களைக் குற்றப் பரம்பரையிலிருந்து நீக்குவதே தவிர பழங்குடித்

தகுநிலையிலிருந்து நீக்குவதன்று. டி.என்.சி. (DNC) என்றால் Denotified Communities. அறிவிக்கை நீக்கம் செய்யப்பட்ட சமுதாயங்கள் என்று பொருள். இப்போதும் சீர்மரபினர் என்றே சொல்லப்பட்டாலும் பழங்குடித் தகுநிலை பறிபோய் விடுகிறது. மாநில அரசு இந்தப் பிழையை ஏற்றுக் கொண்டாலும் சரிசெய்ய மறுக்கிறது. பழங்குடி மேம்பாட்டுக்கான திட்டங்கள் சீர்மரபினருக்குப் பொருந்தாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

மிபிவ (MBC) தொகுப்பில் இடம்பெற்றிருந்த சீர்மரபினர் வன்னியர் தனி இடஒதுக்கீட்டுச் சட்டத்தையும் அரசாணையையும் வன்மையாக எதிர்த்து வருகின்றனர். மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏனைய வகுப்புகளான (வண்ணார், நாவிதர் போன்ற) சிறுசிறு சமுதாயங்களின் நிலை இன்னுங்கூட மோசமானது. அரசியல், பொருளியல் வலிமை இல்லாத இந்த மக்களை அலட்சியம் செய்வதில் அதிமுக, திமுக, பாமக ஒன்றுபட்டுள்ளன. காங்கிரஸ், பாசக பற்றிச் சொல்லவே வேண்டாம் (குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் காவிக் கொக்குகள் மூக்கை நீட்டினாலும் வியப்பில்லை). இந்தப் பின்னணியில்… போராடும் சமூகநீதி ஆற்றல்கள் உறுதியாக இம்மக்களின் பக்கம் நிற்க வேண்டும். தமிழ்த் தேசியத்தின் பெயராலோ இடது கொள்கையின் பெயராலோ இம்மக்களின் போராட்டத்தைக் கண்டுகொள்ள மறுப்பது அறிந்தோ அறியாமலோ சாதி அரசியலுக்கு ஊட்டமளிப்பதாகி விடும்.

சாதிக்கு சாதி தனி இடஒதுக்கீடு வழங்கினால் சிறு சாதிகளின் நிலை என்னவாகும்? அவர்கள் இடஒதுக்கீட்டால் பயன்பெறுவது என்பதே முயற்கொம்பு ஆகிப்போகும்.

தமிழ்ச் சமூகத்தின் சாதியியைபு (மொத்த மக்கள்தொகையில் சாதிகளின் தகவளவு) குறித்து எந்தக் கணக்கெடுப்பும் நடைபெறவில்லை. விடுமை பெற்ற இந்தியாவில் ஒருமுறை கூட சாதிவாரிக் கணக்கெடுப்பு நடைபெறவில்லை. இந்நிலையில் ஒரு சாதிக்கு மட்டும் அந்தச் சாதியினரின் மக்கள்தொகையை மிகையாகச் சொல்லித் தனி இடஒதுக்கீடு கோரப்படுவதும், அந்தக் கோரிக்கை ஏற்கப்படுவதும் மற்றச் சாதிகளும் இதேபோன்ற கோரிக்கை எழுப்பும் நிலைக்கு இட்டுச் செல்லும். ஒவ்வொரு சாதித் தலைமையும் தத்தமது சாதியின் மக்கள்தொகையை மிகைப்படுத்திக் காட்டி அதற்கேற்ப இடஒதுக்கீடு கோருவதற்கும் வழிகோலும்.

வன்னியர்க்கு மட்டுமன்று, எந்த ஒரு சாதிக்கும் தனி இட ஒதுக்கீடு என்ற கோரிக்கையை நாம் ஏற்பதற்கில்லை.

அட்டவணைச் சாதிகளில் அருந்தியர்க்கு 'உள் ஒதுக்கீடு' வழங்கப்பட்டது மெய்தான். ஆனால் அது ஒரு சாதிக்கான தனி இடஒதுக்கீடு அன்று. சக்கிலியர், தோட்டி உள்ளிட்ட பல சாதிகளின் தொகுப்பே அருந்ததியர். இரண்டாவதாக அது முன்னுரிமை அளித்தல்தானே தவிர, தனி ஒதுக்கீடு அன்று. அதாவது ஓர் இடத்துக்கு 3 விழுக்காட்டை நிரப்ப அருந்ததியரிலிருந்து போதிய ஆட்கள் இல்லாத போது பிற அட்டவணச் சாதிகளைச் சேர்ந்தவர்களைக் கொண்டு அந்த இடத்தை நிரப்பிக் கொள்ளலாம். வேறோர் இடத்துக்கு மற்ற அட்டவணைச் சாதியரிலிருந்து போதிய ஆட்கள் இல்லாத போது அருந்தியரைக் கொண்டு அந்த இடத்தை நிரப்பிக் கொள்ளலாம். வன்னியர்க்கான தனி இடஒதுக்கீட்டில் வன்னியருக்குரிய இடத்தை வேறு யாருக்கும் தரலாகாது. அருந்தியர்க்கு ஒதுக்கீட்டு முன்னுரிமை வழங்குமுன் ஜனார்த்தனன் குழு கள ஆய்வு செய்து அறிக்கை தந்தது. வன்னியர்கள் தொடர்பாக இப்படி எந்தக் கள ஆய்வும் நடக்கவில்லை.

எடப்பாடியும் மு.க. ஸ்டாலினும் ஏதாவது சான்று காட்டுவதாக இருந்தால் அது அம்பாசங்கர் ஆணையத்தின் அறிக்கைதான். 1985ஆம் ஆண்டு தமிழக அரசு, அம்பாசங்கர் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையத்தில் 21 உறுப்பினர்கள் இடம்பெற்றனர். அந்த ஆணையத்தின் தலைவர் அம்பாசங்கர் ஆணையத்தின் உண்மையான அறிக்கையை மறைத்து தன் சொந்த அறிக்கையையே ஆணைய அறிக்கையாகக் கொடுத்து விட்டார் என்று பெரும்பாலான ஆணைய உறுப்பினர்கள் -- 14 பேர் - கையொப்பமிட்டு அரசுக்கு அறிக்கை அளித்தனர். அதனால்தான் தமிழக அரசு அம்பாசங்கர் கொடுத்த அறிக்கையைக் கிடப்பில் போட்டுவிட்டது. இந்த அம்பாசங்கர் வன்னிய சாதிச் சார்புடன் தற்போக்காக அளித்த அறிக்கையை மறுத்த பெரும்பான்மை உறுப்பினர்களில் ஜி. விசுவநாதன், விவி சாமிநாதன், அன்பில் தர்மலிங்கம், சௌந்தரம் கைலாசம், குமரி அனந்தன், குழ. செல்லையா போன்றவர்களும் அடங்குவர். அரசு சார்பாக அம்பாசங்கர் ஆணையத்தில் பணியாற்றிய அதிகாரிகளும் அம்பாசங்கர் தானாகக் கொடுத்த அறிக்கையை ஏற்கவில்லை. அம்பாசங்கர் அறிக்கையை ஏற்க மறுத்த முகன்மையான

ஆணைய உறுப்பினர்களில் ஒருவரே இப்போதைய அரசின் முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எப்படிப் பார்த்தாலும் 85ஆம் ஆண்டு அம்பாசங்கர் கொடுத்த தரவுகள் 89ஆம் ஆண்டு செய்யப்பட்ட மிபிவ (MBC) ஒதுக்கீட்டின் பலன்களை மதிப்பாய்வு செய்ய உதவாது. 1969ஆம் ஆண்டு சட்டநாதன் ஆணையம் கொடுத்த அறிக்கை காட்டிய நிலமைக்கும் 1985ஆம் ஆண்டு அம்பாசங்கர் காட்டிய நிலைமைக்கும் பாரிய வேறுபாடு உண்டென்றால் 1985க்கும் இப்போதைய நிலைமைக்குமான வேறுபாட்டைக் கருதாமல் விடுவது எப்படிச் சரியாக இருக்கும்?

தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு முறைமையின் செயல்பாடு குறித்து முழுமையான புறஞ்சார் மீளாய்வு தேவை. சாதிவாரிக் கணக்கெடுப்பும் தேவை. அதற்கிடையில் அண்மைக் காலம் வரை (எடப்பாடி அரசின் சட்டத்துக்கும் ஸ்டாலின் அரசின் ஆணைக்கும் முன்பு) இருந்த ஏற்பாடே தொடர வேண்டும். உரிய கருத்தாய்வும் கலந்தாய்வும் இல்லாமல் இந்த ஏற்பாட்டை மாற்றக் கூடாது. வாக்கு வங்கி அரசியலுக்காக இராமதாசின் தூண்டுதலால் எடப்பாடி செய்த குழப்படிக்கு ஸ்டாலின் முட்டுக் கொடுக்கக் கூடாது.

ஒருபுறம் தமிழ்நாட்டின் சமூக நீதி மரபு என்று பேசிக் கொண்டே, மறுபுறம், இருக்கிற முறைமைக்கும் பேராபத்து வந்திருப்பதைக் கண்டும் காணாமலிருப்பது தவறு! இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஏனைய பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு என்ற இந்திய அரசின் அறிவிப்பு தமிழ்நாட்டின் முறைமைப்படி 50 விழுக்காடு இல்லை என்பதையே குறிக்கும். இது பெரிய வெற்றி என்று சொல்வதும், இந்த வெற்றிக்கு யார் காரணம் என்று சண்டையிட்டுக் கொள்வதும் மடமையின் பாற்பட்டதே.

பொருளியலில் நலிந்த பிரிவினர்க்கான (EWS) 10 விழுக்காடும் வரப் போகிறதாம்! இது சமூகநீதிக்கு வந்துள்ள பெருங்கேடு. முற்பட்ட வகுப்பினர்க்கு இடஒதுக்கீடு என்பதை ஏற்றுக் கொள்வது இடஒதுக்கீட்டின் உயிர்நாடியையே ஒடுங்கச்செய்து விடும். நாடாளுமன்றத்தில் இதை எதிர்த்து முழங்கிய தமிழ்நாட்டுக் கட்சிகள் இப்போது மௌனம் காப்பது ஏன்?

திமுகவின் நீட் எதிர்ப்புச் சூளுரை செங்கோட்டைச் சுவரில் மோதி நொறுங்கிக் கொண்டிருப்பதைக் காண வருத்தமாக உள்ளது. மிகப் பெரும்பாலான மக்கள் விரும்பிக் கேட்கிற ஒன்றைச் செய்யக் கூட தில்லி சுல்தான்கள் இடந்தர மாட்டார்கள் என்றால் இது என்ன

குடியாட்சியம்? இந்தக் கேள்வியை திமுக கேட்க வேண்டும்.

இந்தியா இருக்கும் வரை இந்தி திணிக்கப்படும் என்பது போல் இந்தியா இருக்கும் வரை சமூகநீதி குறுக்கப்படும், மறுக்கப்படும் என்பதைத் தமிழர்கள் அனைவரும் உணர்வது எப்போது?

இடஒதுக்கீட்டில் யாருக்கு எவ்வளவு? என்ற பூசல் நடந்து கொண்டிருக்கும் போதே, புதுத் தாராளிய முதலிய வளர்ச்சி இடங்களையே இல்லாமற்செய்து கொண்டிருக்கிறது. அரசும் பொதுத் துறையுமே சமூகநீதி சார்ந்த இடஒதுக்கீட்டை மறுக்கும் போக்கில் இருக்கும் போது மோதியின் அரசும், அதனைத் தாங்கியும் அதனால் தாங்கப்பட்டும் நிற்கும் அம்பானிகளும் அதானிகளுமா இடஒதுக்கீடு தரப் போகின்றார்கள்? உலக மயமும் தனியார் மயமும் தாராள மயமும் வளர்கின்றன என்றால் சமூகநீதிமயம் சுருங்கி அநீதிமயம் விரிகிறது என்று பொருள்.

வணிகப்படுத்தலையும் மையப்படுத்தலையும் வகுப்புவாதப்படுத்தலையும் (commercialization, centralization and communalization) அச்சாணிகளாகக் கொண்ட புதுத் தாராளிய இந்துத்துவக் கல்விக் கொள்கையின் படையெடுப்பு தொடங்கி விட்டது. 'சமூகநீதிக் காவலர்' விருது தாங்கிய ஐயாமார்கள் இந்தப் படையெடுப்புக்கு எதிராகத் தங்கள் சமுதாய மக்களையாவது அணிதிரட்டிப் போராடுவார்களா?

சமூகநீதிக்கு இடஒதுக்கீட்டின் இன்றியமையாமையை என்றென்றும் வலியுறுத்தும் போதே சமூகநீதி என்றாலே இடஒதுக்கீடுதான் என்ற கிட்டப்பார்வை குறித்து எச்சரிக்கவும் வேண்டும்.

பொதுவாகவே இடஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மோசமான பக்கவிளைவுகளில் ஒன்று சாதிவழி அணிதிரட்டலாகும். இடஒதுக்கீட்டை ஏனைய சமூகநீதிக் கூறுகளிலிருந்து பிரித்தெடுத்து அதற்கு மட்டுமே மிகையழுத்தம் கொடுப்பது சாதியொழிப்புக்கு அடித்தளமாக இருக்க வேண்டிய சமூகநீதிக் கோரிக்கையை சாதிக் காப்புக்கு அரணாக்கி விடும் ஆபத்து உள்ளது. பக்க விளைவுகளைக் களைந்து முதன்மை விளைவை நோக்கிப் போராட்டத்தை முன்னெடுக்க சாதி அரசியலும் பதவி அரசியலும் உதவ மாட்டா.

சமூகநீதி சார்ந்த தமிழ்த் தேசியம் இடஒதுக்கீட்டுக்காக விட்டுக்கொடாமல் போராடும் போதே சாதியத்தைக் கட்டோடு எதிர்த்து நிற்கும். தேசியத்தின் பெயரால் இனவாதமும், சமூகநீதியின் பெயரால் சாதியமும் எம் குறிக்கோளுக்குப் பகை!

## மூன்றாவது கோவிட் அலையை வரவேற்கும் பாஜக:

**சமந்தா**

இரண்டு கோவிட் அலைகளால் இந்திய பொருளாதாரமும், மக்களின் வாழ்வாதாரமும் பெரும் சேதத்தை சந்தித்தப் பிறகும் தொற்று தடுப்பு, பொருளாதார மீட்பு நடவடிக்கைகளில் பாஜக அரசு பெரும் அலட்சியத்தையே காட்டி வருகிறது.இந்தியாவில் இதுவரை 4 விழுக்காட்டினருக்கு மட்டுமே ஒரு முறையேனும் கோவிட் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது.பெருவாரியானோருக்கு கோவிட் தடுப்பு மருந்துகளை செலுத்துவதன் மூலமே பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவில் மீளமுடியும் என மத்திய அரசு தரப்பில் இருந்து கருத்து கூறப்பட்ட போதிலும், அதற்கான நடவடிக்கைகள் வேகமில்லாது வெகு நிதானமாகவே செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசே 75 விழுக்காடு தடுப்பு மருந்துகளை பெற்று மாநிலங்களுக்கு வழங்கும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இன்னும் பெரும்பாலான மாநிலங்களில் கோவிட் தடுப்பு மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு காணப்படுகிறது.

பெருந்தொற்று காலத்தில் மருந்து பொருட்கள்,மருத்துவ உபகரணங்கள் மீதான வரியை நீக்க வேண்டியது ஒரு மக்கள் நல அரசின் கடமை. மருந்து பொருட்களின் மீதான சரக்கு சேவை வரியை முற்றிலுமாக நீக்கவேண்டும் என எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோரிக்கைகளை முன் வைத்த போதும் பாஜக அரசு அவற்றின் மீதான சரக்கு சேவை வரிகளை முற்றிலுமாக நீக்கவில்லை. வைரஸ் தடுப்பு மருந்து ரெம்டெசிவிர், ஹெப்பரின், ஆக்ஸிஜன்,ஆக்சிஜன் செறிவூட்டிகள், கிருமி நீக்கிகள் மீது முன்னர் விதித்துள்ள 12 விழுக்காடு வரியை வெகு தாமதமாக ஜூன் மாதத்தில் தான் 5 விழுக்காடாக குறைத்துள்ளது. பாஜக அரசு ‘ஏழை பாழைகளான’ வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீது தான் கூடுதல் அக்கறை செலுத்தி வருகிறது. மாற்று முதலீட்டு நிதிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீதான வரியைக் குறைப்பதற்கான வழிகளை மத்திய அரசு மதிப்பீடு செய்து வருகிறது!.

இந்தியத் தரமதிப்பீட்டு ஆய்வு நிறுவனமான இன்ட்-ரா இல்லங்களின் மீதான வரிச் சுமை, குறிப்பாக மறைமுகவரிச் சுமையானது உள்நாட்டு நுகர்வின் மீட்டெடுப்பை தாமதப்படுத்தும் என்று எச்சரித்துள்ளது. எரிபொருட்களின் மீதான வரி உயர்வு, அதிகரித்து வரும் மறைமுக வரிகள் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. 2009-10 ஆம்

ஆண்டில் இல்லங்களின் மீதான மொத்த வரிச்சுமையின் பங்கு 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது. இதற்கு பெரும்பாலும் எரிபொருள் மீதான கூடுதல் கலால் வரி, கார்ப்பரேட் வரி குறைப்பு ஆகியவையே காரணமாக இருந்துள்ளது. இல்லங்களின் மீதான வரிச்சுமை அவற்றின் வரவு செலவுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துள்ளது. வேலையிழப்பு, ஊதியக்குறைவு, தொற்று நோய் தடுப்பிற்கான கூடுதல் மருத்துவ செலவுகள் இல்லங்களை இரட்டைச் சுமையாக அழுத்துவதாகவும், உண்மையான ஊதிய வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரிவானது நுகர்வு, வேண்டலின் மேம்பாட்டையும் குறைக்கக்கூடும் என்றும் எச்சரித்துள்ளது. மேலும் 2,000 நிதி அல்லாத நிறுவனங்களில் ஊதிய வளர்ச்சியை பகுப்பாய்வு செய்ததில், 60 விழுக்காடு பெருநிறுவனங்கள் தங்களது பணியாளர் செலவினங்களை 2021ல் குறைத்துள்ளதாக கண்டறிந்துள்ளது.

2020-21 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நேர்முக வரி வருவாயின் பங்கு 4.79 விழுக்காடு குறைந்துள்ளது, மறைமுக வரி வருவாயின் பங்கு 5.48 விழுக்காடு அதிகரித்துள்ளது.

மாநிலங்களின் வரி பெறும் உரிமை, நிதி இறையாண்மையை பறித்து அவற்றைக் கடனில் தத்தளிக்கவிட்டுள்ள சரக்கு சேவை அறிமுகப்படுத்தப்பட்டு ஜூலை 1, 2021டன் 4 வருடங்கள் ஆகிவிட்டது. 2022 ஆம் ஆண்டு வரை ஐந்து வருடங்களுக்கு மாநிலங்களுக்கு 14 விழுக்காடு வரி வருவாய் உறுதியளிக்கப்படும் என உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. ஆனால் இழப்பீட்டுத்தொகையை வாக்குறுதியின் படி சரியாக வழங்கவில்லை. சரக்கு சேவை வரியின் மூலம் மாநிலங்களின் வரி வருவாயில் வளர்ச்சி ஏற்படாத போதும்,இழப்பீட்டுத் தொகையை 2022க்கு மேல் நீட்டிக்க முடியாது எனக் கை விரித்துள்ளது பாஜக அரசு.

இந்தியாவின் பொருளாதார வெளியில் சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) ஒரு மைல்கல்லாக இருந்து வருகிறது என்றும், வெளிப்படைத்தன்மையுடனும், இணக்கத்துடனும் ஒட்டுமொத்த வசூலை கணிசமாக அதிகரித்துள்ள அதே வேளையில், சரக்கு சேவை வரி சாதாரண மனிதர்கள் மீதான வரிகளின் எண்ணிக்கையையும், ஒட்டுமொத்த வரிச்சுமையையும் குறைத்துள்ளதாக புகழ்பாடுகிறார் நரேந்திர மோடி.எப்பேர்ப்பட்ட பச்சைப் பொய் இது. ஜி.எஸ்.டியால் எண்ணற்ற சிறு குறு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. மாநிலங்களின் இறையாண்மை முழுமையாக அழித்துள்ளது. பெட்ரோல், டீசல் ஆகிய பொருட்கள் இன்னும் சரக்கு சேவை வரிமுறைக்குள்

கொண்டுவரப்படவில்லை, பாஜக அரசு பெட்ரோல், டீசலில் 2020-21இல் ரூபாய் 3 லட்சத்து 60 ஆயிரம் கோடியை கலால் வரியாக பெற்றுள்ளது. கூடுதல் வரிகளின் பங்கை அதிகரிப்பதன் மூலம் மாநிலங்களின் வரிவருவாய் பங்கைக் குறைத்து சதி செய்கிறது. கோவிட் மருந்துகளுக்குக் கூட வரி விலக்கம் அளிக்கவில்லை. சரக்கு சேவை வரிக்குள்ளே ஒரு சுரண்டல், சரக்கு சேவை வரிக்கு வெளியே ஒரு சுரண்டல் என இரண்டு வகையிலும் எளிய மக்களை வதைத்து வருகிறது பாஜக அரசு.

ஜனநாயகத்திற்கு முற்றிலும் புறம்பான முறையில் நிதி வருவாயை பெரிதும் மையப்படுத்தி மாநிலங்களை அதிகாரமற்ற கைப்பாவைகளாக்கும் ஒடுக்கும் முறை ஆயுதமாகத் தான் சரக்கு சேவை வரி முறை செயல்படுத்தப்படுகிறது. இந்திய ஒன்றியத்தில் பெயரளவிற்கேனும் கூறப்படும் கூட்டாட்சிக் கூட்டுறவு நடைமுறைக்கான குறுகிய வழியையும் சரக்கு சேவை வரி.முற்றிலும் அடைத்துவிட்டது.

கோவிட் தொற்றுநோய் வேலை சந்தையில் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்தி வருவதால், நாட்டில் 40 விழுக்காடு ஊழியர்களின் ஊதியம் குறைந்துள்ளதாக கிராண்ட் தோர்ன்டன் கணக்கெடுப்பு காட்டுகிறது.

அமைப்புசார் துறை மட்டுமே 2020-21ல் 18 மில்லியன் வேலைகளை இழந்துள்ளது. சென்ற ஆண்டு கோவிட் தொற்று தாக்கம் ஆரம்பித்ததிலிருந்து இந்தியாவில் 97 விழுக்காடு குடும்பங்களின் வருவாய் சரிவடைந்துள்ளது.கரோனா இரண்டாவது அலையால் மே மாதத்தில் வேலையின்மை விகிதம் 12 விழுக்காடாக உயர்ந்துள்ளது, நாடு முழுவதும் ஒரு கோடி பேர் வேலையிழந்துள்ளனர் என இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது.

கோவிட் தொற்றுநோயின் இரண்டாவது அலையால் நடப்பு நிதியாண்டின் தொடக்கத்திலிருந்து மாநில அளவில் இந்தியாவெங்கும் பொது முடக்கம் நடமுறைபடுத்தப்பட்டதால் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும், மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. பணவீக்கம் வேண்டலால் தூண்டப்படவில்லை. வழங்கலில் உள்ள சிக்கல்களினாலே அதிகரித்துள்ளது. மொத்த பணவீக்கம் வரலாறு காணாத அளவிற்கு 12.94 விழுக்காடாக அதிகரித்துள்ளது. எரிபொருட்களின் விலை உயர்வே இதற்கு முக்கியக் காரணம்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால் தான் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை அதிகரித்துள்ளதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். உற்பத்தி அளவின் மீதான கட்டுப்பாட்டை நீக்குமாறு பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பில் கோரிக்கை விடுத்துள்ளார். இந்திய அரசின் பெட்ரோல், டீசல் மீதான கூடுதல் வரியினால் தான் பெட்ரோல், டீசல் விலை 100 ரூபாய்க்கு மேல் அதிகரித்துள்ளது என்ற உண்மையை மறைக்கவே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஏனெனில் கோவிட் தொற்று தாக்கம் ஏற்படுவதற்கு முன்பும் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 63.66 டாலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க வளர்ச்சியை நெருங்கக்கூடும் என்று முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் தெரிவித்துள்ளார். அரசால் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு சீர்திருத்தங்களாலும், மேலும் பல துறைகளை வெளிநாட்டு முதலீட்டிற்காக திறப்பதாலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை நெருங்கக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

"பெரும்பாலான நாடுகள் வேண்டலை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தின (ஆனால்) நாங்கள் விநியோக பக்கத்திலும் கவனம் செலுத்தினோம் ... கிட்டத்தட்ட ஒவ்வொரு வாரமும் புதிய துறைகள் திறக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத் துறை, பிபிஓ துறை(BPO- Business Process Outsourcing), புவியியல் துறை ஆகியவற்றில் நாங்கள் பெரிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம், மேலும் உலகளாவிய விநியோகச் சங்கிலியின் ஒரு பகுதியாக நாங்கள் இருக்க விரும்புவதால் பல துறைகளையும் திறக்க முடியும், "என்கிறார்.

ஆனால் இவ்வளவு பெருமிதம் கொள்ளும் விதத்திலா இந்தியாவின் பொருளாதார நிலை உள்ளது?. மற்ற நாடுகள் வேண்டலை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. பாஜக அரசு அதைத் தட்டிக் கழித்துவிட்டது. வழங்கலிலும் கவனம் செலுத்தியிருப்பதாகக் சஞ்சீவ் சன்யால் குறிப்பிடுகிறார். பிறகு எவ்வாறு பணவீக்கம் கட்டுப்படுத்த முடியா வண்ணம் அதிகரித்துள்ளது நிச்சயமாக வேண்டலின் அதிகரிப்பால் பணவீக்கம் அதிகரிக்கவில்லை. வழங்கல் சரியாக ஒழுங்குபடுத்தப்படாதால் தான் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

உலக அளவில் 2019-ம் ஆண்டைக் காட்டிலும் 2020-ல் நேரடி அந்நிய முதலீடுகள் 35 சதவீதம் குறைந்துள்ளது. அதேநேரம் இந்தியாவில் 2020-ம் ஆண்டில் நேரடி அந்நிய முதலீடு 2019-ம்ஆண்டைக் காட்டிலும் 27 சதவீதம்அதிகரித்துள்ளது. ஆனால் அந்நிய முதலீடுகள் பெருமளவில்

நிதி, எரிஆற்றல் துறையிலே செய்யப்படுகின்றன. உற்பத்திசார்ந்த துறைகளில் செய்யப்படுவதில்லை எனும் போது அந்நிய முதலீடுகளால் பொருளாதாரம் தானாகவே வளர்ச்சி பெறும் என்பது வெறும் பகல் கனவே.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் பங்கை 40 விழுக்காடாக உயர்த்தவேண்டும் என நிதின் கட்கரி வலியுறுத்துகிறார். ஆனால் கோவிட் பொருளாதார முடக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சிறு குறு மத்திய நிறுவனங்களை அழிவிலிருந்து மீட்காமல் எவ்வாறு அவற்றின் பொருளாதாரப் பங்களிப்பை அதிகரிக்க முடியும். கோவிட் முதல் அலையின் போது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட கடன் உதவித் திட்டங்களால் 10 விழுக்காட்டிற்கும் குறைவான குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களே பயனடைந்துள்ளன.

நடப்பு நிதியாண்டில் இரண்டு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஒரு காப்பீட்டு நிறுவனம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்குகளை தனியார் துறைக்கு விற்பதன் மூலம் ரூ .1.75 லட்சம் கோடியை திரட்டுவதாக பாஜக அரசு அறிவித்தது. தற்போது யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தை தனியார்மயமாக்க என்ஐடிஐ ஆயோக் பரிந்துரைத்துள்ளது. இரண்டு பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்குவதற்காக அமைச்சரவை செயலாளர் தலைமையிலான உயர்மட்ட குழு அதில் உள்ள நிர்வாக சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு கூட்டத்தை சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தக் கடனில் பொதுத்துறை வங்கிகளின் கடன் வழங்கும் பங்கு இதுவரை இல்லாத அளவிற்கு குறைந்துள்ளது. 2010ல் அளிக்கப்பட்ட மொத்தக்கடனில் 75.1 விழுக்காடாக இருந்த அரசு வங்கிகள் அளித்த கடனின் பங்கு 2021 மார்ச்சில் 56.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் மொத்தக் கடனில் தனியார் வங்கிகளின் பங்கு 2010ல் 17.4 விழுக்காடாக இருந்தது 2021 மார்ச்சில் 35.5 விழுக்காடாக அதிகரித்துள்ளது. பொதுத்துறை வங்கிகளின் மூலமே பெரும்பாலும் பெருமுதலாளிகளுக்கு 1000 கோடி ரூபாய்க்கு அதிகமான கடன் அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெரும் பகுதி வாராக்கடனாகவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கள்ளக் கூட்டு நிர்வாக முறைகேடுகளால் பொதுத்துறை வங்கிகளில் அதிகரித்துள்ள வாராக்கடன்களும், தனியார்மய ஊக்குவிப்புமே மொத்தக் கடன் சேவையில் இன்று பொதுத் துறை வங்கிகளின் பங்கு குறைவதற்கான முக்கியக் காரணமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமை வங்கியின் தரவுகளின் படி 2020-21 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 21 விழுக்காடாக இருந்து இல்லங்களின் நிதிச் சேமிப்பு இரண்டாம் காலாண்டில் 10.4 விழுக்காடாகக் குறைந்து, மூன்றாம் காலாண்டில் 8.2 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீட்டு (வங்கி) வைப்பு விகிதம் இரண்டாம் காலாண்டில் 7.7 விழுக்காடாக இருந்தது மூன்றாம் காலாண்டில் 3 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் டி சுப்பாராவ் பொருளாதாரத்தில் நாட்டின் உயர் வருவாய் பிரிவுகளுக்கும், குறைந்த வருவாய் கொண்ட குடும்பங்களுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகள் தீவிரமடைந்துள்ளது குறித்து கவலை தெரிவித்துள்ளார், இந்த போக்கு முன்னோக்கி செல்லும் வளர்ச்சி வாய்ப்புகளைத் தாக்கும் என்றும் எச்சரிக்கிறார்.பெரும்பான்மையான மக்கள் வேலைகளை இழந்து, வருவாய் குறைவை கண்ட போதும், சில பணக்காரர்களின் செல்வம் தொற்று காலத்தில் அதிகரித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

இந்திய பொருளாதாரத்தில் நுகர்வையும், வேண்டலையும் ஊக்குவிப்பதற்காக ரூ .3 லட்சம் கோடி நிதி ஊக்கத்தை மத்திய அரசு அளிக்கவேண்டும் என (சிஐஐ) கோரிக்கை விடுத்துள்ளது. இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் தலைவராக உள்ள டாடா ஸ்டீலின் தலைமை நிர்வாக இயக்குநர் டி.வி.நரேந்திரன், இந்த நிதித் தொகையிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக பணமாக அளிக்கவேண்டும் என்றும், மஹாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும், குறுகிய காலத்திற்கு சரக்கு சேவை வரிகளை குறைக்கவேண்டும், எரிபொருள் மீதான கலால் வரியைக் குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். ஓராண்டிற்கும் மேலாக தொடர்ந்து எதிர்க்கட்சியினர் இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். பாஜக அரசு செவி சாய்க்கவே இல்லை. ஆனால் இம்முறை இத்தகையக் கோரிக்கைகளை முன்வைத்தது எதிர்க் கட்சிகளோ, இடதுசாரிகளோ அல்ல. முதலாளித்துவக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளே, ஏனெனில் எந்த அளவுக்கு எளிய மக்களின் நுகர்வும், வேண்டலும் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை முதலாளிகளே உணர்ந்துள்ளனர் என்ற போதும் பாஜக அரசால் தன் முட்டாள் தனத்தைக் கைவிடமுடியவில்லை. செல்வத்தை உருவாக்குபவர்களாக பாஜக அரசால் போற்றப்படும்

அவர்களின் முதலிய நட்புக் குழுமத்திலிருந்து தான் இம்முறை கோரிக்கைகள் வந்துள்ளன.இம்முறையாவது செவி சாய்த்ததா பாஜக அரசு?. இல்லையே.

கோவிட் இரண்டாம் அலையால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுக்க 8 புதிய திட்டங்களை நிதியமைச்சர் அறிவித்துள்ளார். புதியதாக நிதித் தொகுப்பு அளிக்காமல் வெறும் கடன் உறுதியளிப்புத் திட்டங்களையே அறிவித்துள்ளார். மக்களின் வாங்கும் திறனையும், நுகர்வையும் மீட்டெடுக்கும் விதமாக புதிய வேலைவாய்ப்புகளோ, உதவித்தொகைகளோ எதுவும் அளிக்கப்படவில்லை. ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

<u>பணவீக்கம்:</u>

மொத்த விலை பணவீக்கம் 8 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 12.94 விழுக்காடாக உயர்ந்துள்ளது, பெட்ரோல், டீசல், உற்பத்திப் பொருட்களின் விலையுயர்வினாலே பண வீக்கம் இந்தளவு அதிகரித்துள்ளது. எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 37.61 விழுக்காடு உயர்ந்துள்ளது!. மே மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 6.3 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 4.52 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 1.92 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 11.98 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 9.39 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை. 15.16 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 30.84 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன்,இறைச்சியின் விலைவாசி 9.03 விழுக்காடு உயர்ந்துள்ளது.

<u>ஏப்ரலில் தொழில்துறை வளர்ச்சி:</u>

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி மார்ச்சில் மொத்த உற்பத்திக் குறியீடு 126.6ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றின் உற்பத்தி முறையே 108.0, 125.1 and 174.0ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. கோவிட் தொற்று பரவலை தடுக்க சென்ற ஆண்டு மார்ச் இறுதியிலிருந்து நாடு தழுவிய பொது முடக்கம் செயல்படுத்தப்பட்டதால் பெரும்பான்மையான நிறுவனங்கள் மூடப்பட்டன. அதனால்

இந்த ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்தி எந்தளவு உயர்வு/தாழ்வை அடைந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையான ஒப்பீட்டுத் தரவுகள் இல்லாததால் உற்பத்தியின் உயர்வு/ தாழ்வு விழுக்காடு கணக்கிடப்படவில்லை. முதன்மை பொருட்கள், மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், உற்பத்தி அளவுகள் முறையே 126.7, 82.4 , 137.9, 134.8 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்கள் நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அளவுகள் முறையே 112.4, 142.3ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

<u>மே மாத தொழில்துறை வளர்ச்சி:</u>

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு ஏப்ரலில் 16.8 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு மே மாதத்தின் உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 6.9 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 6.3 விழுக்காடு குறைந்துள்ளது, பெட்ரோலிய சுத்திகரிப்பு வழிப் பொருட்கள் உற்பத்தி 15.3 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 9.6 விழுக்காடு குறைந்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 22.5 விழுக்காடும், எஃகு உற்பத்தி 59.3 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 7.9 விழுக்காடும், மின்சார உற்பத்தி 7.3 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

2021ல் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை உலகளவில் 160 மில்லியனாக உயர்ந்துள்ளது - கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 8.4 மில்லியன் அதிகரித்துள்ளது. கோவிட் -19 இன் தாக்கத்தால் மேலும் பல லட்சக் கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ) அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலகளவில், அதிக நிகர மதிப்புள்ள தனிநபர்களின் தொகை 6.3 விழுக்காடு அதிகரித்துள்ளது. அவர்களின் செல்வம் 2020 ஆம் ஆண்டில் 7.6 விழுக்காடு அதிகரித்து, 80 டிரில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக நிகர மதிப்புள்ள நபர்களின் எண்ணிக்கை 5.9 விழுக்காடு அதிகரித்துள்ளது

கிரெடிட் சூசி அமைப்பு வெளியிடும் உலகளவிலான செல்வம் குறித்த அறிக்கையின் படி 2021ல் உலகளவில் முதல் ஒரு விழுக்காடு பெரும்பணக்காரர்கள் (56 மில்லியன்) உலகின் மொத்த

சொத்து/செல்வங்களில் 45 விழுக்காட்டை வைத்திருக்கிறார்கள். எஞ்சியுள்ள பங்கையே உலகின் 99 விழுக்காட்டினர் கொண்டுள்ளனர். உலகில் கிட்டத்தட்ட 300 கோடி மக்களிடம் செல்வமோ/சொத்துக்களே இல்லை என்றும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

அமெரிக்காவில் மூலதன ஆதாய வரிகளையும், பணக்கார வாரிசுகள் சொத்துக்களைப் பெறும்போது செலுத்தும் தொகையையும், பெரு நிறுவனங்களின் மீதான வரியையும் அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள் வரிஏய்ப்பு செய்வதற்காக பன்னாட்டு நிறுவனங்களாக செயல்பட்டு லாபங்களை வேறு நாடுகளுக்கு மாற்றுவது தொடர்ந்தால் பெரு நிறுவன வரி அதிகரிப்பால் அமெரிக்க அரசு கூடுதல் வரி வருவாய் பெறமுடியாது. பெரு நிறுவன வரி குறைவாக உள்ள வரி ஏய்ப்பு புகலிடங்களிலும் குறைந்த பட்ச வரியை கொண்டு வந்தால் தான் அமெரிக்க அரசின் வருவாய் குறைவது தடுக்கப்படும். இதற்கான முயற்சி ஜி7 கூட்டமைப்பால் மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி -7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் உலகளவில் குறைந்தபட்ச பெரு நிறுவன வரியை நடைமுறைபடுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஜோ பைடன் நிர்வாகம் குறைந்த பட்ச பெரு நிறுவன வரி வீதத்தை 21 விழுக்காடாக பரிந்துறைத்தபோதும் அது அனைவராலும் ஏற்கப்படாததால் இறுதியாக அனைவரது ஒப்புதலுடனும் 15 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. அயர்லாந்து போன்ற வரி ஏய்ப்பு புகலிடங்களில் பெரு நிறுவனங்கள் மீதான வரி 12.5 விழுக்காடாக இருக்கும் போது 15 விழுக்காடு என்பது மிகவும் குறைவே. ஐக்கிய முடியரசில் சொத்துவரி அதிகரிக்கப்பட்டுள்ளது. .அர்ஜென்டினா, பொலிவியா உள்ளிட்ட பிற நாடுகளில் கடந்த ஆண்டில் பணக்காரர்களிடம் இருந்து நிதிவளம் திரட்டப்பட்டுள்ளது.இவற்றுடன் ஒப்பிடும் போது இந்திய அரசின் பிற்போக்கு நிலையை என்னவென்று சொல்லுவது!. பிற்போக்குத்தனத்தில் ஊறிய பாஜக அரசின் ஆட்சியில் பெயரளவிற்கு கூட பெரு நிறுவன வரியை உயர்த்துவது பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு கூட வாய்ப்பற்ற நிலையே காணப்படுகிறது. நேரடி வரியைக் குறைத்து மறைமுகவரியை அதிகரித்து மக்களின் வாயிலும், வயிற்றில் அடித்துள்ளது பாஜக அரசு. நிதித் தொகுப்பு என்ற பெயரில் பெயருக்குதவாத கடன் உறுதியளிப்புத் திட்டங்களை அறிவித்து அதன் மூலம் பொருளாதாரம் மீட்சி அடையும் என்று பெருமிதமும் அடைகிறது. பாஜக அரசின் செயல்பாடுகள் கோவிட் மூன்றாவது அலையைத் தடுப்பதாக இல்லை வரவேற்பதாகவே உள்ளது.

# ஐயா சுபவீ, உங்களைக் கூண்டில்_ஏற்றுகிறோம்!

---- வே. பாரதி --




ஐயா சுபவீ அரண் செய் வலையொளிக்கு "சுப்ரமணிய சாமிகளின் திமிரைக் காலம் அடக்கும்" எனும் தலைப்பில் தந்த நேர்காணலில் தோழர் தியாகு குறித்துச் சொன்ன சொற்கள் வரலாற்றில் பதியப்பட வேண்டும். வரலாறு எப்போதும் தன் தீர்ப்பை வழங்கத் தவறாது. அப்படி வழங்கும் காலத்தில் சுபவீயின் சொற்கள் தொலைந்து போய் விடாதிருக்க இந்தப் பதிவு பேருதவி புரியும். வரலாறு சுபவீக்கும் ஒரு தீர்ப்பு வழங்கும். அதற்குத் தோழர் தியாகு குறித்த அவரின் சொற்களாலும் அவர் மதிப்பிடப்படுவார்.

ஐயா சுபவீயை இனி எங்கள் தலைமுறை கூண்டில் நிறுத்திக் கேள்வி கேட்கும். நான் கேட்கத் தொடங்குகிறேன். என்னுடைய 18 - 19ஆவது வயதில் தமிழ்த்தேசியம் நெருப்புப் பொறியாக என்னுள் விழுந்ததற்கு ஐயா சுபவீ ஒரு காரணம். அவரின் பேச்சும் எழுத்தும்தான் கூர்மையாக 'நான் இந்தியன் இல்லை, தமிழன்' என என்னை உணரச் செய்தது. கோட்பாட்டு வகுப்பின் மாணவனாக அமரும் முன்னமே தமிழின உணர்வு என்னுள் பீறிடச் செய்தது

சுபவீயின் தமிழ்!

ஒரு காலத்தில் ஒழுங்கீனத்தின் மொத்த உருவமாக இருந்த போதே உணர்ச்சி மேலீட்டில் பாரதியாக இருந்த நான் பகத்சிங் பாரதி ஆனேன். அதற்குக் காரணம் ஐயா சுபவீ எழுதிய 'பகத்சிங்கும் இந்திய அரசியலும்' நூல். தமிழ்த் தேசியத்தின் மீது புரிதல் வரும் முன்னால் இந்தியன் என்பதும் ஜெய்ஹிந்த் என்பதும் அருவருப்புக்கு உரியதாக என்னுள் ஆகிப் போனதற்கு காரணம் அன்றைய சுபவீயின் தமிழ்ச் சீற்றம்! இதனை விரித்து எழுத இது இடமில்லை. ஒன்றைத் தொடக்கத்திலேயே சொல்லி விட வேண்டும். தோழர் தியாகு பெயரைத் திரும்பப் திரும்பப் பயன்படுத்துவது இந்த மறுமொழிக்குத் தவிர்க்க இயலாத ஒன்று. தோழர் தியாகு மீதான சுபவீயின் கருத்துகளுக்கு தியாகுவின் கருத்துகளே அடிப்படை. தியாகுவின் கருத்துகள் அனைத்தும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் கருத்துகள்தாம். தியாகு மீது வைக்கப்படும் மறுப்புகள் அல்லது அவதூறுகள் இயக்கத்தின் மீதானவை என்றே பொருள் கொள்ள முடியும். தோழர் தியாகு எனக் குறிப்பிடுவதும் தியாகுவுக்காக வாதிடுவதும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தைக் குறிப்பிடுவதுதான்; இயக்கத்து நிலைப்பாடுகளுக்காக வாதிடுவதுதான்.

ஐயா சுபவீ அரண் செய் நேர்காணலில் தோழர் தியாகு குறித்து இரண்டு இடங்களில் இப்படிச் சொல்லியுள்ளார்:

1) சாதியைப் பாதுகாப்பதற்காகவே திராவிடத்தை எதிர்க்கிறார்கள். திராவிட எதிர்ப்பு என்பது மறைமுகமான பார்ப்பனிய ஆதரவு. அதனை யார் செய்தாலும்... நான் பார்க்கிறேன்... திராவிடம் குறித்து நான் எழுதிய செய்திகளுக்குத் தோழர் தியாகு மறுப்பெழுதிக் கொண்டிருக்கிறார். பாரதிய சனதாவின் வாட்ஸ்அப் குழுவில் தியாகுவுக்கு ஒரே பாராட்டு மழை. எப்படி மணியரசனை பாண்டே பாராட்டுகிறாரோ அப்படி தியாகுவைப் பாராட்டுகிறார்கள். ஹெச்.ராஜா, நாராயணன் திருப்பதி, பாண்டே, மணியரசன், சீமான், தியாகு ஒரே நேர்கோட்டில் நடக்கிறார்கள். திராவிடத்தை எதிர்ப்பதும் ஒழிப்பதும் மட்டுமே இவர்களின் நோக்கம். திராவிடத்தை உயர்த்திப் பிடிப்பது மட்டும்தான் நமக்கு நோக்கம். நமக்கு ஒன்றும் சிக்கலில்லை. எதிரிகளிடத்தில் போயிருப்பவர்கள் வெட்கப்பட வேண்டும்.

2) திராவிடத்தை எதிர்ப்பதே தங்களின் குறிக்கோள் என்றிருக்கிறார்கள். நேரடியாகவே தோழர்

தியாகுவிடத்திலே கேட்டேன். திராவிடத்தை எதிர்ப்பதில் நீங்கள் காட்டுகிற முனைப்பை பத்ம சேஷாத்ரி பாலபவனில் நடந்த அந்த நிகழ்வு பற்றி வாய் திறக்கவே இல்லையே, என்ன காரணம்? பாண்டே வருத்தப்படுவாரா? என்று கேட்டேன். சுப்ரமணிய சுவாமி, பாண்டே பத்ம சேஷாத்திரிக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள்... அவர்கள் அவர்களைப் பாதுகாப்பதில் கவனமாக இருக்கிறார்கள். இவர்கள் அவர்களுக்குத் துணை போகிறார்கள். அவர்களை விட இவர்கள்தான் தமிழினத்தின் எதிரிகளாக இருக்கிறார்கள் என நான் கருதுகிறேன்.

இந்த இரண்டு விடைகளுக்குரிய இரண்டு வினாக்களுமே தியாகுவைப் பற்றியதன்று. இரண்டிலுமே வலிந்து தியாகுவை இழுத்துக் கொள்கிறார். நல்லது. இவற்றுக்கான அடிப்படைகளைக் குறிப்பிட்டு விட்டு மறுப்புக்குச் செல்ல வேண்டும்.

Dravidian stock என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டதைத் தொடர்ந்து ஆதன் வலையொளி தோழர் தியாகுவை நேர்காணல் செய்கிறது. அவர்கள் அதற்கிட்ட தலைப்பு:

*நான் திராவிடர் அல்ல தமிழர்!* இந்த நேர்காணலைக் கண்ணுற்ற ஐயா சுபவீ Dravidian Professional Forum நடத்திய இணையக் கருத்தரங்கில் பெயர் குறிப்பிடாது பதிலளிக்கிறார். அதே உரை தணிக்கை செய்யப்பட்டு முரசொலியில் ஒரு கட்டுரையாக வெளிவருகிறது. அந்த உரைக்கு மறுப்பாகத் தோழர் தியாகு சுபவீக்கு திறந்த மடல் எழுதுகிறார். முதல் இரண்டு மடல்கள் வந்த நிலையில் சுபவீ நம் விவாதத்துக்குரிய நேர்காணலின் குறிப்பிட்ட பகுதியில் தியாகு குறித்து மேற்சொன்னவாறு குறிப்பிடுகிறார். இதன்பின் தோழர் தியாகுவின் மூன்றாவது திறந்த மடல் வெளியாயிற்று. அது அத்தோடு முற்றிற்று.

திராவிடர் அல்ல தமிழர் என்ற நேர்காணலிலும் சரி, ஐயா சுபவீக்கு எழுதிய இரண்டு மடல்களிலும் சரி, தோழர் தியாகு திராவிடத்தை எதிர்க்கவில்லை. அதாவது திராவிடக் கருத்தியலை எதிர்த்ததாக ஒன்றைக் கூட எவரும் காட்ட முடியாது. மொழியால், இனத்தால், நாட்டால் நான் தமிழர்தானே தவிர திராவிடர் அல்ல என்கிறார் தியாகு. இதையேதான் சுபவீயும் சொல்கிறார். மொழியால் இனத்தால் நாட்டால் நாம் தமிழர்கள்தான். திராவிடம் என்பது மொழியையோ இனத்தையோ குறிப்பதல்ல. இன்று அதுவொரு கருத்தியல். ஒரு சித்தாந்தம் (ideology) என்கிறார் சுபவீ. கருத்தரங்கிலும் சரி, முரசொலி கட்டுரையிலும் சரி

சுபவீ இதையேதான் சொல்கிறார். இந்த நிலைப்பாட்டில் சுபவீயும் தியாகுவும் ஒன்றுபட்டே நிற்கின்றனர். கருத்தியல் என்ற அடிப்படையிலும் தோழர் தியாகு திராவிடத்தை எதிர்க்கவில்லை; எதிர்த்ததும் இல்லை. தமிழ்த் தேசியத்தின் உருத்திரிந்த வடிவமே திராவிடம். தமிழ்த் தேசியத்தை உள்ளடக்கமாகக் கொண்டதே திராவிடம். திராவிடம் எனும் முட்டைக்குள்ளிருந்து ஓடுடைத்து வெளிவந்ததே தமிழ்த் தேசியம்... இவை அனைத்தும் தியாகுவின் அழுத்தமான கருத்துகள். நேற்றும் இன்றும் மட்டுமல்ல, நாளையும் இவற்றில் தோழர் தியாகுவுக்கு மாற்றமில்லை.

ஒட்டுமொத்தத் தமிழினத்தையே திராவிட இனம் என அழைப்பதை ஏற்க முடியாது என்பதையும், இன்றைய திராவிடம் அன்றிருந்த உள்ளடக்கத்திலிருந்து நீர்த்துப் போய் விட்டது என்பதையும் சுட்டிக்காட்டிக் குற்றாய்வு செய்கிறார். இந்தக் குற்றாய்வுகளில் ஒன்றையேனும் எடுத்து வைத்து ஐயா சுபவீ ஏன் மறுப்புச் சொல்ல முற்படவில்லை?

எல்லாவற்றையும் விட தியாகு - சுபவீ விவாதத்தில் முகன்மையானது ஒன்றுண்டு. அதுதான் குறிப்பிட்ட இந்த விவாதங்களில் குறிப்பிடத்தக்கது. ஐயா சுபவீ தனது உரையிலும் கட்டுரையிலும் திராவிடம் என்பது இனம் அல்ல. அதுவொரு கருத்தியல் என்பதையே மையமாக வைத்து அதனை நிறுவுகிறார். அறிஞர் அண்ணா We belong to Dravidian stock எனக் குறிப்பிட்டு 1962ஆம் ஆண்டு ஆற்றிய மாநிலங்களவை உரையைக் குறிப்பிட்டுத் தனது கருத்தை அண்ணா வழியாகவும் நிறுவ முற்படுகிறார். ..."and it's only because I consider Dravidians have something concrete, something distinct, something different to offer to the world at large'" என்கிற வரிகளைச் சுட்டிக்காட்டி இதில் அண்ணா "உலகத்தவர்க்குக் கொடுப்பதற்கு மிக உறுதியான, மிகத் தெளிவான, மிக வேறுபட்டவை திராவிடர்களிடம் இருப்பதாலேயே என்னை நான் அப்படி (Dravidian stock) அழைத்துக் கொள்கிறேன்." இதனை எடுத்துக்காட்டி, பாருங்கள் அண்ணா திராவிடத்தைக் கருத்தியலெனக் கொண்டார் என்று தனது நிலைப்பாட்டிற்கு வலிமை சேர்க்கப் பார்க்கிறார் ஐயா சுபவீ.

தியாகு அதே உரையில் அண்ணாவின் கூற்றை எடுத்து அண்ணா திராவிடத்தைக் கருத்தியலாக முன்வைக்கவில்லை. நாடு இனம் என்ற பொருளிலேயே கையாண்டார் என்று எடுத்துக்காட்டுகிறார். "I claim Sir, to come from a country, a part of India now, but which I think is of a differ-

ent stock, not necessarily antagonistic. I belong to the Dravidian stock. I am proud to call myself a Dravidian...."

"நான் ஒரு நாட்டிலிருந்து வருகிறேன், அது இப்போது இந்தியாவின் பகுதியாக உள்ளது. ஆனால் அது வேறு கூட்டத்துக்குரிய நாடெனக் கருதுகிறேன், அது பகைமை கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நான் திராவிடக் கூட்டத்தைச் சேர்ந்தவன். என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்."

அண்ணா அவ்வுரையில் திராவிட நாட்டிலிருந்து வந்திருக்கிறேன் எனத் தெளிவாகச் சொல்கிறார். பெரியார் 1956 வரைக்கும் அண்ணா அதன் பின்னும் திராவிடத்தை நாடு என்ற பொருளில் கையாண்டவர்கள்தான். திராவிட நாடு திராவிடருக்கே எனும் முழக்கம் பிறகு எங்கிருந்து வந்தது. ஐயா சுபவீ தன்னுடைய நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்க அண்ணாவின் உரையை ஏன் மறைத்துப் பேச அல்லது எழுத வேண்டும். திராவிடம் ஒரு கருத்தியல் என வலியுறுத்தட்டும். நிலைப்படுத்தட்டும். அதற்காக, பாருங்கள் அண்ணாவும் அப்படித்தான் கருதினார் எனும் பொருளில் அதற்குரிய மேற்கோளைக் காட்டிக் குறிப்பிடுவது நியாயமில்லையே! சொல்லப்போனால் சுபவீ காட்டும் "மிக உறுதியான, மிகத் தெளிவான, மிக வேறுபட்ட" என்ற சொற்றொடரிலிருந்தும் கூட சுபவீ குறிப்பிடுவது போல் திராவிடம் என்பது கருத்தியல் என அண்ணா சொன்னதாகப் பொருள் கொள்ள முடியாது. முழு உரையையும் காண வேண்டும். அண்ணா சுபவீக்கு துணைவர மாட்டார். அது குறித்துத் தனித்து இறுதியான கோட்பாட்டு மறுப்பில் பேசப் போகிறோம். நிற்க!

அண்ணாவின் குறிப்பிட்ட "நான் திராவிட நாட்டிலிருந்து வந்திருக்கிறேன்" என்பதை சுபவீ தனது கருத்துக்காகக் கண்டும் காணாமல் விட்டது ஏன்? தியாகு இதைக் குறிப்பிட்டுக் கேள்வி எழுப்புகிறார். இல்லை, நான் மறைக்கவில்லை தியாகு பொய் கூறுகிறார் என்றோ, இல்லை, நான் குறிப்பிடாததற்கு இன்ன காரணம் என்றோ விளக்கமோ தர முயலவில்லை ஐயா சுபவீ.

தோழர் தியாகுவின் எந்தக் கருத்தையும் எடுத்து வைத்து விடையளிக்காமல் அண்ணாவின் கருத்தையே மாற்றிப் பொருள் கொடுப்பது குறித்துச் சுட்டிக்காட்டியும் விளக்கமளிக்காமல் தியாகு திராவிடத்தை எதிர்க்கிறார் எனப் பொத்தம்பொதுவாகக் கூறிச் செல்வது அறம் இல்லையே ஐயா!

பாரதிய சனதாவினர் தியாகுவைப் பாராட்டுகிறார்களாம்! வாசுபேயை ஜென்டில்மேன் எனக் குறிப்பிட்டவர் கலைஞர். எஸ்.வி. சேகரைப் புரட்சி நடிகர் என்றவர் கலைஞர். பாசக ஒன்றும் தீண்டத்தகாத கட்சியல்ல என்றவர் கலைஞர். பாசகவோடு கூட்டணி கொண்டிருந்த போது குசராத் படுகொலையை மறைக்கும் நோக்கில் நரேந்திர மோதி காந்தி நகரில் நடத்திய பேரணியில் பழனிமாணிக்கத்தை கலந்து கொள்ளச் செய்து கூட்டணி தர்மம் காத்தவர் கலைஞர். பாபர் மசூதி தீர்ப்பு அண்மையில் வந்தபோது மக்கள் விருப்பு வெறுப்புக்கு இதை உட்படுத்தாமல் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றவர் மு.க.ஸ்டாலின். ஏன், இந்தச் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்னால் கூட, ”அன்று வாசுபாயின் தலைமையிலான பாசக ஆரோக்கியமானதாக இருந்தது, அதனால் கூட்டணி கண்டோம்; நரேந்திர மோதி தலைமையிலான பாசக அப்படியில்லை” என்றார் மு.க.ஸ்டாலின். பாசகவைக் கலைஞர் பாராட்டுவது மட்டும் நிகழவில்லை, அவர்களோடு கூடிக் குலாவி இருந்தது திமுக. இன்று வரை அது தவறு என திமுக வெளிப்படையாகச் சொன்னதில்லை. பாபர் மசூதியை இடித்தவர்களோடு, குசராத் படுகொலையை நிகழ்த்தியவர்களோடு, சாதி பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தத்துவம் கொண்டவர்களோடு, பாசிசத்தை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருப்பவர்களோடு, பார்ப்பனீயத்தை அரியணையில் வைத்து ராமராச்சியம் அமைக்க நிற்பவர்களோடு ஒரே நேர்கோட்டில் நடந்ததே திமுக. இந்தத் திமுக ஆதரவுதான் திராவிடம் என உயர்த்துப் பிடிப்பது தந்தை பெரியாரைச் சிறுமைப்படுத்துவதாகும். எதிரிகளிடம் போயிருந்தவர்களை, இது வரை அதற்கு மக்கள் மன்றத்தில் மன்னிப்புக் கேட்காதவர்களைத் தூக்கிச் சுமப்பதற்கு ஐயா சுபவீ வெட்கப்பட வேண்டும்.

தியாகுவைப் பாராட்டும் பாசகவினர்க்கு சுபவீயே பதில் சொல்லியிருக்கலாம். நாங்களாவது மாநில சுயாட்சி என்கிறோம், தியாகு மாநிலம் என்பதையே ஏற்றுக் கொள்ளாதவர், ஏன், இந்தியாவையே ஏற்றுக் கொள்ளாதவர், தமிழ்நாடு இந்தியாவிலிருந்து விடுதலை அடைய வேண்டும் என்பவர் என்று எடுத்துச் சொல்லியிருக்கலாம். எதை மறுத்தாலும் தியாகுவின் இந்த அரசியல் நிலைப்பாட்டை சுபவீ மறுக்க மாட்டார். தியாகுவிடம் இல்லாத திராவிட எதிர்ப்பைச் சொல்லும் சுபவீ அவரின் தமிழ்த் தேசிய விடுதலை நிலைப்பாடு பார்ப்பனீய ஆதரவுக்குத்தான் என்றும் சொல்வாரோ?

திராவிட இயக்கத்திற்கென ஒரு வரையறை கொடுப்பதானால் பார்ப்பனீய எதிர்ப்பு, இந்து மத

ஒழிப்பு, சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, இந்தியத் தேசிய மறுப்பு எனலாம். பெரியாரின் திராவிட இயக்கம் இந்தியத் தேசியத்தை ஏற்றதே இல்லை. அது திராவிட நாடு விடுதலை என்றாலும் சரி, தமிழ்நாடு விடுதலை என்றாலும் சரி, இரண்டுக்கும் அடிப்படை இந்தியத் தேசிய மறுப்புதான்! இந்தியா எமது நாடல்ல எனும் போர்க் குரல்தான்! பெரியாரின் இந்த உறுதிமிக்க நிலைப்பாடு சாதி ஒழிப்புக்காகத்தான் என்பதை ஐயா சுபவீயே மறுக்க மாட்டார். ஆர்.எஸ்.எஸ். இந்திய ஆளும் வர்க்கத்திற்கு எதிராகத் தந்தை பெரியாரை ஆயுதமாக்குவோம் என்று முழங்குபவர் தியாகு. இன்றும் இந்நிலைப்பாட்டில் மாற்றமில்லை, நாளையும் இல்லை. பெரியார் மீது வேறுபாடும் மாறுபாடும் உண்டுதான். தந்தையோடு மாறுபாடு இருக்கலாம். ஆனாலும் அவர் எமக்குத் தந்தை! தந்தை பெரியார்....

பெரியாரின் திராவிடம் புறநிலையில் தமிழர்களின் உட்பகையான சாதியத்தையும் புறப்பகையான இந்தியத்தையும் ஒழிக்க நின்றது. இந்தக் கண்ணோட்டத்தில், இந்த நிலைப்பாட்டில் ஊன்றி நின்று ஆரியத்துக்கு எதிராகக் கருத்துச் சமராடுபவர் தியாகு. திராவிடம் இனமல்ல என்பது வேறு; தமிழ்த் தேசியத்தின் முற்கட்டம்தான் திராவிடம் என்கிற தெளிவு வேறு. இந்தப் பொருளில் திராவிடத்தை இந்துத்துவவாதிகளிடம் விட்டுக் கொடுக்காது கருத்துக் களத்தில் நிற்பதுதான் எங்கள் நிலைப்பாடு.

இந்தக் கட்டத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது பொருந்தும். திராவிடம் குறித்த அடிப்படைக் கண்ணோட்டத்தில் தோழர் பெ.மணியரசன் நிலைப்பாடும் எமது நிலைப்பாடும் வேறு வேறு.
புதிய தலைமுறையின் புதுப்புது அர்த்தங்கள் அதிகாலை நிகழ்வு ஒன்றில் ஹெச்.ராஜாவும் தோழர் தியாகுவும் பங்கெடுத்தனர். நெறியாளர் ஜென் ராம். ஹெச்.ராஜாவை வைத்துக் கொண்டு தியாகு சொன்னார் : "இந்தியா சுதந்திரம் அடைந்த போது காசுமீர் இந்தியாவிலேயே இல்லை. தலை இல்லா முண்டமாகத்தான் பாரத மாதா பிறந்தாள்." இந்தியக் கொடி எரிப்புக்காகச் சிறை சென்ற இளைஞரின் விடுதலைக்காக நடந்த பொதுக் கூட்டமொன்றில் இந்தியக் கொடியைக் கொண்டு நாம் நம் வீட்டுக் குழந்தைகளின் மலத்தையும் துடைக்கலாம், அது சட்டப்படி குற்றமில்லை எனப் பேசினார் தியாகு. தேசியப் பாதுகாப்புச் சட்டம் பலரின் மீது பாய்ந்த நேரத்தில் அதற்கு எதிராகத் தந்த நேர்காணல் ஒன்றில் இந்திய ஒருமைப்பாட்டை எதிர்க்கிற என்னைக் கைது செய்ய முடியாது என்றார் தியாகு. ஹெச். ராஜா தியாகுவை ஒருமையில் பேசி மிரட்டி இவற்றுக்கு எதிர்வினை ஆற்றினார். நான் சில கூட்டங்களில் அதனை எதிர்த்தும்

மறுத்தும் பேசியுள்ளேன்.

இந்தக் கட்டத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது பொருந்தும். இந்தியத் தேசியம் குறித்தக் கண்ணோட்டத்திலேயே திரு சீமான் நிலைப்பாடும் எமது நிலைப்பாடும் வேறு வேறு. பெ.ம.வுக்கும் சீமானுக்கும் வேறுபாடு உண்டு என்பதையும் பதிவு செய்துவிட வேண்டும்.

திமுக சாதி ஒழிப்புக் கட்சியா ஐயா சுபவீ அவர்களே! சாதி ஒழிப்பில் முன்னுக்குப் பின் முரணில்லாது பயணிக்கும் கட்சியா திமுக? நீங்களே சொல்லுங்கள். திமுக சமூகநீதி அடிப்படையில் செய்திருக்கிற சில நன்மைகளை மறுக்கவில்லை. ஆனால் அந்தச் சமூகநீதிக்கு எந்த இந்திய ஆளும் வர்க்கம் அரணாக நின்றிருக்கிறது! நின்றதில்லை. நிற்காது. அந்த இந்திய ஆளும் வர்க்கத்தோடு மாறி மாறி திமுக பதவிப் பங்கு போட்டுக் கொள்வது சமூகநீதி நோக்கத்திற்காகவா? நீட்டை திமுக எதிர்க்கிறது. தொடர்ந்து எதிர்க்கும். இதை ஒப்புக் கொள்வதில் எந்தத் தயக்கமுமில்லை. எமது கேள்வி நீங்கள் எவ்வளவு மூர்க்கமாக நீட்டை எதிர்ப்பீர்கள் என்பதில்லை. இதோ இப்போது கூட நீதியரசர் ராஜன் அவர்கள் தலைமையில் இதன் பாதிப்புகள், மாற்றுகளைப் பரிந்துரைக்க ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளை இப்போதே முன்முடிவுகள் அடிப்படையில் விமர்சிக்கத் தேவையில்லை. முயற்சி தொடரட்டும். நமது அடிப்படைக் கேள்வி: இந்திய அரசமைப்புக்கு உட்பட்டு நீட்டை எப்படி எவ்வகையில் தடுத்து நிறுத்தப் போகிறீர்கள் என்பதற்குரிய வழித்தடம் என்ன? சுபவீயே கூட அதைச் சொல்லலாம். சட்டப் பேரவையில் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றியும் நீட்டைத் தடுத்து விட முடியவில்லை. அந்தச் சட்டத்தைக் குப்பையில் வீசியது பாசக அரசு. நாங்கள் சட்டமியற்றியும் நீட்டை எப்படி நுழைக்கலாம் என்கிற கேள்வியிலிருந்தே நீட் எதிர்ப்பு தொடங்கப்பட வேண்டும். ஆட்சி குறித்து கவலை கொள்ளாது மக்கள் போராட்டத்திற்குத் தலைமை வகித்துப் போராட்ட அரசியலை வளர்த்தெடுத்தால் நீட்டை இறுதியிலும் இறுதியாக ஒழிக்க முடியும். இதையெல்லாம் குறிப்பிடக் காரணம் இந்தியக் கட்டமைப்பை இறுக அணைத்துக் கொண்டே சமூகநீதி காப்பேன் என்பது முரணானது என்பதை வலியுறுத்தவே!

கலைஞர் செய்வாரா மாட்டாரா என்பதல்ல வினா. செய்வார்தான். சிலவற்றை செய்துமிருக்கிறார்தான். 1972 அல்லது 73 இல் ஐந்து துறைகளில் தமிழ் வழியில் படித்தோர்க்கு

வேலைவாய்ப்பில் முன்னுரிமை என அறிவித்தார் கலைஞர். இது தமிழ்வழிக் கல்வி தொடர்பானது. தமிழ்வழிக்கல்வி சமூகநீதிக்கானது என்பதறிவோம். காங்கிரசின் தூண்டுதலால் மாணவர் போராட்டம் அன்று பெயரளவில் நடந்தது. ஆட்சி போய்விடக் கூடும் எனக் கருதி அந்த அறிவிப்பு கைவிடப்பட்டது. ஆட்சி போனாலும் விட்டுக் கொடுக்க முடியாது எனும் நிலை எடுத்திருக்க வேண்டும். யார் சொல்லியிருந்தாலும் கொள்கை நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது. ஆட்சி மேல்துண்டைப் போன்றது; கொள்கை இடுப்பில் கட்டியுள்ள வேட்டியைப் போன்றது என்றார் நம் அண்ணா! அதன்பின் அதே ஆட்சி இந்திய அரசால் கலைக்கப்பட்டது என்பதறிவோம்.

சமூகநீதித் தளத்தில் நாம் எட்டிக்கூடப் பார்க்க முடியாத துறைகள் உண்டு. இடஒதுக்கீட்டுக்கு சாவுமணி அடிக்கும் வகையில் தனியார்மயம் கோலோச்சிக் கொண்டிருப்பதையும் மறந்துவிட முடியாது. காங்கிரசோடு நின்று கொண்டே அல்லது இந்தியத்தோடு கைகுலுக்கிக் கொண்டே தனியார்மயத்தை எதிர்ப்பது எங்ஙனம் என சுபவீயே எடுத்துரைக்கலாம். இந்திய அரசமைப்பின் மீது சத்தியம் செய்து விட்ட பிறகு இந்திய அரசின் உலகமய தாராளமய தனியார்மயப் பொருளியல் கொள்கைகளை மாநில அரசு ஏற்றுத்தான் செயல்பட முடியும். தனியாக ஒரு பொருளியல் கொள்கையைத் தனித்து வைத்துக் கொண்டு பின்பற்ற இந்திய அரசமைப்பு அனுமதிக்கவில்லை. இந்தப் பொருளியல் கொள்கைகள் என்பவை அடிப்படையிலேயே சமூகநீதிக்கு எதிரானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. நமது வரலாறு தந்த பட்டறிவு கொண்டு சொல்கிறோம்: இந்திய அரசமைப்புக்குட்பட்டு சமூகநீதியை வென்று நிலைநிறுத்தவே முடியாது.

இந்த அடிப்படைகளில் நின்று சொல்கிறோம். இன்று திராவிடம் என்பது இந்தியத் தேசிய மறுப்பைக் கைகழுவி அதனோடு பதவிப் பங்கு போட்டு சமரசமாகி விட்டது. தேனை எடுத்தவன் புறங்கையை நக்காமல் இருக்க முடியாது என்பது போல இந்தியத்தோடு கலந்து விட்ட பிறகு திமுக உயிர்ச்சாரமான கொள்கைகளுக்குப் பதவி விலை கொடுத்துவிட்டது என்கிறோம். அதனால்தான் மாநில சுயாட்சி என்பதே இந்திய ஒருமைப்பாட்டுக்குத்தான் என்றும், இந்தியக் கொடியை ஏற்றும் உரிமையையே பெற்றிருக்கிறோம் என்பதை வெற்றி போலவும் கலைஞரால் சொல்ல முடிந்தது.

இந்தியத் தேசியத்தோடு இந்தளவு கரைந்து விட்டது சமூகநீதி அடிப்படைகளுக்கு முரணாகிறது. அந்த முரண்பாட்டைக் கொள்கைவழி நின்று தீர்த்துக் கொள்ள முடியாது அப்படியே பதவிகள் கொண்டு வாழப் பழகி திமுகவுக்கு நெடுங்காலமாகி விட்டது. இந்தத் தொடர் நெடும் போக்கின் விளைவுகள்தான் திமுகவின் முதன்மைத் தலைவர்களான ஆர்.எஸ்.பாரதியின் "திராவிடம் (திமுக) தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட்ட பிச்சை" என்ற கூற்றும்.. "என்னுடன் இருப்பவர்கள் எல்லோருமே அரிசனங்கள்தான்" என்ற பேச்சும்... தயாநிதி மாறனின் "நாங்கள் என்ன தாழ்த்தப்பட்டவர்களா?" என்ற கேள்வியும். இப்படிப் பேசுகிற போது அவர்களுக்குக் கூச்சமே இருக்கவில்லை. கே.என். நேருவும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனும் ஆர்.எஸ்.பாரதியும் சாதிக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, தேர்தல் என்பது சாதிநாயகத் தேர்தல் என்று புரட்சிகர ஆற்றல்கள் பேசி வருகிறோம். சாதி பார்த்து திமுக தேர்தலில் எதுவும் செய்வதில்லை, எந்த முடிவும் எடுப்பதில்லை என அறுதியிட்டுரைக்க ஐயா சுபவீ தயாரா? தேர்தலைக் கொண்டு சாதிய உணர்வை மங்கச் செய்து சாதி ஒழிப்புக்கு தேர்தல் வழியாகவும் திமுக பங்காற்றுகிறது எனச் சொல்ல முடியுமா? கலைஞரே இருந்தாலும் சொல்ல மாட்டார். இந்தத் திமுக ஆதரவுதான் திராவிட ஆதரவு. இந்தத் திராவிடத்தை எதிர்த்தால் அது பார்ப்பனீய ஆதரவு, இந்தத் திராவிடத்தை எதிர்த்தால் அது சாதியைப் பாதுகாப்பது என்று பூச்சாண்டி காட்டுவதை இனியாகிலும் கைவிட வேண்டும்.

நாங்கள் தமிழ்த் தேசியர்கள். தோழர் தியாகு தலைமையில் இயங்கும் நாங்கள் தந்தை பெரியார் முன்வைத்த தமிழ்நாடு தமிழருக்கே என்பதை அரசியல் கொள்கையாக ஏற்றுச் செயல்படுபவர்கள். இந்தியா ஒழியாமல் சாதி ஒழியாது என்ற பெரியாரின் நிலைப்பாட்டை ஏற்று சாதி ஒழிந்த தமிழ்த் தேசம் படைக்க நிற்பவர்கள். இந்தியா என்பதே பார்ப்பனிய பனியாக் கட்டமைப்பு என்ற பெரியாரின் வரையறையை ஏற்று இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பை வீழ்த்தப் பாடாற்றுகிறவர்கள். இதையெல்லாம் உள்ளடக்கியே தமிழ்த் தேசியச் சமூகநீதிக் குடியரசு படைக்கும் இலக்கை வரித்துக் கொண்டவர்கள். தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தைப் பொறுத்த வரை சமூகநீதி நிலைநாட்டப்பட பார்ப்பனிய பனியா இந்தியத் தேசியம் முறியடிக்கப்பட வேண்டும், சாதி ஒழிப்பைச் சாத்தியமாக்க தமிழ்த்தேசியம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்கிறது.

ஐயா சுபவீ சொல்கிறார்: தியாகு சாதியைப் பாதுகாப்பவராம்! நான் கீழ்வெண்மணி

பெற்றெடுத்த பிள்ளை என்று தியாகு தன்னைச் சொல்லிக் கொள்வதுண்டு. தமிழ்த் தேசியத்தின் உயிர் சாதி ஒழிப்பு என்பேன் நான். அப்படிக் கருதும் வகையில் நான் உருவாகக் காரணம் தியாகுவின் தமிழ்த்தேசியக் கோட்பாடுகளைப் பற்றி வளர்ந்தவன் என்பதால்தான்.

தமிழ்வழிக் கல்வி என்பது சாதி ஒழிப்புக்குரிய கோரிக்கை என்பது உங்களுக்கே தெரியும். தோழர் தியாகு தமிழகத்தில் முதல் தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளி தொடங்கி அதை மக்களியக்கமாக்கியவர் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். தமிழ்ப் பெருமிதத்திற்காக அல்ல சமூகநீதிக் கண்ணோட்டத்திலேயே அவர் தாய்த் தமிழ்ப் பள்ளியைத் தோற்றுவித்தார். தாய்த் தமிழ்க் கல்விப் பணியின் தலைவராகவும் செயல்பட்டவர். இவ்வழி தமிழகமெங்கும் உள்ள தமிழுணர்வாளர்களை சமூகநீதித் தளத்தில் செயல்பட வைத்தவர் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

சாதி ஒழிப்பை முதன்மை இலட்சியமாகக் கொண்டு இயங்குகிற இயக்கம் தியாகு தலைமையிலான தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம். எமது இயக்கத்தின் முழக்கமே ”தமிழர் விடுதலைப் போர் முழக்கம்! சமூகநீதித் தமிழ்த் தேசம்!” என்பதுதான்! சாதி ஒழிப்புக்கான எமது செயல்பாட்டை விரித்துச் சொல்ல இடமில்லை. குறிப்பாக இன்றும் எமது இயக்கத்தின் சார்பில் காதல் அரண் எனும் செயலியை உருவாக்கி, சாதி மறுப்புத் திருமணங்களை இயக்கமாகவே நடத்தி வருகிறோம். திருமணத்திற்குப் பிறகு சாதி வேறுபாட்டைப் பொறுத்து ஆணவக் கொலைக்கு வாய்ப்பிருக்கும் எனக் கருதினால் அவர்களைத் தொடர்ந்து விழிப்போடு பாதுகாத்துக் கரை சேர்த்து வருகிறோம். இதனை இயக்கச் செயல்திட்டமாகவே கொண்டு இயங்குகிறோம். இதையெல்லாம் அறிந்து வைத்து ஐயா சுபவீ பொறுப்போடு பேச வேண்டும் என எதிர்பார்க்கிறோம். உயிர் கொடுத்து இவற்றுக்காக உழைப்பவர்களுக்கு சுபவீ தருவது வலி மட்டுமல்ல, அடங்காச் சீற்றமும்தான்.

தோழர் தியாகு குறித்த ஐயா சுபவீயின் இரண்டாவது கருத்துக்கு எதிர்வினையையும்... இறுதியாக ஐயா சுபவீக்கு எனது கோட்பாட்டு மறுப்புரையையும்... அடுத்தடுத்து எழுதுவேன்.

## *களம் காலம்*

**குடந்தையில் இளைஞர் அரண் ஆர்ப்பாட்டம்**




குடந்தை அரசுத் தலைமை மருத்துவமனையின் சீர்கேட்டைக் கண்டித்தும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கோரியும் இளைஞர் அரண் சார்பில் 2021 ஜூலை 16 காலை 11 மணியளவில் கும்பகோணம் காந்தி பூங்கா முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் சைமன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமை இயக்கங்கள், (மக்கள் அரசு கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், மக்கள் சனநாயக் குடியரசு, நீலப் புலிகள்) வழக்கறிஞர்கள்,மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உழவர் அரண்

"உழவர் நிலை வாழ்வா? சாவா?" என்ற தலைப்பில் 2021 சூலை 12ஆம் நாள் மாலை இணையவழிக் கருத்தரங்கு நடைபெற்றது. உழவர் அரண் ஒருங்கிணைப்பாளர்



தோழர் அருண் மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உழவர் அரண் மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் தோழர் பாரதி வரவேற்புரை ஆற்றி, கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். தாளாண்மை உழவர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கோ. திருநாவுக்கரசு, உழவர் அரண் தெற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பால்ராஜ், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றினர். ஆசாத் கிசான் சங்கர்ஷ் கமிட்டியின்

ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜ்வீந்தர் சிங் கோல்டன் உழவர் போராட்டத்தின் இன்றைய நிலை குறித்துச் சிறப்புரை நிகழ்த்தினார்.

அருள்தந்தை ஸ்டான் சுவாமி நினைவேந்தல்

பழங்குடி மக்களின் உரிமைகளுக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் போராடிய அருள் தந்தை ஸ்டான் சுவாமி இந்திய ஒன்றிய அரசால் நிறுவனப் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ததேவிஇ சார்பில் 09.07.2021 வெள்ளி இரவு இணையவழியில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பேராசிரியர் மருதமுத்து, சாகர் ஆபிரகாம் கொன்சால்வஸ், நெல்லை

முபாரக் (எஸ் டி பி ஐ), முகமது இஸ்மாயில் (பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா), ஹென்றி திபேன் (மக்கள் கண்காணிப்பகம்) தோழர்கள் மகிழன், அருண் மாசிலாமணி, தியாகு ஆகியோர் உரையாற்றினர்.






முன்னதாக அன்று மாலை பொள்ளாச்சியில் சமூகச் செயல்பாட்டாளர்கள் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு உரையாற்றினர்.

08.07.2021 அன்று வள்ளுவர் கோட்டம் அருகே பல்வேறு அமைப்புகளின் சார்பில் ஒருங்கிணைக்கபட்ட ஆர்ப்பாட்டத்தில் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் மகிழன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(21)

சமந்தா

## ஆசிரியர்: கிரண் சந்திரா




தோழர் கிரண் சந்திரா அவர்கள் இந்திய கட்டற்ற மென்பொருள் இயக்கத்தின் (FSMI-Free software movement of India) பொதுச் செயலாளராக செயல்படுகிறார். 2010 மார்ச் 21ஆம் நாள் பெங்களூரில் நடைபெற்ற கட்டற்ற மென்பொருளுக்கான தேசிய மாநாட்டின் போது இந்தியக் கட்டற்ற மென்பொருள் இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. இணைய உலகின் பிரிவினைகளுக்கு எதிராகவும், இணையப் பயனாளர்களின் தகவல் பாதுகாப்பிற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் இந்தியக் கட்டற்ற மென்பொருள் இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது. தமிழ்நாட்டில் இதன் பகுதி அமைப்பாக தமிழ்நாடு கட்டற்ற மென்பொருள் அறக்கட்டளை (FSFN-Free software foundation Tamilnadu) செயல்பட்டு வருகிறது.

### தலைப்பு: இணைய ஏகபோகங்கள்:

தகவல் தொழில்நுட்பம் மக்களின் தகவல் பரிமாற்றத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு மேம்பட்ட ஜனநாயக செயல்முறைக்கான தளமாக கருதப்படுகிறது.சமூக


அணிதிரட்டலுக்கான இடமாகவும் கருதப்படுகிறது ஆனால் இன்று அதன் நிலை என்ன? முதலாளித்துவத்தில் இணைய உலகத்தின் ஜனநாயகம் சவாலிடப்படுகிறது, சோதனைக்குட்படுத்தப்படுகிறது. இணையம் அனைவருக்கான தகவல் தொடர்புக்கும், கல்விக்கும் சமவாய்ப்புகளுடன் சமதளத்தை உருவாக்குவது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ள போதும். இணைய தகவல் பரிமாற்றம் என்பது லாபத்தை அதிகரிப்பதற்கான வழிமுறையாகவே கையாளப்படுகிறது.

அமெரிக்காவில் ராணுவத்திற்காக கட்டமைக்கப்பட்ட தகவல் வலையமைப்பிலிருந்தே இணையத் தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் மூலம் லாபத்தை அதிகரிப்பதற்கான புதிய உலகை உருவாக்கும் விருப்பமும் ஏற்பட்டது.

காப்புரிமை, வர்த்தக முத்திரை அல்லது பதிப்புரிமை போன்ற நேரடியாக சரக்குப் பண்டங்களாக உணர இயலாத சொத்துக்கள் அருவமான சொத்துக்கள் (intangible assets) என அழைக்கப்படுகின்றன. தகவல் பரிமாற்றம் என்பதும் அருவமான சொத்தாக உள்ளது. 1990களுக்கு முன் அருவமான சொத்துக்களின் மதிப்பு மிகவும் குறைவு.1995ல் உலக வர்த்தக மையத்தின் உதவியுடன் அருவமான சொத்துக்களின் மதிப்பு அதிகரித்துள்ளது. உலகின் மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மதிப்பு பல பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. பங்குச் சந்தை சார் அருவ சொத்துக்களின் மதிப்பு மிகவும் அதிகரித்துள்ளது.

2017ல் ஆப்பிள், ஆல்ஃபபட், மைக்ரோ சாஃப்ட், அமேசான், ஃபேஸ்புக், ஆகிய ஐந்து நிறுவனங்கள் (FAAMG) மிகப்பெரும் இணையதள ஏகபோகங்களாகியுள்ளன. இந்த ஐந்து பெரு நிறுவனங்களின் தற்போதைய சந்தை மதிப்பு 8 லட்சம் கோடி டாலராக அதிகரித்து, உலகளவிலான ஜிடிபி மதிப்பில் அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்து மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்நிறுவனங்கள் எவற்றை சரக்காக்கியுள்ளனர்? தகவல்களையும், தகவல் தொடர்பையுமே சரக்காக்கியுள்ளனர்.

1990ல் 12 மில்லியன் கைபேசிகளே பயன்படுத்தப்பட்டன. 2009ல் திறன்மிக்க கைபேசிகள் பயன்பாட்டிற்கு வந்தன. 2016ல் 22.9 பில்லியன் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. 2020ல் 50.1 பில்லியன் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. 2009ல் நவீன நாகரிகத்தின் விளைவாகத் தகவல்




தொழில் நுட்பமும் நுகர்வு வரிசையில் இணைந்தது. 2009ல் தகவல்களின் அளவு இரண்டு மடங்கானது. திறன் மிகு தொலைபேசிகள் கண்காணிப்பு சாதனங்களாக பயன்படுத்தப்பட்டன.
5ஜி என்பது ஒரு விபத்து அல்ல. 1ஜியை விட 5ஜி 100அளவு விரைவாக செயல்படும். மோர் விதியின் படி கணினியின் செயல்பாட்டுத் திறன்பாடு ஒவ்வொரு 16 மாதங்களுக்கு ஒரு முறை இரட்டிப்பாகிறது.

உலகையே 8 சாதனங்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. இணைய ஐபி முகவரிகள், யு.ஆர்.எல்கள் அமெரிக்க வணிகத்துறையின் கண்காணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் உள்ளன. உலகின் அனைத்து தகவல் போக்குவரத்தும் அமெரிக்காவின் வழியில் தான் போவதும் வருவதுமாக அமைந்துள்ளது.

கருத்துகள் கணித வடிவில் குறியீடுகளாக்கப்பட்டுள்ளன. காப்பீட்டு முன்பணம், கடன் தர மதிப்பீடு, சிறை தண்டனை என அனைத்துமே மதிப்பீடுகளாக, அளவீடுகளாக மாற்றப்படுகின்றன. கருத்துகளுக்கும், கணித மாதிரிகளுக்கும் காப்புரிமை பெற முடியும்.

மென்பொருளும், வடிவாக்கமும், அறிவுசார் சொத்துக்களாக காப்புரிமைகளைக் கொண்டுள்ளன. எந்த ஒரு புதிய கருத்தாக்கமும், அதன் பயன்பாடும் காப்புரிமையை பெறுகின்றன. இணையம்

என்பது சுதந்திரமான திறந்த வெளியாக இல்லாமல் அடைப்புகள் போல் செயல்படுகிறது. தனியார் தகவல்களை அடைப்புக்குள் மூடுவதற்கான வெளியாகவும் பயன்படுத்தப்படுகிறது. இணையத்தின் களங்கள்(domain) உரிமையாக்கப்படவில்லை, பயன்படுத்த மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக தளங்கள் ஒரு சில ஏகபோகங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முற்போக்குத் தன்மை கடந்தகாலத்துக்குரியவையாகி விட்டது. இணைய ஏகபோகங்கள் முற்றிலும் லாப அடிப்படையிலே செயல்படுகின்றன. அமெரிக்க இணைய ஏகபோகங்கள் நுகர்வோரின் பழக்கவழக்கங்கள், தேர்வுகள் குறித்த தகவல்களை சேமிக்கின்றன.சாதி, உட்சாதி, மதம், இனம், இனம், மொழி அடையாளங்களின் அடிப்படையில் இணையப் பயனாளர்கள் குறித்த தகவல்களை சேகரித்து அவற்றை சரக்காக விளம்பரதாரர்களுக்கு விற்கின்றன. வணிக நலன்களுக்கு ஏற்ப தனிநபர்களின் நடத்தையை மாற்றுவதற்காக, தரவுகள், கண்காணிக்கப்படுகிறது ஆய்வு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

உலகளவில் 200 கோடிக்கு மேற்பட்டோர் ஆண்டிராய்டு செயலிகளைக் கொண்ட கைபேசிகளை பயன்படுத்துகிறார்கள்.270 கோடி பேர் ஃபேஸ்புக் பயன்படுத்துகிறார்கள்.150 கோடி பேர் வாட்ஸப் பயன்படுத்துகிறார்கள். உலகளவில் ஐம்பது பில்லியன் கைபேசி சாதனங்களில் சேமித்துவைக்கப்பட்ட தகவல்கள் சமூக ஊடகங்கள் மூலம் பெறப்படும் தரவுகள் அனைத்தும் இணைய ஏகபோகங்களால் சேமித்துவைக்கப்பட்டு வர்த்தக நோக்கங்களுக்காக தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள மக்கள் இந்தத் தரவுகளை உருவாக்குகிறார்கள். சமூக ஊடகங்களில் அவர்கள் பகிரும் பதிவுகள், உரைகள், படங்கள், காணொளிகள் ஆகியவை அனைத்துமே சேமிக்கப்பட்டு ஏகபோகங்களின் தேவைக்கேற்ப வடிகட்டி பிரித்து எடுக்கப்படுகிறது.கருநிலையிலிருந்தே இன்றைய தலைமுறையினர் குறித்த அனைத்துத் தகவல்களும் சேமிக்கப்படுகிறது.

தகவல்கள் அனைத்தும் நுகர்வோரின் பழக்கவழக்கங்களை மாற்றும்விதமாக ஆவணப்படுத்தப்படுகின்றன. தகவல் சேமிப்பதற்கான செலவு மிகவும் மலிவாகிவிட்டது. அனைத்து விதமான தரவுகளும் சேமிக்கப்படுகின்றன, தேவைக்கேற்ப தரவுகளை பிரித்து/

வடிகட்டி எடுக்கும் நிரல்நெறிகள் பயன்படுத்தப்படுகின்றன. இணையத்தில் உள்ள தரவுகளின் மொத்த அளவு 35 செடா பைட்கள். ஒரு செடா பைட் என்பது 1 டிரில்லியன் கிகாபைட். ஸ்னோடன் வெளியிட்ட தரவுகளின் அளவு 1 யொட்டா பைட்டு.

கைபேசி/இணைய பயனாளர்களின் பெயர், வயது, உயரம், கல்வித்தகுதி, தொழில் ஆகியவை குறித்த தகவல்கள் மட்டும் சேமிக்கப்படுவதில்லை. அவர்கள் எங்கெங்கு செல்கிறீர்கள், அங்கே எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள், அவர்களது வாடிக்கையாளர்கள், அவர்களது பழக்கவழக்கங்கள், நடத்தை, நுகர்வு விருப்பு, வேறுப்புகள், இவை அனைத்துமே இணைய ஏகபோகங்களால் சேகரிக்கப்பட்டு சரக்காக்கப்பட்டு விளம்பரதாரர்களுக்கு விற்கப்படுகிறது.

மக்களின் விருப்பு,வெறுப்பு, தேவைகள் சந்தையை நிர்ணயிப்பதில்லை. சந்தையே மக்களின் விருப்பு,வெறுப்பு,தேவைகளை நிர்ணயிக்கமாறு விளம்பரங்களும், வணிக உத்திகளும் ஏற்படுத்தப்படுகின்றன. நுகர்வோரின் பொது அபிப்பிராயங்களும், பழக்கவழக்கங்களும் ஏகபோகங்களால் மாற்றப்படுகின்றன. அவர்கள் எதைத் தேர்ந்தெடுக்கவேண்டும், என்ன சாப்பிடவேண்டும், என்னென்ன பொருட்களை எங்கெங்கே வாங்கவேண்டும், என்ன படம் பார்க்கவேண்டும், எந்தக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும். எந்தக் கட்சிக்கு ஓட்டு போடவேண்டும் என்பதை இணைய ஏகபோகங்களே நிர்ணயிக்கின்றன.

இணையப் பயனாளர்கள்/நுகர்வோரின் குடும்பப் பெயரின் அடிப்படையில் தகவல்களை பிரித்தெடுக்கும் நிரல் நெறிமுறை பயன்படுத்தப்படுகிறது. வாட்ஸப்பால் பயனாளர்களின் வர்க்கம், சாதியை கண்டறிய முடியும். மக்கள்/நுகர்வோருடைய பழக்கவழக்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அவர்களின் பணப்பையின் கனமும் அறிந்து கொள்ளப்படுகிறது. ஃபேஸ்புக் நிறுவனம் வட இந்தியாவின் பூமிகார் சாதியின் 56 உள்சாதிகள் பற்றிய தகவல்களை சேர்த்துள்ளது. ஃபேஸ்புக் தனிநபர் குறித்த தகவல்களையும், அந்தரங்க நிகழ்வுகளையும் விற்பனை செய்ததை ஸ்னொடென் அம்பலப்படுத்தி உள்ளார்.

இணையத்தில் சமூக வலைதளங்களில் விளம்பரங்களை வடிவமைத்து பரப்பும் போது அதை யார் பார்க்கவேண்டும், யார் பார்க்கக் கூடாது என்று வடிகட்டும் விதமாக நிரல் நெறிமுறை

இயற்றப்படுகிறது. உதாரணமாக தகவல்களை தலித்துகளுக்கும், விவசாயிகளுக்கும் தெரியாதவாறு வடிகட்டி அனுப்பமுடியும்.

இணையதளங்களில் தகவல்களை, பொருளை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு மட்டுமே அனுப்புமாறு தேர்வு செய்ய முடியும் அல்லது பொருளாதார வசதியின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டுமே அந்தத் தகவலை பரவுமாறு செய்ய முடியும்.ஒரு பொருள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது குறித்து ஒரு வகுப்பினருக்கு எந்தத் தகவலும் செல்லாத வகையில் தடுக்க முடியும்.இத்தகைய வரம்பிடப்படும் விளம்பரங்கள் ஜனநாயகத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. ஒருவர் ஒரு புதிய சரக்குப் பொருளை வாங்குகிறாரா, இல்லையா என்பது வேறு விசயம் ஆனால் அத்தகைய பொருள் விற்பனைக்கு உள்ளது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை அனைவருக்கும் உள்ளது.அத்தகைய உரிமையை இணைய ஏகபோக நிறுவனங்கள் மக்களுக்கு அளிக்கவில்லை. இந்த ஏகபோக நிறுவனங்கள் அமைப்புகள் சமூகவலைதளங்களில் மக்களை ஒருங்கிணைக்கவோ, அமைப்பாகத் திரட்டவோ அனுமதிப்பதில்லை. அவை மக்களிடையே சமூகப் பொருளாதார அடிப்படையிலும், சாதி, மத, இன அடிப்படையிலும் பல வேலிகளையும், சுவர்களையும் ஏற்படுத்தி பிரிவினை செய்யும் விதத்திலே செயல்படுத்தப்படுகின்றன.

கண்காணிப்பு முதலாளித்துவத்தின் மாதிரிகளாகத்தான் கூகுளும், ஃபேஸ்புக்கும் செயல்படுகின்றன. அரசின் ராணுவ தொழில்மையங்களும், இணைய ஏகபோகங்களும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன.பேரழிவை ஏற்படுத்தும் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கண்காணிக்கும் முதலாளித்துவத்தில், தொழில்நுட்பம் என்பது நடுநிலைத் தன்மையுடையதாக, அனைவருக்கும் சமானமானதாக இல்லை. தொழில் நுட்பமும் அரசியலாகவும், ஆட்சி செய்யும் வகுப்பின் சாதனமாகவும் உள்ளது.

இணைய ராணுவ தொழில் கூட்டமைப்புகளில் குற்றம் இழைப்பதற்கான கருவிகள் மீது அரசு முகமையாளர்கள் முழு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். உதாரணமாக கார்கள், வாகனங்களை கணினியுடனும், இணையத்துடன் தொடர்பு ஏற்படுத்தி ஸ்டியரிங்கை கட்டுப்படுத்த முடியும், விபத்தையும் ஏற்படுத்தவும் முடியும்.

தற்போது சேவைத்துறையிலும் தானியங்கி தொழில் நுட்பம் செயல்படுத்தப்படுகிறது. வங்கிக்

கடன் அளித்தல், தரம் நிர்ணயித்தல் ஆகிய சேவைகள் கூட தானியங்கி முறையில் செயல்படுத்தப்படுகிறது. அமேசன் தற்போது வால்மார்ட்டை விட 2.5 மடங்கு அதிக சந்தை மதிப்புடையதாக உயர்ந்துள்ளது. செயற்கை நுண்ணறிவு அழிவேற்படுத்தும் போக்குடன் செயல்படுத்தப்படுகிறது. வறியவர்களையும், எளியவர்களையும் வஞ்சித்து தண்டிக்கும் போக்கு காணப்படுகிறது. செயற்கை நுண்ணறிவால் மட்டுமே நாம் நினைக்கும் சமூகத்தைக் கட்டமைக்க முடியாது. தொழில் நுட்பங்கள் மோசடி செய்யவே பயன்படுத்தப்படுகின்றன.

சமூக ஊடக தளங்கள், அரசியல் கட்சிகளிடமோ அதன் விளம்பரதாரர்களிடமோ பணத்தைப் பெற்று பொதுமக்களின் கருத்தை ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக மாற்றுவதற்கான பிரச்சார ஊடகமாக செயல்படுத்தப்படுகின்றன.2016ல் லண்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்கா என்ற நிறுவனம் பேஸ்புக் நிறுவனத்திடமிருந்து பெற்ற 50 மில்லியன் பேஸ்புக் பயனாளர்களின் தகவல்களை அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான அரசியல் விளம்பரங்களுக்கு பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

சமூக வலைத்தளங்களின் நிரல்நெறிகளை மாற்ற பாஜக அதிக பணம் அளித்துள்ளது. சீனாவில் கூகுள், ஃபேஸ்புக் போன்ற இணைய ஏகபோகங்கள் ச பயன்படுத்தப்படவில்லை.சீனாவிலிருந்து வரும் தகவல்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. இந்தியாவில் இயங்கும் இணையதளத்திற்கான உள்கட்டமைப்பு நம்மிடம் இல்லை.

இயந்திர கற்றல் வழிமுறைகளில் உள்ள செயற்கை நுண்ணறிவின் நுட்பங்களை, சமூகத்தின் நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டுமே தவிர, வர்த்தகநலன்களுக்காக மக்களின் கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும் மோசடியான முறையில் மாற்றுவதற்கு அல்ல. நிரல்நிறை. எவ்வழிகளில் வேலை செய்கிறது என்ற அறிவியலை பொதுமைப்படுத்தவேண்டும். எந்திர கற்றலையும், செயற்கை நுண்ணறிவையும் பொதுமைப்படுத்த வேண்டும்.

சமூகத்தில் வர்க்கங்கள் இருக்கும் போது உலகளாவிய நெறி, அறம் என்ற ஒன்று இருப்பதில்லை. உலகளாவிய சமூக அறிவியல் என்ற ஒன்றும் இருப்பதில்லை.

பொருளாதார ஆற்றல் மிக்க இணைய ஏகபோகங்கள் லாபங்களுக்காக ஜனநாயக நெறிகளை குழிதோண்டிப் புதைக்கின்றன. இவற்றின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்பதன் மூலமே ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியும்.

## செங்காட்டான் குறிப்புகள்:



தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு மீண்டும் ஒரு பேரிழப்பு!

""உண்ணச் சிறிது போதும்!
உறங்கப் படுக்கை தேடேன்!
எண்ணப் பொழுது வேண்டும்!
எழுத உரிமை வேண்டும்!"

என்பதை நெறியாகக் கொண்டு வாழ்ந்த பேரறிவாளர், செந்தமிழ் அந்தணர்,புலவர்மணி இளங்குமரனார் சென்ற சூலை 25ஆம் நாள் ஆய்வுக்கு ஓய்வுதந்து நம்மைவிட்டுப் பிரிந்தார்! தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் அவரது இறுதிநிகழ்வில் தோழர் நா. கதிர்வேல் கலந்து கொண்டார்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த கூடல் மாநகரில் ஆசிரியராகப் பணிசெய்து அறிவார்ந்த பல மாணாக்கர்களை ஆக்கித்தந்தவர். மாங்குடி மருதனார், ஔவையார் போன்ற சங்கப்புலவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்! ஐந்நூறுக்கு மேற்பட்ட நூல்கள் படைத்தளித்தவர்! இசைக்குறள் பாடிப்பல நூறு நன்னிகழ்வுகள் நடத்தி வைத்தவர்! தமிழ்த் தொண்டினை வெறும்

மொழிப் பணியாக மட்டும் சுருக்கிக் கொள்ளாமல் தமிழ்க் குமுகத்தைப் பிணித்த அடிமை விலங்கொடிக்கும் சிந்தையுடன் பாடாற்றியவர்! புகழ், பதவி, பெரும்பொருள் நாடாதாவர், பதவியில் இருக்கும் எவரையும் நத்தி நில்லாதவர்!

போராடும் தமிழ்த்தேசிய இயக்கங்கள் யாவற்றுக்கும் நல்லாசிரியராகத் திகழ்ந்தவர் இளங்குமரனார். திருச்சிராப்பள்ளி அருகே அவர் நிறுவிய திருவள்ளுவர் தவச்சாலையில் அவரைப்பார்த்து உரையாடிய பொழுதுகள் பயன்மிக்கவை.

இளங்குமரனார் எந்த அரசியல் கட்சியிலும் இடம்பெறாத போதும் தெள்ளத்தெளிவான அரசியல் நிலைப்பாடுகள் கொண்டிருந்தார். 2009 தமிழீழ இனவழிப்புக்குப் பின் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் அறச்சீற்றம் பொங்க ஆற்றிய உரையை என்னால் மறக்க இயலாது.என்னைப்பார்க்கும் பொழுதெல்லாம் தந்தைக்குரிய வாஞ்சையுடன்பழகுவார். நூல்கள் பரிசளிப்பார். நலம் பேணுங்கள் என்று திரும்பத் திரும்ப அறிவுறுத்துவார்,

இளங்குமரனார் பணி தொடர உறுதியேற்போம்! அவருக்குப் புகழ்வணக்கம்!

## பெகாசஸ்: விடையிறுக்கப்படாத வினாக்கள்

பெகாசஸ் என்பது கிரேக்கப் பழங்கதையில் வரும் பறக்கும் குதிரையின் பெயர். இப்போது இசுரேலில் என்.எஸ்.ஒ. என்ற நிறுவனம் ஆக்கித்தரும் ஒற்று மென்பொருளுக்கு (spyware) இந்த மாயக்குதிரையின் பெயர்தரப்பட்டுள்ளது. இந்த ஒற்று மென்பொருள் இந்தியாவிலும் உலகெங்கிலும் அரசியலர், அமைச்சர், அதிகாரியர், ஊடகர், நீதியர், தொழில்துறையினர் உள்ளிட்ட பல்லாயிரம் பேரை வேவுபார்க்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக இந்தியாவின் 'ஒயர்' உள்ளிட்ட பெயர்பெற்ற பன்னாட்டு ஊடகங்கள் புலனாய்வு செய்து செய்தி வெளியிட்டுள்ளன. இது பற்றி எதிர்க்கட்சிகளும் மாந்தவுரிமைச் செயற்பாட்டாளர்களும் ஊடகங்களும் எழுப்பும் வினாக்களுக்கு இந்திய அரசு விடை சொல்ல மறுத்து மௌன அழிச்சாட்டியம் பிடித்து வருகிறது. பெகாசஸ் குறித்து பல அரசுகள் புலனாய்வு செய்ய முற்பட்டுள்ளன. பிரெஞ்சு அதிபர் இமானுவேல் மக்ரோன் தன் கைபேசியையே மாற்றிவிட்டார். இசுரேல்அரசே ஐஎஸ்ஒ நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முற்பட்டுள்ளது. இது குறித்து எவ்வித எதிர்வினையும்




ஆற்றாமலிருப்பது இந்திய அரசு மட்டும் தான். இப்போது வழக்கு உச்சநீதிமன்றத்துக்கு சென்றுள்ளது. உச்சநீதிமன்றம் “இதற்கு ஊடகச் செய்தி தவிர என்ன சான்று?” என்று விண்ணப்பர்களிடமே கேட்கத் தொடங்கியுள்ளது. அது அரசிடம் கேட்டு விடைபெற வேண்டிய வினாக்கள் உள்ளன. அரசால் மட்டும் தான் இந்த வினாக்களுக்கு விடையிறுக்க முடியும்:

(i) பெகாசஸ் தனியாருக்கு விற்கப்படாது, அரசுகளுக்கு மட்டுமே விற்கப்படும், அதுவும் பொறுக்கியெடுத்த அரசுகளுக்குமட்டுமே விற்கப்படும் என்று தெளிவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இசுரேல் பொறுக்கியெடுத்த அரசுகளில் இந்தியாவும்ஒன்றா?

(ii) இந்திய அரசு அல்லது அரசு நிறுவனம் பெகாசஸ் வாங்கியதா?

என்ன விலை கொடுத்து வாங்கியது? அதற்கு எந்தக்கணக்கில் பணம் எடுக்கப்பட்டது?

(iii) ஒற்றாட அரசுக்கு அதிகாரம் தரும் சட்டங்களின் படி உரிய அதிகார அமைப்பின் அனுமதி பெறப்பட்டதா?

(iv) இனின்னாரை வேவுபார்ப்பது என்ற முடிவை எடுத்ததுயார்?

(v) பாபர் மசூதித் தீர்ப்பிலும் பீமாகொரேகான் வழக்கிலும் பெகாசசுக்கு ஒருவகி பாகம் உண்டா? அது என்ன?

நாடாளுமன்றத்து முரட்டுப் பெரும்பான்மையைப் பயன்படுத்தியும்,கொடுங்கோன்மைச் சட்டங்களைக் கொண்டும், நெளிந்து கொடுக்கும் நீதிமன்றங்களைக் கொண்டும் இந்த

வினாக்களைப் புதைத்துவிடலாம் என்று மோதி-அமித்சா கும்பல் மனப்பால் குடிக்க வேண்டாம். நிலத்தடி நெருப்பு போன்ற இந்த வினாக்கள் எரிமலை போல் வெடித்து மாயக்குதிரையை எரித்துச் சாம்பலாக்கும் நாள் வரும்.

---

## ஒளி-ஒலி மாசுபாடு:

**சமந்தா**




நிலமாசுபாடு, நீர் மாசுபாடு, காற்றுமாசுபாடு, புவி வெப்பமாதல் என பல்வேறு சூழலியல் பிரச்சனைகளை பற்றி பரவலாக அறியப்பட்டுள்ளது. ஒளிமாசு என்பது ஒரு சூழலியல் பிரச்சனையாக பரவலாக அறியப்படவோ, அங்கீகரிக்கப்படவோ இல்லை. ஒளி மாசுபாடும், ஒலி மாசுபாடும் பெரும்பான்மையானவர்களால் ஒரு சீர்கேடாகவோ, பிரச்சனையாகவோ உணரப்படவில்லை என்பதும் மிகப் பெரும் பிரச்சனை தான். ஒளி,ஒலி மாசு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.மற்ற சூழலியல் பிரச்சனைகளை காட்டிலும் இதை நம்மால் ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும். சமூக அளவில் முடிந்த அளவிற்கு ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்து மக்கள் செயல்பட்டால் ஒளிமாசைக் குறைக்க முடியும். குறைந்தது நம் சுற்றியுள்ள பகுதிகளிலாவது ஒலி, ஒளி மாசுபாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.மின்விளக்குகளின் கண்டுபிடிப்பு ஒரு புரட்சிகர மாற்றத்தை இந்தப் புவிச் சூழலில் ஏற்படுத்தியது.அதனால் மனிதர்களின் பகல் பொழுதுகள் நீண்டன. இரவுகளை பகலாக்கிய மின்விளக்குகள் புவிச்சூழலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.அதில் நேர் நிறைத்

தாக்கம் பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும்.நாம் நினைத்த பணிகளை நினைத்த நேரத்தில் செய்ய முடிகிறது. தகவல் தொடர்பு, போக்குவரத்து அனைத்திலுமே பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது. இயற்கையின் வரம்புகளை கடந்தவாறே இயற்கை அறிவியலிலும், தொழில் நுட்பங்களிலும் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டன. பல அறிவியல் நுட்பங்களையும், அவற்றின் புதிய பரிமாணங்களையும் நாம் தொடர்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.அதே நேரத்தில் மின்விளக்குகளின் அதீதப் பயன்பாடு எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு காலத்தில் இரவில் நிலா பார்த்தல், விண்மீன்கள் நிறைந்த வான் பார்த்தல் என்பதெல்லாம் அன்றாட வழக்கமாக இருந்தது. அது மனிதர்களின் கற்பனை வானை விரிவுபடுத்தியது. நிலா சோறு சாப்பிட்டு, குழந்தைகளுக்கு கதைகள் சொல்லி, வேடிக்கையாக விளையாடுவதற்கான சூழல் இருந்தது. ஆனால் இன்றைக்கு அத்தகைய சூழல் இல்லை. மின்விளக்குகளால் ஏற்பட்ட ஒளிமாசுவே அதற்குக் காரணமாக உள்ளது. இரவின் நிலவொளி, விண்மீன் ஒளி எல்லாவற்றையும் மின்னொளி இருட்டடிப்பு செய்துவிட்டது.

ஒளிமாசுபாடு என்பது தொழில்மயம், நகரமயம் ஆகியவற்றின் துணைவிளைவுகளில் ஒன்று.இன்று புவியில் பாதிக்கு மேற்பட்டோர் நகர சூழலில் வாழ்கிறோம் கடைத் தெருக்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கேளிக்கை அரங்கங்கள், திரையகங்களில் அதிக ஒளிரும் தன்மை கொண்ட விளக்குகள் நீண்ட நேரம் பயன்படுத்தப்படுகிறது. வீடுகளிலும் சரி, வெளிப் புறங்களிலும் சரி மிகப் பிரகாசமான மின்விளக்குகள் நெடுநேரம் எரிக்கப்படுகிறது. தெருவிளக்குகள், விளம்பரப் பலகைகளின் அலங்கார விளக்குகள்,பேருந்துகள், கடைத் தெருக்களில் சுழலும் பல்வண்ண விளக்குகள் என அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாக மின்விளக்குகள் அதீத ஒளியுடன் எரியவைக்கப்படுகின்றன. அது ஒளி மாசுபாடாக தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

மிகப் பெரிய வீடுகளில் வசிப்போர், மாடி வீடுகளில் வசிப்போர் எல்லா அறைகளில் உள்ள விளக்குகளையும் போட்டு வைத்திருக்கும் பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது.புழக்கத்தில் உள்ள

பகுதியில் மட்டும் விளக்கு போடும் பழக்கம் பெரும்பாலும் யாருக்கும் கிடையாது.மாலை 6 மணி ஆகிவிட்டால் அனைத்து விளக்குகளையும் போட்டு வைத்து நள்ளிரவு வரை அணைக்காமல் வைத்திருப்பது வழக்கமாகிவிட்டது. வீடுகளுக்குள் மட்டுமல்லாமல் வெளிப்புறங்கள், வாகன நிறுத்துமிடம் என எல்லா இடங்களிலும் விளக்குகளை போட்டு வைப்பதாலும் ஒளிமாசுபாடு அதிகரிக்கிறது. எல்லா அறைகளிலும் எந்நேரமும் விளக்குகளை போட்டு வைத்திருப்பதும், கடைத் தெருக்களில் அதிக அளவு ஒளிரும் விளக்குகளை நேரங்காலம் அறியாது 24 மணி நேரமும் பயன்படுத்துவது நம் அனைவரையும் பாதிக்கிறது.

மின்விளக்குகளின் பயன்பாட்டை தவிர்க்க முடியாது இரவில் விழித்திருப்பதற்கு, வேலை செய்வதற்கு, பயணம் செய்வதற்கு என எல்லாவற்றுக்கும் மின்விளக்குகள் அவசியம். மின்விளக்குகள் பயன்படுத்தாவிடில் மனித வாழ்க்கையே உருக்குலைந்து முடங்கிப் போகும்.

எந்த இடத்தில் ஒளி தேவைப்படுமோ, அங்கு மட்டும் ஒளி பெறச் செய்யாமல், எல்லா இடத்திற்கும் பரவும் ஒளி விதமாக மின்விளக்குகளை பயன்படுத்துவதால் தான் ஒளிமாசுபாடு ஏற்படுகிறது. தெளிவாக விண்மீன்களை, வான் பொருட்களையே பார்க்கமுடிவதில்லை.விண்மீன்கள் மின்சார விளக்குகளால் மாயமாகிவிட்டது. ஆனால் தவிர்க்கவேண்டிய ஒளிபயன்பாட்டை கட்டுப்படுத்தி, குறைக்க முடியும்.ஒளியை எல்லை மீறிச் செல்லாமல் கட்டுப்படுத்தும் போது ஒளிமாசுபாட்டைக் குறைக்க முடியும். இன்று உலகளவில் மின்சாரப் பயன்பாட்டில் நான்கில் ஒரு பகுதி மின்விளக்குகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்பதிலிருந்து எந்தளவிற்கு ஆற்றல் விரயத்திற்கான வாய்ப்புள்ளது என்பதை அறியமுடியும். ஆனால் மற்ற மாசுபாடுகளைக் காட்டிலும் ஒளிமாசுபாட்டை பிராந்திய அளவிலேனும் எளிதில் ஒழுங்குபடுத்தமுடியும்.

ஒளி மாசுபாட்டினை முக்கியமாக மூன்றுவிதமாக பிரித்தறியலாம்.

- கண் கூச்சம் (Glaring)
- எல்லை மீறல் (Tresspassing):
- ஒளிக் குழப்பம் (Clutter):




1. **கண் கூச்சம்** (Glaring):

அதிக வெளிச்சத்துடன் விளக்குகளை ஒளிரவிடுவதால் கண்கூச்சம் ஏற்படுகிறது. இதனால் பொருட்களை வேறுபடுத்தி, பிரித்துப் பார்க்கும் கண்ணின் திறன் குறைந்துவிடுவதால் நலக்குறைவை ஏற்படுத்துகிறது.

கண் கூச்சம் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

நலிவுபடுத்தும் கண்கூச்சம் (Discomfort glare):

அதீதமாக ஒளிரும் வெளிச்சத்தை நோக்க நேரிடும் போது ஏற்படும் கூச்சம் நலிவுபடுத்தும் கண்கூச்சம் என குறிப்படுகிறது.

பார்வையை குறைக்கும் கூச்சம்(Disability glare):

அதீத ஒளி சங்கடத்தை ஏற்படுத்துவது மட்டும் அல்லாமல், பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு கண் பார்வையில் தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

குருடாக்கும் கூச்சம்(Blinding glare):

அதீதமாக ஒளிரும் வெளிச்சத்தால் கண்களின் முன் என்ன உள்ளது எனப் பார்க்க முடியாத படி குருடாக்கும் விளைவை ஏற்படுத்துகிறது.

சூரிய ஒளி அதிகம் உள்ள பகல் வெளிச்சத்தில் இருந்துவிட்டு குடியிருப்புக்குள் வரும் போது



கண்ணின் கருமணி சுருங்குவதால் (pupil contraction) எதையும் பார்க்க முடியாதபடி கண் இருண்டுவிடும். கண்ணின் கருமணி விரிவடையும் போது (pupil dilation) தான் குறைந்த வெளிச்சத்தில் பார்க்கமுடியும்.

கண் கூச்சத்தை ஏற்படுத்துகிற ஒளிமூலத்தை கவசம் மூலமாகக் கட்டுப்படுத்தலாம். ஒளியின் செறிவை மட்டுப்படுத்தி, தேவையில்லாமல் அதிக ஒளியை பரவாது தடுக்கப்படும். சரியான திரையை பயன்படுத்தியும்,கட்டுப்படுத்தலாம்,ஒளிக் கவசங்களில் நிறைய வகைகள் உள்ளன. வாகன விளக்குகளுக்குக் கவசமிட வேண்டும்.வாகன விளக்குகளில் மையப் பகுதியில் கருப்பு மையால் கவசமிடுவதன் மூலம் கண் கூச்சம் ஏற்படுவதை தவிர்க்க முடியும். விளக்குகளின் மேல் தொப்பி போன்ற கவசத்தைப் பொருத்துவதன் மூலம் மேல் நோக்கிய ஒளி பரவலை தடுக்க முடியும்.

2.எல்லை மீறல் (Tresspassing):

விளக்குகள் ஒளிரும் போது தேவையான இடங்களில் மட்டும் வெளிச்சம் ஏற்படுத்தாது கூடுதலாக தேவையில்லாத இடங்களுக்கும் வெளிச்சத்தை பரப்புவதையே வரம்பு கடந்து

செல்லுதல் எனப்படுகிறது. ஒளியின் பரவலை வரம்பிட்டு குறைப்பதன் மூலம் இத்தகைய பிரச்சனையைத் தவிர்க்க முடியும்.

வீடுகளில் மின்விளக்குகளை ஒளிரச் செய்யும் போது அதன் ஒளி வீடுகளைக் கடந்து அக்கம் பக்கமுள்ள வீடுகளிலும் ஒளியைப் பாய்ச்சுவதையும் வீட்டிற்கு வெளியே மேல் நோக்கிப் பொருத்தப்படும் விளக்குகள் எல்லா கோணம்/பக்கங்களிலிருந்தும் ஒளியைப் பரப்புவது ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

வரம்பு கடந்து ஒளி பரவுவதைத் தடுக்க துண்டித்தல் (Cut off) என்ற முறை பயன்படுத்தப்படுகிறது.துண்டித்தலின் மூலம் ஒளியின் பரவல் கட்டுப்படுத்தப்படுகிறது.

துண்டிக்கப்படாத ஒளி விளக்கில் எல்லா கோணத்திலும் ஒளி பரவ அனுமதிக்கப்படும். பெரும்பாலும் துண்டிக்கப்படாத ஒளி விளக்குகளே பயன்படுத்தப்படுகிறது.

துண்டித்தல்(cut off) முறையில் ஒரு சிறிய அளவில் பக்கவாட்டாக மேற்பரப்பில் ஒளியூட்ட அனுமதிக்கப்படுகிறது. அரை துண்டித்தல் (semi cut off) முறையில் மேல் நோக்கியும் ஒளி பரவ அனுமதிக்கப்படுகிறது.

முழு துண்டித்தல் (full cut off):

தாழ்புள்ளியிலிருந்து 90 பாகை கோணத்திலோ, அதற்கு மேலோ ஒளி பரவுவது முற்றிலுமாக தடுக்கப்படுகிறது. இம்முறையில் ஒளியானது கீழ் நோக்கி செல்ல மட்டுமே அனுமதிக்கப்படுகிறது, பக்கவாட்டிலோ, மேல் நோக்கியோ ஒளி பரவுவது முற்றிலும் தடுக்கப்படுகிறது. உதாரணமாக இசை நிகழ்வுகளில் மேடையில் பாடுபவரைச் சுற்றி மட்டுமே வட்ட வடிவில் ஒளியூட்டப்பட்டும் மற்ற இடங்கள் இருண்டும் இருப்பது போன்ற ஒளியமைப்புகளை பார்த்திருப்போம். அத்தகைய ஒளியமைப்பே முழு துண்டித்தல் எனப்படுகிறது.

3.ஒளிக் குழப்பம்(Clutter):

ஒரே நேரத்தில் வெவ்வேறு ஒளிமூலங்களிலிருந்து ஒளி பரவும் போது கண் முன் உள்ளவற்றை பார்ப்பதில் குழப்பம் ஏற்படுகிறது. இத்தகைய ஒளிக்குழப்பத்தால் பாதிக்கப்படும் போது வாகன ஓட்டிகள் விபத்துகளுக்குள்ளாகும் அபாய சூழல் ஏற்படுகிறது.

ஒளிரும் வானம் (Sky glow):

நகர்ப்புறங்களில் மின் விளக்குகளால் உருவாக்கப்படும் எல்லா ஒளியும் வான் நோக்கிப் பரவி அங்கே ஒரு ஒளிர்வு மாடத்தை(dome)ஏற்படுத்துகிறது. இந்த ஒளிர்மய பின் புலம் நட்சத்திரங்களைத் தெளிவாகப் பார்க்க முடியாமல் இருட்டடிப்பு செய்கிறது. இதுவே ஒளிரும் வானம் என அழைக்கப்படுகிறது.

வான் பார்த்தலே வானியலாரின் ஆய்வுக்களம்.நல்ல இருண்ட வானத்தில் பால்வெளி மண்டலம் (ஆகாய கங்கை) அழகுடன் மிளிர்வதைக் காண முடியும். ஒளிமாசுபாட்டினால் ஏற்படும் ஒளிரும் வானம் (Sky glow) வானியல் வல்லுனர்களின் ஆய்வுகளை பாதிக்கிறது. வானவியல் நிபுணர்கள் தொலை நோக்கி மூலமாக ஆய்வு செய்யும் போது இயல்பாகத் தெரியும் பால்வெளி மண்டலம், விண்மீன் கூட்டங்கள் ஆகியவற்றைப் பிரித்தறிய முடியாத அளவிற்கு ஒளி மாசுபாடு அவர்களது ஆய்வுகளை தடுக்கிறது. நிறைய ஒளி தடுப்பான்களை பயன்படுத்தும் போது கூட அவர்களால் தெளிவாக பிரித்தறிய முடியாத நிலை ஏற்படுகிறது. ஒளிமாசு குறைந்தால் தான் அவர்களால் சிறப்பாக ஆய்வு செய்யமுடியும். ஆகவே இரவு நேரத்தில் ஏற்படும் ஒளி மாசைக் குறைக்கவேண்டியது மிகவும் அவசியம்.

போக்குவரத்தினால் ஏற்படும் புகை மாசையும், காற்று மாசையும் புகை மூட்டமாக மாறவிடாமல் தடுக்கும் வேதிவினை இரவு நேரத்தில் மட்டுமே நிகழ்கிறது. இந்த வேதிவினை நடைபெற நைட்ரேட் அயனிகளும் ஒளி குறைந்த இருளான சூழலும் தேவைப்படுகிறது.ஆனால் ஒளிமாசுபாட்டினால் இந்த வேதிவினை தடைபடுகிறது.ஆகவே வாகனப் போக்குவரத்தால் புகைமூட்டம் ஏற்படுவதற்கு, ஒளி மாசுபாடும் முக்கிய காரணமாக உள்ளது. புதை படிவ எரிபொருட்கள் மூலமாகத் தான் பெருமளவு மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்பதால் மின்விளக்குகளை அதிகமாக பயன்படுத்துவது நேரடியாக இல்லாவிட்டாலும், சுற்றடியாக புதை படிவ எரிபொருள்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துகிறது. இரவு நேரத்தில் மின்விளக்குகளை அதிகமாக பயன்படுத்துவதால், 12 மில்லியன் டன் கார்பன்-டை-ஆக்சைடு கூடுதலாக உமிழப்படுகிறது.இவ்வளவு கார்பன் டை ஆக்சைடை உட்கிரகிப்பதற்கு 702 மில்லியன் மரங்கள் தேவைப்படும் என்று ஆய்வுகள் கூறுகிறது.அந்த அளவுக்கு அதிக கார்பன் டை ஆக்சைடு ஒளி மாசுபாட்டினால் மட்டுமே உமிழப்படுகிறது. இவ்வாறு ஒளி மாசுபாடு காற்று மாசுபாடு

அதிகரிக்கவும், காரணமாக உள்ளது.கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வு அதிகரிக்கவும் காரணமாக உள்ளது.ஆகவே ஒளி மாசுபாட்டைக் குறைப்பதன் மூலம் காற்று மாசுபாட்டையும் குறைக்கமுடியும்.

ஒளி மாசுபாட்டால் ஏற்படும் உடல் நலப் பிரச்சனைகள்

ஒளிப் பயன்பாட்டை சரியாக மேலாண்மை செய்யாததால் தான் இத்தகைய மாசுபாட்டு பிரச்சனைகள் ஏற்படுகிறது.வானத்தின் நட்சத்திரங்களை பார்க்கமுடியாதது மட்டும் பிரச்சனை அல்ல.இந்த உலகத்தில் உள்ள எல்லா உயிரினங்களும் சூரிய குடும்பத்தின் அங்கத்தினர் என்பதை மறந்துவிடக்கூடாது. சூரிய ஆற்றல், இரவு பகல் சுழற்சியின் அடிப்படையில் தான் எல்லா உயிரினங்களும் இயங்கி வருகின்றன. இரவு பகல் சுழற்சிக்கு தகுந்தாற் போல் இயங்குவதற்காக எல்லா உயிரினங்களின் உடலிலும் ஒரு உயிரிகடிகாரம் (bio clock) செயல்படுகிறது. மூளை செயல்பாடு, ஹார்மோன் சுரப்பு, இயங்குமுறை ஆகியவற்றை இது ஒழுங்குபடுத்துகிறது. உயிரிகடிகாரத்தின் மூலமே உயிரிகளின் உடலியல் செயல்பாடுகள் அந்தந்த நேரத்திற்கான வேலைகளை செய்யுமாறு இயக்கப்படுகிறது. எப்படி சூரியகாந்தி பூ சூரியனை நோக்கி ஒளித் தூண்டலால் மலர்கிறதோ, அது போல் நம் உடலிலும் பல தூண்டல் செயல்பாடுகள் உள்ளன. மனித உடலிலும் ஒரு உயிரிக் கடிகாரம் உள்ளது. உயிரினங்களில் மனிதர்கள் மட்டும் விதிவிலக்காக மின் விளக்குகளை அதிகம் பயன்படுத்துவதால் நமது பகல் நேரம் அதிகரித்துள்ளது. இது நம் உடல் நலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வயதில் மூத்தவர்கள், மின்சார வசதி இல்லாத கிராமப்புறங்களை சேர்ந்தவர்களிடம் அதிகாலையில் கண் விழிக்கும் பழக்கம் இருப்பதைக் காணமுடியும். சூரியன் உதிக்கும் போது வேலையைத் தொடங்கி, சூரியன் மறைவதற்குள் வேலைகளை முடித்துவிட்டு இரவில் சீக்கிரமே உறங்கச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருப்பதையும் பார்க்க இயலும்.இத்தகைய வாழ்க்கைமுறையால் உயிர்கடிகார ஒழுங்குமுறை பாதிக்கப்படாது என்பதால் உடலுக்கு நலம் பயக்கும்.

ஆனால் இப்பொழுதெல்லாம் இரவில் 12 மணி வரை விழித்திருப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. குறிப்பாக இளைய தலைமுறையினர் இரவில் அதிக நேரம்

விழித்திருக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.இது உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மனித உடலில் மெலடோனின் என்ற ஹார்மோன் தூக்கம் சார்ந்த செயல்பாடுகளையும்,உடல் இயக்கத்தையும், உறுப்புகளின் செயல்பாட்டையும் ஒழுங்குமுறை செய்கிறது. இரவில் நல்ல இருண்ட சூழலில் உறங்கும் போது மட்டுமே மெலடோனின் சுரப்பு இயல்பாக உள்ளது.

இரவு தூக்கம் என்பது மொத்தத்தில் 5 சுழற்சிகளை கொண்டிருக்கும் என்றும் 71/2 மணி நேரம் உறங்குவது நல்ல நிறைவான தூக்கத்தைத் தரும் என்று உறக்கம் குறித்து ஆய்வு செய்த விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.நான்கு நிலைகளை கொண்ட தூக்க சுழற்சி 5 முறை ஏற்படுவதற்கு 71/2 மணி நேரம் தேவைப்படுகிறது. உறக்கத்தின் போது 5 முறை தூக்க சுழற்சி நடைபெற்றால் தான் நிறைவான தூக்கம் கிடைக்கும். நிறைவான தூக்கம் இருந்தால் தான் உடல் நலத்துடன் மனப்பிரச்சனைகள் இல்லாது நாம் செயல்பட முடியும்.

பகலில் தூங்கி, இரவில் விழித்திருப்பதாலும், இரவிலும் விளக்குகளை அணைக்காமல் தூங்குவதாலும் மெலடோனின் சுரப்பது குறைவதனால் நம் உடலில் பல பிரச்சனைகளை ஏற்படுகிறது. தலைவலி, உடல் சோர்வு, மனச்சோர்வு, மனச்சிதைவு, உடல் பருமன், பதட்டம், மன அழுத்தம், இதய நோய், தூக்க நோய்கள், போன்ற பல பிரச்சனைகள் ஏற்படுகிறது. இதனால் நோய் எதிர்ப்பு மண்டலமும் பாதிக்கப்படுகிறது. இரவில் அதிக நேரம் விழித்திருப்பதாலே பலருக்கு மன நலப் பிரச்சனைகள் ஏற்படுகிறது. இரவில் வேலை செய்பவர்களுக்கு புற்று நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எவ்வளவு ஊதியம் பெற்றாலும் இரவில் வேலை பார்ப்பதால் ஏற்படும் உடல்நலக் குறைவை சரி செய்யமுடியாது என்பதால் பெரும்பாலும் இரவில் வேலை செய்வதை அறவே தவிர்ப்பது உடலுக்கு நல்லது. முன் தூங்கி, முன் எழுவதே உடலுக்கு நல்லது. இயற்கையுடன் ஒத்துப் போகாத தூக்கமுறையால் நம் உடலில் உள்ள உயிரிக் கடிகார செயல்பாடுகளின் சமநிலை பாதிப்பதால் பிரச்சனைகளை ஏற்படுகிறது என்ற விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தவேண்டும்.

கண்ணுக்கு மட்டும் தான் ஒளியை உணரும் திறன் உள்ளது என நினைப்போமானால் அது தவறு.

நம் தோலில் உள்ள எல்லா செல்களுக்கும், ஒளி உணர்திறன் உள்ளது. முகத்தை/ கண்ணை மட்டும் இருள் பெறுமாறு மூடிக்கொண்டு உடலின் பிற பாகங்கள் வெளிச்சத்தில் இருக்குமாறு தூங்கும் போதும் பாதிப்புகளை அறவே தவிர்க்கமுடியாது. தூங்கும் போது உடல் முழுவதும் இருண்ட சூழலில் இருக்குமாறு தூங்குவது உடலுக்கு நலம் பயக்கும்.

இன்று நாம் தொலைக்காட்சி, கணினி, கைபேசி ஆகிய மின்சாதனங்களை அதிகமாக பயன்படுத்துகிறோம். அவ்வாறு பயன்படுத்தும் போது அவற்றின் திரை வெளிச்சத்தைக் குறைவாக வைத்துப் பயன்படுத்துவது நல்லது. கைபேசி, கணினி ஆகியவற்றிலிருந்து நீல ஒளி உமிழப்படுகிறது. நீல ஒளி மெலடோனின் சுரப்பதை அதிகமாக பாதிக்கிறது. பச்சை நிற ஒளியும் அதே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சிகப்பு நிற ஒளி தான் மெலடோனின் சுரப்பில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்துவது.

மின்விளக்குகளில் ஒளிஉமிழும் டையோடு விளக்குகள் அதிக ஆற்றல் திறம் கொண்டவை. நீல நிற ஒளிஉமிழும் டையோடு விளக்குகளை பயன்படுத்துவது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்பதால் வெள்ளை நிற ஒளிஉமிழும் டையோடுகளை பயன்படுத்தவேண்டும்.

ஒளி மாசுபாடு மனிதர்களிடம் மட்டும் உடல் நல பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. உயிரினங்களின் பன்மைத்துவம், குறைவதற்கும் ஒளி மாசுபாடும் காரணமாக உள்ளது.ஒளிமாசுபாட்டால் பல்வேறு உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒளிமாசுபாட்டால் இரவில் விழித்திருக்கும் உயிரினங்களின் இரை தேடுதல், தூக்க சுழற்சி, இடப்பெயர்வு, இனப்பெருக்கம் வாழ்க்கைமுறை என அனைத்துமே பாதிக்கப்பட்டுள்ளது.ஆந்தை போன்ற இரவில் விழிப்போடு இருக்கும் உயிரினங்களால் நிலவொளியில் தான் இரை தேடமுடியும். மின் விளக்குகளால் ஏற்படும் செயற்கை வெளிச்சம், அவற்றின் பார்வையையும், இரை பிடிக்கும் திறனையும் பாதிக்கிறது. வேட்டையாடும் விலங்குகளுக்கும், இரையாகும் விலங்குகளுக்கும் இடையே உள்ள உறவுகளையும் பாதிக்கிறது, சில விலங்குகள் எளிதில் இரையாவதற்கும் வழி வகுக்கிறது.

ஒளிமாசுபாட்டால் பறவைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பறவைகள் வலசை போவதையும், பறவைகளின் இடப்பெயர்வையும் ஒளிமாசுபாடு பெரிதும் பாதித்துள்ளது. பகலில் பறந்து சென்றால் உடலிலிருந்து அதிக நீரிழப்பும், அயற்சியும் ஏற்படும் என்பதால் பறவைகள் இரவு நேரத்தில் இடம்பெயர்வு செய்கின்றன.இரவில் இடம் பெயரும் பறவைகளுக்கு வானில் உள்ள ஒளிரும் நட்சத்திரங்கள் தான் திசைகாட்டியாக செயல்படுகிறது, அதன் வழிகாட்டுதலிலே பறவைகள் புலம்பெயருகின்றன.ஆனால் ஒளி மாசுபாட்டால் நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரியாததால் பறவைகள் திசை மாறி செல்கின்றன.

சூரிய ஒளியானது தளவிளைவுக்குட்படாத ஒளி, எல்லா தளங்களிலும் அதிர்வுகளை கொண்டுள்ளது. நிலவொளி என்பது தளவிளைவுக்குட்பட்ட ஒளி(polarized light), ஒரு தளத்தில் மட்டும் அதிர்வுகளை கொண்ட ஒளி ஆகும். பெரும்பாலான பறவைகளும், விலங்குகளும் தளவிளைவுக்குட்பட்ட நிலவொளியை பயன்படுத்தியே இடம் பெயருகின்றன. ஆனால் மின் விளக்குகளால் பெறப்படும் ஓளி தளவிளைவுக்குட்படாத ஒளியாகவோ, செயற்கையாக தளவிளைவுக்குட்பட்ட ஒளியாகவோ உள்ளது.ஒளிமாசுபாட்டால் பறவைகளும், விலங்குகளும் திசைதெரியாது குழம்பிப் போகின்றன, அவற்றின் பழக்கவழக்கங்களையும், சூழலுடனான இடையுறவும் இதனால் கடுமையாக பாதிக்கப்படுகிறது. அதிக வெளிச்சத்துடன் காணப்படும் இடங்களுக்கு பறவைகள் திசை மாறி செல்கின்றன, கலங்கரை விளக்கம், காற்றாலைகளில் மோதி எண்ணற்ற பறவைகள் இறந்துள்ளன.இரவு நேர மின் விளக்குகளால் எது பகல் எது இரவு என தெரியாது குழம்பிப் போவதால் பறவைகள்,விலங்கின்ங்களின் இயல்பான ஓய்வு நிலை பாதிக்கப்படுகிறது. ஒளிமாசுபாட்டால் அவற்றின் இயல்பான வாழ்க்கை சுழற்சி அச்சுறுத்தப்பட்டுள்ளது.

ஆமைகள் தவளைகள் போன்ற இரு வாழ்விகளும் ஒளி மாசுபாட்டால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.இருண்ட பகுதிகளில், பாதுகாப்பான இடங்களில் தான் இருவாழ்விகள் முட்டையிடும்.ஆனால் ஒளிமாசுபாட்டால் அவற்றின் இனப்பெருக்கமும் பாதிக்கப்படுகிறது, முட்டையிலிருந்து குஞ்சு பொறித்தவுடன் ஆமைக் குஞ்சுகள் இயல்பாக கடலை நோக்கியே செல்லவேண்டும். ஆனால் கடற்கரையோரங்களில் மின்விளக்குகள் எரிவதால் அவை திசை மாறி செல்கின்றன, மற்ற விலங்கினங்களுக்கும் இரையாகின்றன.

மின்விளக்குகள் பூச்சி இனங்களை பொறி போல் கவர்கிறது. இதனால் பூச்சிகளின் எண்ணிக்கை குறைவதால், பூச்சிகளை உண்ணும் பறவைகள், விலங்கினங்களும் பாதிக்கப்படுகின்றன. இரவில் பூக்கும் தாவரங்களுடைய வாழ்க்கை சுழற்சியும் ஒளிமாசுபாட்டால் பாதிக்கப்படுகிறது.

அதிக ஒளி வெள்ளத்தை ஏற்படுத்தும் அதிக வாட் திறனுடைய விளக்குகளை தவிர்க்கவேண்டும்.வெள்ளை ஒளியை உமிழும் காம்பாக்ட் ஃப்ளோரசன்ட் விளக்குகள் (CFL) ஒளி உமிழும் டையோடு பல்புகளைத் பயன்படுத்துவது நல்லது. இயக்கத்தை உணரும் உணரி(sensor) பொருத்தப்பட்ட விளக்குகளை பயன்படுத்துவது நல்லது. பகல் வேலைகளிலும் சாலைகளில் விளக்குகள் எரிவதைத் தவிர்க்க வேண்டும். சென்சார் பொருத்தப்பட்ட சாலை விளக்குகளை பயன்படுத்த வேண்டும். வீடுகளிலும் சரி, வெளியிடங்களிலும் சரி பகல் வேளையில்/ தேவையில்லாத நேரத்தில், தேவையில்லாத இடங்குகளில் மின்விளக்குகளை ஒளிரச் செய்வதை அறவே தவிர்க்கவேண்டும். தொலைக்காட்சியை பார்க்காத போது நிறுத்துவதும், வேண்டும்.தூங்கும் போது கைபேசி, மின் சாதனங்களை அணைத்து விடுவதும் மிகவும் அவசியம். ஒளி பயன்பாட்டு அளவைக் குறைக்க ஆற்றல் திறம் மிக்க ஐடிஏ சான்றிதழ் பெற்ற விளக்குகளை பயன்படுத்துவது நல்லது.வானத்தில் உள்ள நட்சத்திரங்களை மின்விளக்குகள் இருட்டடிப்பு செய்கிறது.இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டுவர சர்வதேச இருண்ட வானத்திற்கான கூட்டமைப்பு (IDA) போன்ற பல அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.

அந்தந்த இடத்திற்கு அந்தந்த நேரத்திற்கு எவ்வளவு வெளிச்சம் வேண்டுமோ அந்தளவுக்கு குறைவாக மட்டுமே வெளிச்சம் கிடைக்குமாறு விளக்குகளை பயன்படுத்தவேண்டும். வீட்டுக்குள் உள்ள வெளிச்சம் வெளியில் செல்லாதவாறு இருக்க திரைச்சீலைகள்,தடுப்பான்களை பயன்படுத்தவேண்டும். விளக்குகளுக்கு கவசமிடுவதன் மூலம், தேவையில்லாத மேல் நோக்கிய, பக்கவாட்டு ஒளிபரவலை தவிர்க்க வேண்டும். எந்த இடத்தில் புழங்குகிறோமோ அங்கு மட்டும் விளக்கு போடுவது நல்லது. வீடெங்கும் விளக்கு போட்டால் தான் வீட்டிற்கு மஹாலெட்சுமி வருவாள் என்ற மூடப்பழக்கத்தால் ஆற்றலை விரயம் செய்து, ஒளிமாசுபாட்டால் உயிர்ச்சூழலை அச்சுறுத்த வேண்டாமே.இரவில் நீண்ட நேரம் விளக்குகளை எரிய விடாது இரவு 10-11 மணிக்குள் விளக்குகளை அணைத்து விடவேண்டும்.

## ஒலி மாசுபாடு:

ஒலியானது டெசிபல் என்ற அலகால் அளவிடப்படுகிறது. 70 டெசிபலுக்கு மேல் உள்ள ஒலியே இரைச்சல் எனப்படுகிறது. வாகனங்களின் போக்குவரத்து, கட்டுமான வேலைகள், விளம்பர ஒலிபரப்புகள், பாடல், இசை ஒலிபரப்பு என பல்வேறு நிகழ்வுகளால் இரைச்சலான சூழல் ஏற்படுகிறது. வீடு, தொழிற்சாலைகளில் எந்திர பயன்பாடு, தொலைக்காட்சி, ஜெனரேட்டரை இயக்குவதாலும் இரைச்சல் ஏற்படுகிறது. இரைச்சலான சூழலில் தொடர்ந்து இருப்பதும் உடல் நல பாதிப்புகளை ஏற்படுத்தும்.ஒலி மாசுபாட்டினால் இரத்த அழுத்தம் ஆஸ்துமா, நுரையீரல் பிரச்சனைகள் ஏற்படுகிறது, காதின் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது. இதய செயல்பாட்டிலும், ரத்த ஓட்டத்திலும் பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. ஒலிப்பான், தலையணி கேட்பொறி (head-phone) ஆகியவற்றை அதிக நேரம் பயன்படுத்துவதால் காதின் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது.அதிக ஒலி மாசுபாட்டினால் குழந்தைகளின் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.இரைச்சலான சூழலில் வாழும் குழந்தைகளுக்கு கவனச்சிதறல் நோய் ஏற்படுகிறது, அவர்களின் நினைவுத்திறனும் பாதிக்கப்படுகிறது.

100 டெசிபல் ஒலியை 2மணி நேரம் தொடர்ந்து கேட்டால் அதற்கு 16மணி நேரம் ஓய்வெடுக்க வேண்டுமாம்.தூங்கும் போது 35 டெசிபலுக்கு மேல் ஒலி இல்லாமல் அமைதியான சூழல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

20 முதல் 20,000 ஹெர்ட்ஸ் அதிர்வெண் கொண்ட ஒலியையே மனிதர்களால் கேட்க முடியும். 20 ஹெர்ட்ஸை விட குறைவான அதிர்வெண் கொண்ட ஒலி தாழ் ஒலி (infrasonic) என்றும், 20,000 ஹெர்ட்ஸை விட அதிக அதிர்வெண் கொண்ட ஒலி மீயொலி(ultrasonic) என்றும் அழைக்கப்படுகிறது. மனிதர்களால் தாழ் ஒலியையும், மீயொலியையும் கேட்க முடியாது. வெளவால், எலி, கடல் பன்றி, பூச்சியினங்கள் மீயொலியை பயன்படுத்துகின்றன.யானை, மயில்,முதலை, நீர் யானை, காண்டாமிருகம், திமிங்கிலம் ஆகிய விலங்குகள் தாழ் ஒலி மூலம் தகவல்தொடர்பு கொள்கின்றன. பறவைகள் காற்று, மலைகளிலிருந்து தாழ் ஒலிகளை பயன்படுத்தி இடப்பெயர்வு செய்கின்றன. மனித நடவடிக்கைகளால் ஏற்படும் தாழ் ஒலி (infrasonic), மீயொலி(ultrasonic) ஆகியவற்றை மனிதர்களால் உணர முடியாத போதும் அவற்றைப் பயன்படுத்தும் மற்ற உயிரினங்கள் பாதிக்கப்படுகிறது.

ஒலிமாசுபாட்டல் மற்ற உயிரினங்களின் தகவல் தொடர்பும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக பாடும் பறவைகள் இதனால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. ஒலி மாசுபாட்டால் கிராமப்புறத்தில் உள்ள பறவைகளைக் காட்டிலும் நகர்ப்புறத்தில் உள்ள பறவைகள் வழக்கத்தை விட சீக்கிரமாக எழுந்துவிடுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பகலில் பாடும் பறவைகள் பகலில் அதிக இரைச்சல் காணப்படுவதால் இரவில் பாடுகின்றன. மனித சமூகம் பறவைகளையும் 'நைட் ஷிப்டுக்கு' மாற்றியுள்ளது.

ஒலி காற்றை விட நீரில் வேகமாக பயணிப்பதால் நீரில் வாழும் விலங்கினங்கள் ஒலி மாசுபாட்டால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. புதை படிவ எரிப்பொருட்களையும், தாதுக்களையும் எடுப்பதற்காக கடல் பகுதிகளிலும் துரப்பண பணிகள், சுரங்க வேலைபாடுகள் செய்யப்படுவதால் அதிக இரைச்சல் ஏற்படுகிறது. டால்பின்கள், திமிங்கிலங்கள், ஒலி மூலமாகத் தான் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்றன. கப்பல் படையினர் வேவு பார்ப்பதற்காக சோனார் ஒலிக்கருவியை பயன்படுத்துகின்றனர். இதனால் அதிக இரைச்சல் ஏற்படுவதால் கடல் வாழ் உயிரினங்களின் தகவல் தொடர்பும் இயல்பான வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது.துறவி-நண்டுகளின் கூட்டினை தேர்ந்தெடுக்கும் போக்கும் இரைச்சலால் மாற்றத்திற்குட்படுகிறது. கணவாய் மீன்கள் நீரினை வடிகட்டி உணவினைப் பெறும் போது அதன் மூலம் கீழே வாழும் உயிரினங்களுக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்கும். இரைச்சலால் கணவாய்களின் உணவூட்டமும் பாதிக்கப்படுகிறது. இரைச்சலால் சிப்பிகளின் வால்வுகள் மூடிக்கொள்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஒலி மாசுபாட்டால் ஏற்படும் எதிர்மறை தாக்கங்களை குறைக்க நம்மால் இயன்ற அளவிற்கு வீடுகளிலும், வெளிப்புறங்களில் இரைச்சலை குறைக்கவேண்டும். தேவையில்லாத ஒளியைக் குறைப்பதன் மூலம் ஆற்றல் விரயத்தையும் குறைக்கலாம், ஒளி மாசுபாட்டினால் ஏற்படுகிற சூழலியல் தாக்கங்களையும் குறைக்கலாம்.

அதீத ஒலியும் ஒளியும், மாசுபாடு என்பதே பெரும்பாலானோருக்கு தெரியாமல் உள்ளது என்பதால் இது குறித்த விழிப்புணர்வை பரவலாக எடுத்துச் செல்ல வேண்டும். ஒலி,ஒளிமாசை

குறைத்து, பெரும்பாலும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறையை பின்பற்றும் போது நம் உடல் நலமும் மேம்படும்.

---

## நாடு நமதே! நகரமும் நமதே!

*தியாகு*

### வசிப்பிட உரிமையும் வாழ்வுரிமையும்



சென்ற சூலை 29 வியாழன் காலை சென்னை அரும்பாக்கம் இராதாகிருஷ்ணன் நகர் குடிசைப் பகுதிக்குள் மாநகராட்சி அதிகாரிகள் காவல்துறையினருடனும் பெரிய இடிபொறிகளுடனும் நுழைந்து வீடுகளை அகற்றத் தொடங்குகிறார்கள். மக்களின் கதறலை அவர்கள் பொருட்படுத்தவில்லை. செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகர்கள் அதிகாரிகளிடம் கேட்கும் போது "இவர்களுக்கு முன்பே அறிவிக்கை கொடுத்து விட்டோம். புளியந்தோப்பு கே.பி. பூங்கா பகுதியில் இவர்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது" என்ற விளக்கம் கிடைக்கிறது. தங்களுக்கு முறையான முன்னறிவிப்பு தரப்படவில்லை என்று மக்கள் முறையிடுகின்றார்கள்.கட்டடத் தொழிலாளர் சங்கத் தலைவர்களில் ஒருவரான கீதா நேரில் சென்று எதிர்ப்புத் தெரிவித்தும் பயனில்லை. அவர் மக்களில் சிலரை அழைத்துக் கொண்டு குடிசை மாற்று வாரிய



அலுவலகத்தில் மனுக் கொடுக்கப் புறப்பட்டுச் செல்கிறார். யாராவது வந்து இந்த வீடுடைப்பைத் தடுத்த நிறுத்த மாட்டார்களா? என்று மக்கள் தவித்து நிற்கின்றனர்.

இங்குள்ள கிட்த்தட்ட 400 குடியிருப்புகளில் அரசு 243 குடியிருப்புகளை மட்டும் அங்கீகரித்துள்ளது. இவற்றுள் முதல் கட்டமாக 120 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. இவற்றில் 93 குடும்பங்களுக்கு மட்டும் கே.பி. பூங்காவில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிட்டத்தட்ட 25 குடும்பங்களுக்கு வீடு ஒதுக்கப்படவில்லை. அவர்கள் நடுத்தெருவில் நிற்கும் நிலை! இப்படி விடுபட்டவர்களுக்கு வேறிடத்தில் (பெரும்பாக்கம் அல்லது கண்ணகி நகர்) ஒதுக்கீடு செய்வதாக மாநகராட்சி உறுதியளித்துள்ளது. இது அவர்களுக்குத் தண்டனை போலத்தான்!

இதற்கிடையில் இராதாகிருஷ்ணன் நகரில் அடுத்தக் கட்ட வெளியேற்றத்துக்கான ஏற்பாடுகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். அங்கிருப்பவர்களில் சிலர் மறுகணக்கெடுப்பு செய்யுமாறு கேட்டுள்ளனர். எத்தனைக் குடும்பங்கள் அங்கு வசிக்கின்றன என்ற புதிய கணக்கை வெளியிட்டு அதற்கேற்ப மீள் குடியேற்றம் செய்யக் கோரியுள்ளனர். அருகிலுள்ள திருமங்கலத்திலேயே வீடு

ஒதுக்கித்தர இயலும். கே.பி. பூங்காவில்தான் என்றாலும் புதிய கணக்கெடுப்பின் படி மீள் குடியேற்றம் செய்யலாம். ஆனால் வீடுகளை இடிப்பதாக இருந்தால் முன்னறிவிப்புச் செய்ய வேண்டும் என்பதும் அவர்களின் நியாயமான கோரிக்கை. ஆக, அரும்பாக்கம் இராதாகிருஷ்ணன் நகர் சிக்கல் இன்னும் முடியவில்லை. அரசு உடனடியாகத் தலையிட்டு மக்களின் அல்லலுக்கும் அலைக்கழிப்புக்கும் முற்றுப்புள்ளி வைக்குமாறு மக்கள் இயக்கங்கள் கோர வேண்டும்.

பெருந்தொற்றுக் காலத்தில் எல்லா வகையிலும் மக்கள் நெருக்கடிக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும் போது இந்த அதிரடி வீடகற்றல் தேவைதானா? என்று கேட்டால், கூவம் ஆற்றங்கரையில் கட்டப்பட்டுள்ள இந்த வீடுகளை அகற்றா விட்டால் மழை வெள்ளத்தில் நீர்வழி தடைப்படும் என்று காரணம் சொல்லப்படுகிறது. சென்னையில் ஓடும் பக்கிங்காம் கால்வாய், கூவம், அடையாறு கரைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டு மாற்றுக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்வதாகவும், ஒரே ஒரு குடும்பம் கூட நடுத்தெருவில் நிற்க நேரிடாது என்றும் மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி உறுதியளிக்கிறார்.

11 மாடி மற்றும் 9 மாடி அடுக்ககத்தில் குடியிருப்பு ஒதுக்கப் பெற்றவர்கள் பெரும்பாலும் மன நிறைவடைந்திருப்பதாக ஊடகங்கள் கூறுகின்றன. ஆற்றங்கரைக் குச்சுடன் ஒப்பிட்டால் ஓங்கியுயர்ந்த அடுக்ககம் என்பது அவர்களுக்கு மகிழ்வாகத்தான் இருக்கும். கடந்த காலத்தில் வெளியேற்றப்பட்டவர்கள் ஊருக்கு வெளியே பெரும்பாக்கம், கண்ணகி நகர், எழில் நகர் என்று தூக்கி வீசப்பட்டது போல் இல்லாமல் இப்போது சென்னை நகருக்குள்ளேயே குடியிருப்பு கிடைத்திருப்பது பெரிய ஆறுதல்தான். ஆனால் அடுக்ககத்தில் குடியிருப்பதால் வரக்கூடிய சிக்கல்களை இவர்கள் விரைவில் பட்டறிவார்கள். இந்த உயர்ந்த பலமாடிக் கட்டடங்கள் நிலத்தடி நீரை வற்றச் செய்து விடும். தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும் போது பெரும்பாடாகி விடும். இந்த அடுக்ககங்களுக்கு இடைவெட்டில்லா மின்சாரம் இல்லாமல் முடியாது. மின்தூக்கி இயங்காமல் போனால் மாடிக் குடியிருப்பகங்களுக்குப் போய்வர முடியாது.

இந்த அடுக்ககங்களில் முன்பு ஒதுக்கீடு பெற்றவர்களிடம் அவர்களது பங்களிப்பாக வீட்டுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வீதம் தண்டியுள்ளனர். இப்போது இலவச ஒதுக்கீடு பெற்றவர்களும் மாதந்தோறும் பேணுகைக் கட்டணம் (இப்போது ரூ.700/- அளவில்) செலுத்த வேண்டுமாம்.

அவர்களுக்கு இதுவே பெருந்தொகைதான். முப்பது நாற்பது ஆண்டுகளாக வசித்த இடத்தை இழந்தவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கும் போது எந்தப் பெயரிலும் எவ்விதக் கட்டணமும் தண்டலாகாது. மீள்குடியேற்றப்படுகிறவர்களுக்குப் புதிய குடியிருப்பின் மீதான அவர்களின் உரிமை முறையாக எழுத்து வடிவில் உறுதி செய்யப்பட வேண்டும். அதிகாரிகள் அல்லது அரசியலாரின் தயவில் அவர்கள் வாழும் நிலை கூடாது.

பல்லாண்டு காலம் ஓரிடத்தில் குடியிருந்து இப்போது வசிப்பிடத்தைப் பறிகொடுத்துத் தெருவில் நிற்கும் குடும்பங்களுக்கிடையே பாகுபாடு காட்டுவதில் நியாயமில்லை. வசிப்பிடத்தால் மட்டும் வயிறு நிறைந்து விடாது. பிழைப்பு வழியை இழந்து தொடர்பற்ற தொலைதூரத்தில் வசிப்பிடம் பெறுவதால் என்ன பயன்? இந்த மக்கள் பெரும்பாலும் அன்றாடங்காய்ச்சிகள். தாங்கள் வசிக்கும் பகுதியை ஒட்டியே வேலை செய்கிறவர்கள். இவர்களில் சிலரைத் தொலைவாகத் தூக்கி வீசினால் பிழைப்பு போய் விடும். முன்பு இப்படித் தூக்கி வீசப்பட்டவர்கள் பட்டு வரும் துன்பத்தையே இவர்களும் பட வேண்டியிருக்கும். இராதாகிருஷ்ணன் நகர் நிகழ்ச்சிகளுக்குப் பின் அதிகாரிகள் பெரும்பாக்கம், கண்ணகி நகர் என்று பேசுவதைக் குறைத்துள்ளனர். பெரும்பாக்கம், கண்ணகி நகர், எழில் நகர் கல்குட்டை மக்களின் நெடுநாளைய கோரிக்கைகள் நிறைவேறவும் இந்தத் தருணம் பயன்பட வேண்டும்.

செய்யும் வேலை அல்லது தொழிலைப் பொறுத்து அண்மையிலேயே அவர்களுக்கு வாடகை இல்லாமலோ மிகக் குறைந்த வாடகைக்கோ குடியிருப்பு வழங்குவது அரசின் கடமை.

அனைத்துக்கும் முதலாவதாகக் குழந்தைகளின் கல்வியை மையப்படுத்தி அரசு இச்சிக்கலை அணுக வேண்டும். எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்து எண்ணும் எழுத்தும் இல்லாமல் வளர்த்து விடுவது அவர்களுக்கோ பொதுக் குமுகத்துக்கோ நல்லதன்று. வசிப்பிட உரிமையை உறுதி செய்யாமல் கல்வியுரிமையை உறுதி செய்ய முடியாது.

சென்னைக்கு நடுவில் மக்களுக்குக் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்க இடமில்லை என்பது பொய். கிண்டி குதிரைப் பந்தயத் திடல், கால்ஃப் விளையாட்டுத் திடல், இராயப்பேட்டையில் ஆற்காடு நவாப் அரண்மனை, நகரின் பல பகுதிகளிலும் பெருஞ்செல்வந்தர்களின் விரிந்து பரந்த மாளிகைகள் … இவற்றையெல்லாம் அரசு கைப்பற்றி அடித்தட்டு இடைத்தட்டு மக்களுக்கு வீடு கட்டித் தரலாம். நகரப்புற நில உச்சவரம்பு என்னாயிற்று?

இராதாகிருஷ்ணன் நகரில் போலவே அடுத்தடுத்து இன்னும் பல பகுதிகளில் வீடுகள் அகற்றப்படவுள்ளன என்று செய்தி! எடுத்துக்காட்டாக கோட்டூர்புரத்தில் குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளை இடிக்கத் திட்டமாம். ஆற்றங்கரைச் சேரிகளை அகற்றுவதாக இருந்தால் அங்கு வசிப்பவர்களுக்கு மாற்றுக் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்து அவர்களை அங்கு குடியேறவும் செய்து விட்டு அவர்களின் ஒப்புதலுடனேயே பழைய வீடுகளை அகற்ற முடியுமே! இடிபொறிகளும் காவல் தடிகளும் திடீர்ப் படையெடுப்பும் தேவையில்லையே? நீர்வழிகளைப் பாதுகாப்பதிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலும் குடிமக்களை முழுமையாக ஈடுபடுத்தலாமே? மழை வெள்ளத்தில் பாரிய அளவில் துயரப்படுவது ஏழை எளிய மக்கள்தாமே? அது அவர்களுக்கே தெரியும்தானே?

அரசிடம் வெளிப்படைத்தன்மை வேண்டும். அதிகார வர்க்கத்தையும் அரசியல் பிழைப்பாளர்களையும் பேட்டை 'பிஸ்தா'க்களையும் சார்ந்து செயல்படாமல், உழைக்கும் மக்களைச் சார்ந்து செயல்படுவதே எந்தத் திட்டத்தின் வெற்றிக்கும் வித்தாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏழை எளிய ஒடுக்குண்ட மக்களை ஆறு குளம் ஏரி ஆக்கிரமிப்பாளர்களாகக் காட்டுவது போன்ற பொய்மை வேறில்லை. சென்னை நகரத்தில் ஆனாலும் பிற பகுதிகளில் ஆனாலும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், தனியார் மருத்துவமனைகள், தகவல் தொழில்நுட்ப வளாகங்கள், விண்மீன் உல்லாச விடுதிகள், உச்சப்பேரங்காடிகள், கேளிக்கை அரங்குகள், சொகுசுக் குடியிருப்புகள் பலவும் ஆறு குளம் ஏரி கண்மாய்ப் படுகைகளிலும் சதுப்பு நிலங்களிலும் கட்டப்பட்டிருப்பது கண்கூடு. குடிசைகளை அகற்றுவதற்கு முன் இவற்றைத்தான் அரசு முதலில் அகற்ற வேண்டும்.

பார்க்கப் போனால், ஆறு குள ஏரி ஆக்கிரமிப்பில் அரசே முதல் குற்றவாளி என்பதை மறுக்கவோ மறைக்கவோ இயலாது கடந்த சில ஆண்டுகளில் கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், நீதிமன்றக் கட்டடங்கள் பெரும்பாலும் ஏரி நிலங்களில் கட்டப்பட்டவையே என்று சுட்டிக்காட்டப்படுகிறது. சென்னை அம்பத்தூர் ஏரியில் தனியார் ஆக்கிரமிப்பு ஒருபுறமிருக்க அரசின் வீட்டுவசதி வாரியமும் பெரும் அடுக்ககங்களைக் கட்டியிருப்பதை சான்றாகக் குறிப்பிடலாம்.

அரசு தன் ஆக்கிரமிப்புகளைத் திட்டமிட்டு விரைவில் அகற்றிக்கொண்டு குடிமக்களுக்கு வழிகாட்ட வேண்டும். பெரும்படியான தனியார் ஆக்கிரமிப்புகளை எவ்விதப் பக்கச் சார்புமின்றி அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை வெளிப்படையாகவும் மக்கள் ஆதரவுடனும் நிறைவேற்றுவதாக இருந்தால் மக்கள் வசிக்கும் குடியிருப்புகளில் குமுகத் தேவை கருதி அப்புறப்படுத்த வேண்டியவற்றை மக்களின் மனமார்ந்த ஒத்துழைப்புடனேயே அப்புறப்படுத்த இயலும். இது குறித்து மக்களுடன் அரசு வெளிப்படையாகவே உரையாடலாம். மக்களின் வசிப்பிட உரிமையை அறிந்தேற்று அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை அரசே செய்து தர இயலும். இல்லையேல் குடியாட்சியம் என்று பேசுவதில் பொருளில்லை.

வரம்போ வரையறையோ இல்லாத நகரமயமாக்கம் என்பது முதலிய 'வளர்ச்சிப் பாதை'யின் உடன்பிறப்பு ஆகும். குறிப்பாக இன்றையப் புதுத் தாராளியப் பொருளியல் அமைப்பு முழுக்க முழுக்கத் தனியார்மயத்தையும் அதிலும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில பெருங்குழுமங்களின் ஈட்ட வெறியையும், மக்கள்நல மறுப்பையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் நகரமயமாக்கத்தின் கொடுவிளைவுகளைக் கோரமாக்கி விடுகிறது.

உலக மயம், தனியார் மயம், தாராள மயத்தின் பகைப்புலத்தில் இன்றைய நகரமயம் நிகழ்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதன் பொருள் இந்த நகரமயத்தையும் அதன் கொடுவிளைவுகளையும் இவற்றுக்கு அடிப்படையான அரசுக் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடக் கூடாது என்பதோ முடியாது என்பதோ அல்ல. மக்கள் போராட்டங்களைக் கொண்டு அரசுக் கொள்கைகளையும் அவற்றின் விளைவுகளையும் எதிர்த்துப் போராடவும் மாற்றவும் முடியும் என்ற நம்பிக்கையோடு களமாட வேண்டும்,

புதுத் தாராளிய வளர்ச்சிக் கொள்கையின் மற்றக் கூறுகள் எப்படியோ அப்படியே இந்த வரைமுறையற்ற நகரமயமும் அதன் விளைவான அதிரடி வீடகற்றல் கொள்கையும் பொதுவாக அடித்தட்டு, இடைத்தட்டு மக்களைத் துயர்படுத்தும் படியானவை என்னும் போதே ஒடுக்குண்ட தலித்து மக்களுக்கே மிகப் பெரிய துன்பச் சுமையாகின்றன. சேரிகளைக் கற்காரையாக்குவது பொருளியல் துன்பத்துக்கோ குமுகியல் ஒதுக்கலுக்கோ முற்றுப்புள்ளி வைத்து விடுவதில்லை. பட்டிக்காட்டில் ஆனாலும் பட்டணத்தில் ஆனாலும் வசிப்பிட உரிமைக்கான போராட்டம் குமுக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும் ஆகிறது.



தமிழ்நாடு தமிழ்மக்களின் தாயகம் என்ற வரலாற்று உரிமைக்கு முரணின்றியே உழைத்துப் பிழைக்கத் தமிழகம் வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமான வசிப்பிட உரிமையையும் ஆதரித்து நிலைநாட்ட வழிவகை காண வேண்டும்.

உலகளாவிய முறையில் இப்படி நடந்துள்ள போராட்டங்களின் வெற்றிப் பதிவுகளை உலகளாவிய மாந்தவுரிமைச் சாற்றுரிமையும் ஐநா ஆதரவிலான பன்னாட்டு உடன்படிக்கைகளும் தாங்கியுள்ளன. இந்திய அரசமைப்பின் முகப்புரையையும் அடிப்படை உரிமைகளையும், குறிப்பாக உறுப்பு 21 சாற்றிடும் வாழ்வுரிமையையும் வசிப்பிட உரிமைக்கு அடிப்படையாகச் சுட்டும் நீதிமன்றத் தீர்ப்புகளும் உள்ளன. வலுக்கட்டாயமான அப்புறப்படுத்தலுக்கு எதிராகவும் கண்ணியமான வீட்டுவசதி கோரியும் நாட்டின் பிற பகுதிகளில் நடந்துள்ள போராட்டங்களும் நமக்கு ஊக்கமளிக்கும்.

வாழ்வுரிமைக்கான போராட்டத்தின் ஓர் இன்றியமையாக் கூறாக வசிப்பிட உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க மக்கள்நலம் நாடும் அனைத்து இயக்கங்களுக்கும் ஆர்வலர்களுக்கும் காலம் விடுத்துள்ள அறைகூவலை ஏற்போம்!

# மின்காந்த மாசுபாடு:

சமந்தா




அதீத ஒலியும், ஒளியும் சூழலியல் மாசுபாடாக பரவலாக அறியப்படாவிட்டாலும் அவற்றை கண்டும், கேட்டும் உணர முடியும். அவற்றால் சூழலியல் பிரச்சனை ஏற்படுகிறதா இல்லையா என்பதை நாம் அறிந்திருக்கிறோமோ இல்லையோ, குறைந்தபட்சம் அதிகமான ஒளியையும், ஒலியையும் புலன்களால் உணரவாவது முடியும். ஆனால் நம்மால் உணர முடியாத வகையில் ஒரு சூழலியல் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. மின்காந்தக் கதிர்வீச்சால் ஏற்படும் மாசுபாடு தான் அது.கடந்த இருபது ஆண்டுகளாக வரலாறு காணாத அளவிற்கு மின்காந்த மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளோம்.அது குறித்து ஆய்வுகள் செய்யப்பட்டு வருகிறது என்ற போதும் நம் உயிர்ச் சூழல் மின்காந்த மாசுபாட்டால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் அளவுக்கு அதிகளவில் ஆய்வுகள் செய்யப்படவில்லை.மின்காந்த

கதிர்வீச்சு நம் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை அறியாமலே அதனுடனே வாழ்ந்து வருகிறோம். பொதுவெளியில் மின்காந்தக் மாசுபாடு குறித்த விசயங்களை வெளியிட்டு பரவலாக்குவதன் மூலமே அதன் எதிர்மறைத் தாக்கங்களை அறியச் செய்து அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளமுடியும்.

புவியை அடையும் சூரியக் கதிர்வீச்சு 49 விழுக்காடு அகச்சிவப்பு கதிர்களையும், 43 விழுக்காடு கட்புலனாகும் ஒளியையும், 8 விழுக்காடு புற ஊதாக்கதிர்களையும் கொண்டுள்ளது. சூரியக் கதிர்வீச்சில் காமா கதிர்கள், எக்ஸ் கதிர்கள், ரேடியோ அலைகள் ஆகியவை 1 விழுக்காடு மட்டுமே உள்ளன. காமா கதிர்கள், எக்ஸ்-கதிர்கள், அதிக அதிர்வெண் கொண்ட புற ஊதாக் கதிர்கள் ஆகியவை அயனியாக்கத்தை தூண்டி வினைபடுதிறன் மிக்க அயனிகளை(free radicals) உருவாக்குவதால் அயனியாக்கும் கதிர்வீச்சு என அழைக்கப்படுகின்றன. புற ஊதா கதிர்கள், காமா கதிர்கள், எக்ஸ் கதிர்கள் உடலில் அயனியாக்கச் சிதைவைத் தூண்டுவதன் மூலம் புற்று நோய்களை ஏற்படுத்துகிறது.

இயற்கையான சூழலில் மனிதர்கள் குறைந்த அளவே அயனியாக்கும் கதிர்வீச்சின் தாக்கத்திற்கு உட்படும் நிலை காணப்பட்டது. குறைந்த அதிர்வெண் கொண்ட புற ஊதாக்கதிர், கட்புலனாகும் ஒளி, லேசர் ஒளி, அகச்சிவப்புக்கதிர், நுண்ணலைகள், ரேடியோ அலைகள் ஆகியவை அயனியாக்கா கதிர்வீச்சு என அழைக்கப்படுகின்றன. ஆனால் சமீபத்திய ஆய்வுகளின் மூலம் கட்புலனாகும் ஒளி, அகச்சிவப்பு கதிர், ரேடியோ அலைகள், நுண்ணலைகளும் தோல் செல்களில் அயனியாக்கத்தைத் தூண்டுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை மூலங்களை விட மனித நடவடிக்கைகளாலும், தகவல் தொழில் நுட்ப மேம்பாடுகளாலும் அதிக அளவுக்கு ரேடியோ அலைகள், நுண்ணலைகள் போன்ற மின்காந்தக் கதிர்வீச்சுக்கு நாம் வெளிக்காட்டப்படுகிறோம். கணினிகள், கைபேசிகள், கைபேசி கோபுரங்கள், நுண்ணலை அடுப்புகள் திறன்மிகு மின்சார அளவி, தொலைக்காட்சிகள், திசைவிகள் என எல்லா மின் சாதனங்களும் வெவ்வேறு அளவுகளில் மின்காந்த கதிர்வீச்சை வெளியிடுகின்றன. நம்மால் நேரடியாகக் காண இயலவில்லை என்ற போதும் நாம் அதிக அளவிற்கு மின்காந்த கதிர்வீச்சுகளின் தாக்கத்துக்கு உட்படுகிறோம்.

புவியின் மின் காந்தப் புலம், 7.7 ஹெர்ட்ஸ் அதிர்வெண்ணைக் கொண்டுள்ளது இது புவியின்

நாடித்துடிப்பு என்றும் அழைக்கப்படுகிறது. மனித உடலிலும் ஒரு மின் காந்தப்புலம் உள்ளது. மனித மூளையின் ஆல்ஃபா அலைகளின் அதிர்வெண் (7.5-12.5) புவியின் நாடித்துடிப்புக்கு ஒத்ததாக உள்ளது. மனித உடல் ஓர் உயிர் மின்மண்டலத்தைக் கொண்டுள்ளது. அதன் மூலமே அனைத்தும் நரம்பு மண்டல சமிக்ஞைகள், இதயத்துடிப்பு என அனைத்து உடல் செயல்பாடுகளும் இயக்கப்படுகின்றன.மின் உடலியங்கியலில் இது குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இயற்கையில் புவியின் மின் காந்தப்புலம், எதிர்மின் தன்மை கொண்டதாக உள்ளது. மின் சாதன்ங்களால் ஏற்படும் மின்காந்தக்கதிர்வீச்சு நேர்மின் தன்மையை ஏற்படுத்துகிறது. மனித நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் மின் காந்தக்கதிர்வீச்சு நம் உடலில் உள்ள இயல்பான மின் காந்தப்புலத்துடன் குறுக்கிடுவதால் உடலில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

மின் காந்த மாசுபாட்டால் மனித உடலில் ஆக்சிஜனேற்ற சிதைவைத் (Oxidative stress) தூண்டி பல உடல்நலச் சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது. நம் உடலில் வளர்சிதை மாற்றத்தின் போது பல்வேறு ஆக்சிஜனேற்ற வினைகளும், ஆக்சிஜனொடுக்க வினைகளும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இவற்றிற்கிடையே ஒரு குறிப்பிட்ட சமநிலை ஆக்சிஜனேற்ற - ஒடுக்க சம நிலை(redox balance) தக்கவைக்கப்படுகிறது. ஒரு அணு அல்லது மூலக்கூறு ஒரு எலக்ட்ரானை இழக்கும் வேதிவினை ஆக்சிஜனேற்றம் எனப்படுகிறது. ஒரு அணு அல்லது மூலக்கூறு ஒரு எலக்ட்ரானை ஏற்கும் வேதிவினை ஆக்சிஜனொடுக்க வினை எனப்படுகிறது.

உடலில் வளர்சிதை மாற்றத்தின் போது நடைபெறும் உயிர்வேதிவினைகளில் உபப்பொருட்களாக ஆக்சிஜனேற்ற வினைபடு அயனிகள்(Reactive oxygen species-ROS) உருவாகின்றன.இவை பல்வேறு பணிகளை செய்கின்றன. இவற்றின் சமநிலை ஆக்சிஜனேற்றத் தடுப்பான்களால்(Anti-oxidants) ஒழுங்குபடுத்தப்படுகிறது.

ஆக்சிஜனேற்ற வினைபடு அயனிகளால் தூண்டப்படும் ஆக்சிஜனேற்றத்தைத் தடுப்பவை 'ஆண்டி ஆக்சிடன்டு' ஆக்சிஜனேற்றத் தடுப்பான்கள் எனப்படுகின்றன. உடலில் ஆக்சிஜனேற்றத் தடுப்பான்களின் அளவு குறையும் போது, வினைபடு ஆக்சிஜனேற்ற அயனிகளின் அளவு அதிகரிப்பதால் ஆக்சிஜனேற்ற சிதைவு தூண்டப்படுகிறது. இதனால் உடலின் ஆக்சிஜனேற்ற - ஒடுக்க சம நிலை(redox balance) பாதிக்கப்படுகிறது. வினைபடு ஆக்சிஜனேற்ற அயனிகள்


அருகிலுள்ள உயிர்மூலக்கூறுகளான மரபணு(நியூக்ளிக் அமிலம்), புரதம், கொழுப்பு ஆகியவற்றில் ஆக்சிஜனேற்றத் தொடர் வினையைத் தூண்டி செல்களையும், திசுக்களையும் சேதப்படுத்தும் நிகழ்வே ஆக்சிஜனேற்ற சிதைவு(Oxidative stress) என அழைக்கப்படுகிறது.

விட்டமின் ஏ, விட்டமின் சி, விட்டமின் ஈ, ஆகியவை ஆக்சிஜனேற்றத் தடுப்பான்களாக செயல்படுகின்றன. ஆக்சிஜனேற்ற தடுப்பான்கள் பல வண்ண பழங்கள், காய்கறிகளில் அதிகம் காணப்படுகின்றன என்பதால் அவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளும் போது நம் உடல் அதிக ஆக்சிஜனேற்ற சிதைவால் தாக்கப்படாது பாதுகாக்கமுடியும்.

ஆக்சிஜனேற்ற சிதைவின் மூலமாகத் தான் வெள்ளையணுக்கள் கிருமிகளை அழிக்கின்றன. ஆனால் அதே நிகழ்வு நம் உடல் செல்களின் மீதே தூண்டப்பட்டால் அதுவே பல நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.புகை பிடித்தல், மது அருந்துதல், காற்று மாசுபாடு, ரத்த சர்க்கரை அதிகரிப்பு, தொற்று தாக்கம், விட்டமின் குறைபாடு ஆகியவற்றால் உடலில் உள்ள ஆக்சிஜனேற்ற வினைபடு அயனிகளின் அளவு அதிகரிப்பதால் ஆக்சிஜனேற்ற சிதைவு தூண்டப்படுகிறது. ஆக்சிஜனேற்ற சிதைவால் புற்றுநோய், நீரிழிவு, ஆஸ்துமா, நரம்பு நோய்கள் ஏற்படுகின்றன.

மின் காந்த கதிர்வீச்சு நம் உடலில் அதிக ஆக்சிஜனேற்ற வினைபடு அயனிகளை உருவாக்குகிறது, அதன் மூலமாக நம் உடலில் ஆக்சிஜனேற்ற சிதைவு தூண்டப்பட்டு பல எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகிறது. மின் காந்தக் கதிர்வீச்சின் தாக்கத்தால் நரம்பு மண்டலக் கோளாறுகள்,புற்று நோய்,கருவுறுதலில் பிரச்சனைகளை, நோய் எதிர்ப்புத்தன்மை குறைபாடு, இளமையில் முதுமை, குழந்தைகளில் வளர்ச்சி குறைபாடு எனப் பல்வேறு உடல் நலப் பிரச்சனைகள் ஏற்படுகிறது.

மின்காந்தக் கதிர்வீச்சின் தாக்கத்தை எவ்வாறு குறைக்க முடியும். கம்பியில்லா தொழில் நுட்பத்தின் பயன்பாட்டை முடிந்த அளவிற்கு குறைத்துக் கொள்வது நல்லது. கம்பியில்லா தொழில்நுட்பத்திற்கு அதிக அதிர்வெண் கொண்ட மின்காந்தக் கதிர்வீச்சு பயன்படுத்தப்படுகிறது. கைப்பேசியையும், இணையத்தையும் பயன்படுத்தாத போது கம்பியில்லா சமிக்ஞையை




அணைத்துவைக்க வேண்டும். கம்பியற்ற சாதனங்கள் - திசைவிகள்(routers), கைபேசிகள், மடிக்கணினிகள் அனைத்தும் அருகலை சமிக்ஞைகளை (Wifi signals) வெளியிடுகின்றன. முடிந்தவரை, பயன்பாட்டில் இல்லாத போது இச்சாதனங்களின் அருகலை செயல்பாட்டை துண்டித்து வைப்பது நல்லது. அது மட்டும் அல்லாமல், இத்தகைய சாதனங்களை பயன்படுத்தும் பொழுது அவற்றுடனான நேரடி உடல் தொடர்பைத் தவிர்க்க வேண்டும். கைபேசியை காதோடு உரசியவாறு வைத்து பேசுவதையும், மடிக்கணினியை மடியில் வைத்து பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். வீட்டில் அருகலை திசைவியை நாம் அதிகம் புழுங்கும் இடத்திலிருந்து சற்றுத் தள்ளிவைக்க வேண்டும். சட்டை, கால்சட்டை பைகளில் கைபேசியை வைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

மின் காந்த கதிர்வீச்சின் தாக்கத்திலிருந்து காப்பு தருவதற்கான தொழில் நுட்பங்களும் சாதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு சந்தைபடுத்தப்பட்டுள்ளன. மின்காந்தக் கதிர்வீச்சிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் கைபேசி, கணிணி உறையை பயன்படுத்தி பாதுகாப்பு பெறலாம். மின்காந்தக் கதிர்வீச்சின் தாக்கம் குறிப்பிட்ட உட்கிரகித்தல் வீதத்தால் அளவிடப்படுகிறது (SAR). குறைந்த உட்கிரகித்தம் வீதம் கொண்ட கைபேசியையும், பிற சாதனங்களை வாங்கிப்



பயன்படுத்தவேண்டும். குறிப்பிட்ட உட்கிரகித்தல் வீதம் என்பது ஒரு சாதனத்தால் வெளியிடப்படும் மின்காந்த கதிர்வீச்சை உடல் உட்கிரகிக்கும் அளவைக் குறிப்பிடுகிறது.. இதன் அலகு 1.6 வாட்/கிகி கொண்ட கைபேசிகள், சாதனங்கள் பாதுகாப்பானதாகக் கருதப்படுகின்றன.
இவை அல்லாமல் மின் காந்தக் கதிர்வீச்சினால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க இயற்கையான ஒரு வழிமுறையும் உள்ளது. அதற்கு நீங்கள் வேறெங்கும் தேடவேண்டியது இல்லை, உங்கள் காலடியிலே மருத்துவர் இருக்கிறார். நேரடியாகப் புவியுடன் தொடர்பை ஏற்படுத்தும் புவியிணைவு (earthing/grounding) தான் அந்த வழிமுறை. இது வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படவில்லை அறிவியல் பூர்வமாக ஏற்றுக்கொள்ள்ப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், அமெரிக்காவின் கிளின்ட் ஓபர் மற்றும் போலந்தின் கே. சோகல், பி. சோகல் ஆகியோர் சுயேச்சையாக செய்த ஆய்வுகளின் மூலம் புவியிடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்ட படுக்கைகளும், பாய்களும், உடல் நலத்தை மேம்படுத்துவதை கண்டறிந்தனர்.

வீட்டில் மின் இணைப்பு ஏற்படுத்தும் போது மின்சார அதிர்ச்சி ஏற்படுவதைத் தடுக்க புவியுடன் இணைப்பு ஏற்படுத்தப்படுவது வழக்கம். இன்று நாம் காங்கிரீட் கட்டிடங்களில் வாழ்கிறோம், ரப்பர், நெகிழி காலணிகள் அணிந்து கொண்டு தான் நடக்கிறோம். ரப்பர், நெகிழி மின் கடத்தாப்

பொருட்கள் என்பதால் புவியுடனான நேரடி தொடர்பு தடுக்கப்படுகிறது. நகரமயமான வாழ்க்கைமுறையால் புவியுடனான நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. புவியுடனான நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் நம் உடலின் மின் காந்தச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

மீண்டும் புவியுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும். நம் கைகளும், கால்களும் நேரடியாகப் புவியைத் தொடவேண்டும். காலணிகள் இல்லாமல் வெறுங்கால்களுடன் மண்தரையில், புல்வெளியில், கடற்கரையில் நடக்க வேண்டும், உட்கார வேண்டும், படுத்துக் கொள்ள வேண்டும். மண்ணில் நடக்கும் போதும், கைகளை ஊன்றும் போதும், படுத்திருக்கும் போதும் உடல் புவியுடன் நேரடித் தொடர்பு கொள்கிறது. வீட்டிற்குள் இருந்தபடியே புவியிணைவை ஏற்படுத்தும் படுக்கைகள், இருக்கைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

புவியிணைவின் போது உடலானது புவியின் மேற்பரப்பில் உள்ள எண்ணற்ற எலக்ட்ரான்களுடனும் தொடர்பு கொள்கிறது. மனித உடல் மின்சாரத்தைக் கடத்தும் என்பதால், புவியுடன் நேரடியாக தொடர்பு ஏற்படும் போது இந்த எலக்ட்ரான்களை உடல் உட்கிரகிப்பதற்கு வழிவகை செய்கிறது.

புவியிணைவால், புவியிலிருந்து உடலுக்கு எலக்ட்ரான்கள் கடத்தப்படுவதால் உடலின் மின்புலம் சமனப்படுத்தப்பட்டு புவியின் மின் காந்தப் புலத்தின் நீட்சியாகிறது. புவியிணைவால் வெளிப்புறத்திலிருந்து வரும் மின்காந்தக் கதிர்வீச்சினால் உடலில் ஏற்படும் எதிர்மறைத் தாக்கம் குறைகிறது. மின்காந்தக் கதிர்வீச்சால் உடலில் தூண்டப்படும் ஆக்சிஜனேற்றச் சிதைவு புவியிணைவால் தடுக்கப்படுகிறது. உடலின் ஆக்சிஜனேற்ற - ஒடுக்க சம நிலை(redox balance) நிலை நிறுத்துவதற்கு புவியிணைவு துணைபுரிகிறது.

புவியிணைவினால் பலருக்கு நல்ல மன நிலையும் ஆழ்ந்தத் தூக்கமும், ஏற்படுவதாக ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. புவியிணைவு ஆக்சிஜனேற்ற சிதைவால் ஏற்படுகிற நோய்களின் தீவிரத்தை குறைப்பதாகவும் அறியப்படுகிறது. புவியிணைவினால் இரத்த அழுத்தமும், இரத்தத்தின் பாகுத்தன்மையும், இதய செயல்பாடுகளும் சீரடைகிறது; உடல் வீக்கமும்,வலியும், மன அழுத்தமும் குறைகிறது; துணைப் பரிவு நரம்பு மண்டலம் தூண்டப்பட்டு,

கார்டிசோலின் அளவை சீரமைக்கிறது.

மின் நிலையங்களுக்குத் தொலைவான இடங்களில் புவியிணைவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். மின்கம்பிகள், மின் கசிவுக்கான வாய்ப்பு இல்லாத பாதுகாப்பான இடங்களை முன்னெச்செரிக்கையுடன் தேர்ந்தெடுத்து புவியிணைவு கொள்வது நல்லது. நகர்புறங்களுக்குத் தொலைவான இடங்களில் புவியிணைவு கொள்வது சிறப்பு.

எப்படி சூரிய ஒளியும், சுத்தமான காற்றும், நீரும், சத்தான உணவும், உடற்பயிற்சியும் நம் உடல் நலத்தை பாதுகாப்பற்கான அடிப்படைத் தேவையாக உள்ளதோ அது போலவே புவியிணைவும் உடல் நலத்திற்கான ஒரு அடிப்படை தேவையாக உள்ளது. உணவூட்டம் மட்டுமல்லாது இயற்கையான முறையிலான மின்னூட்டமும் (electrical nutrition) உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உள்ளது. என்பதை உணர்ந்து புவியிணைவினால் பயன்பெறுவோம். மின்காந்த மாசுபாட்டிலிருந்து பாதுகாப்பு பெறுவோம்.

மின் காந்த மாசுபாடு மனிதர்களை மட்டுமல்லாது மற்ற உயிரினங்களின் நல்வாழ்விற்கும் அச்சுறுத்தலாக உள்ளது. நம் புலன்களால் உணரக்கூடிய ஒன்றினால் ஆபத்து ஏற்படுகிறது என்றால் அதை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் என்பதால் மின்காந்தமாசு புலன்களால் உணரக்கூடிய மாசுக்களை காட்டிலும் அதிக அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.அது குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்படாமல் இருப்பது ஆபத்திற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது.மாசுகட்டுப்பாட்டு அமைப்புகள் இது குறித்து எந்த ஒழுங்குமுறையையும் செயல்படுத்தாமல் இருப்பதும், அரசின் கொள்கை வகுப்பாளர்களின் அலட்சியமும், நமக்கு மேலும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.மின்காந்த மாசுபாட்டின் தாக்கம் குறித்து நம் சுற்றத்தார், நண்பர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். மின்காந்த மாசுபாட்டில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

## சூழலுக்காக ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டிய சரிபார்ப்பு பட்டியல்:

சமந்தா

1. பேருந்து, ரயில், போன்ற பொது போக்குவரத்து வாகனங்களை அதிகளவில் பயன்படுத்துவோம்.

2. ஓரிரு கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களுக்கு நடந்தே செல்வோம்.

3. தனி நபர்களுக்கான வாகனப் பயன்பாட்டை, பைக், கார், ஆகியவற்றின் பயன்பாட்டை முடிந்தளவு குறைத்துக் கொள்வோம். அவற்றை பயன்படுத்தும் போது திறன்மிக்க வேகத்தில் ஓட்டுவோம் (economy speed). வாகனங்களை சரியாகப் பராமரித்து எரிபொருள் சிக்கனத்தைக் கடைபிடிப்போம்.

4. மிதிவண்டிகளின் பயன்பாட்டை அதிகரிப்போம். புதைபடிவ எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைப்போம். இயன்றால் மின்வாகனங்களை பயன்படுத்துவோம்.

5. விமான டர்பைன் எரிபொருள் பயன்பாடு பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வு அதிகரிப்பதால், விமான போக்குவரத்தைக் குறைத்துக்கொள்வோம்.

6. மின் விசிறிகள், அறைக்குளிரூட்டிகள், வீட்டு உபயோக மின்சாதனங்கள் பயன்பாட்டில் இல்லாத போது அணைத்துவைப்போம். மின்சாதனங்களின் பொத்தான்களை அணைப்பதுடன் மின் செருகிகளையும்(plug) கழட்டிவைப்போம்.

7. யாரும் பார்க்காத போது தொலைக்காட்சியை ஓடவிடுவதையும், கணினிகளில் காணொளிகளை ஓடவிடுவதையும் தவிர்ப்போம்.

8. கணினி பயன்பாட்டில் இல்லாத போது அணைத்து வைப்போம். கணினியை சிறிது

நேரமே பயன்படுத்தாமல் இருக்க நேரும் போது திரைக்காப்பை (screen saver) தேர்ந்தெடுக்காது, தூக்கப் பயன்பாட்டு முறையில்(Sleeping mode) வைப்போம்.

9. கணினி, கைபேசிகளின் திரையில் அதிக வெளிச்சத்தில் பயன்படுத்துவதைத் தவிர்த்து, கண்ணை உறுத்தாத குறைந்த வெளிச்சத்தில் சிக்கன பயன்பாட்டு முறையில் (Power saving mode) பயன்படுத்துவோம்.

10. மேசைக் கணினிகளை (desktop) விட மடிக்கணினிகள்(laptop) குறைந்த ஆற்றலையே பயன்படுத்துவதால் மேசைக் கணினிகளின் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்வோம்.

11. கைபேசி, கணினி போன்ற மின்சாதனப் பொருட்களை அடிக்கடி மாற்றாமல் நீடித்தப் பயன்பாட்டிற்கு உட்படுத்துவோம்.

12. குறைந்த அளவிற்கு மின்காந்தக் கதிர்வீச்சின் தாக்கம் ஏற்படுத்தும் கைபேசிகளையும், பிற சாதனங்களையும் வாங்கிப் பயன்படுத்துவோம். 1.6 வாட்/கிகி அல்லது அதைவிட குறைந்த குறிப்பிட்ட உட்கிரகித்தல் வீதம் (SAR) கொண்ட கைபேசிகள், சாதனங்களையே வாங்குவோம்.

13. அதிக வாட்டேஜ் இல்லாத ஆற்றல் திறமிக்க (energy efficient) விளக்குகளை, ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகளை, பயன்படுத்துவோம்.

14. பகல் நேரங்களில் மின்விளக்குகளின் பயன்பாட்டை முடிந்த அளவிற்குத் தவிர்ப்போம்.

15. இரவில் 10-11 மணிக்குள் அனைத்து விளக்குகளையும் அணைத்து சீக்கிரமே உறங்குவதை வழக்கமாக்கிக் கொள்வோம்.

16. காகிதங்களின் பயன்பாட்டை முடிந்த அளவு குறைத்துக் கொள்வோம். காகிதங்களை பயன்படுத்தும் போது, எழுதுவதற்கும் சரி, அச்சிடுவதற்கும் சரி காகிதங்களின் இருபக்கத்தையுமே பயன்படுத்துவோம்.

17. காகிதங்களின் பயன்பாட்டை குறைக்க மின் ரசீதுகள், மின் கட்டண முறைகளை பயன்படுத்துவோம். மின்புத்தகங்களின் பயன்பாட்டை அதிகரிப்போம்.

18. மறுசுழற்சி செய்த காகிதங்களையும், காகிதப் பைகளையும் பயன்படுத்துவோம் அவற்றை மறுபயன்பாட்டிற்கும் உட்படுத்துவோம்.

19. துணிமணிகள், வீட்டு உபயோகப்பொருட்கள், புத்தகங்கள் என அனைத்திலுமே மறுபயன்பாட்டை அதிகப்படுத்துவோம். மீள்பயன்பாட்டு கடைகளில் வாங்குவதை வாடிக்கையாக்கிக் கொள்வோம்.

20. மறு சுழற்சி செய்த பொருட்களின் பயன்பாட்டையும் அதிகப்படுத்துவோம்.

21. அருகிலே சந்தைப்படுத்தப்படும் பொருள்களை வாங்குவோம், இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் பயன்பாட்டை முடிந்த அளவு குறைப்போம்.

22. கடைகளில் பொருட்களை வாங்கும் போது நெகிழிப் பைகளைத் அறவே தவிர்ப்போம்.முடிந்த அளவிற்குக் காகிதத்தில் கட்டித் தருமாறு கேட்போம்.

23. நெகிழிப் பயன்பாட்டைக் குறைக்க வீட்டை விட்டு வெளியே செல்லும் போது எப்பொழுதுமே கைகளில் துணிப்பைகள், சணல் பைகளை கொண்டு செல்வோம்.

24. பொருட்களை 5கிலோ, 10கிலோ என மொத்தமாக வாங்குவதன் மூலம் நெகிழிப் பயன்பாட்டைக் குறைப்போம்.

25. பொருட்கள் வாங்கும் போது இருமுறை, மும்முறை (double pack, triple pack, tetra pack) என அதீதமாக பொட்டலமிடப்பட்டிருக்கும் பொருட்களை வாங்குவதை முடிந்த அளவிற்குத்

தவிர்ப்போம்.

26. எண்ணெய் வாங்கச் செல்லும்போது வீட்டிலிருந்தே உலோகத் தூக்குவாளி, புட்டி, குடுவைகளைக் கொண்டு செல்வோம்.

27. கடைகளில் தேனீர், காப்பி, பழச்சாறு ஆகிய திரவ உணவுப் பொருட்களை நெகிழிப்பைகளில் வாங்குவதை தவிர்த்து உலோகத் தூக்கிவாளி, வெப்பக் குடுவையை(flask) பயன்படுத்துவோம்.

28. உணவு விடுதிகளில் நெகிழித்தாள்களுக்கு பதிலாக வாழை இலைகளை பயன்படுத்த அறிவுறுத்துவோம்.

29. நெகிழிப்புட்டிகளை (plastic bottles) தவிர்த்து தண்ணீர் குடிப்பதற்கு உலோகப் புட்டி,குடுவைகளை பயன்படுத்துவோம்.

30. வீட்டில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து உரிய முறையில் மறுசுழற்சி செய்ய துப்புறவு பணியாளர்களிடம் ஒப்படைப்போம். வீட்டில் முடிந்த அளவு மக்கும் குப்பையை உரமாக்கி பயன்படுத்துவதை வழக்கமாக்குவோம்.

31. உடனுக்குடன் பயன்படுத்தித் தூக்கியெறியும் (use and throw) பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து நீடித்தப் பயன்பாடுள்ள(durable) பொருட்களை அதிகம் பயன்படுத்துவோம்.

32. சந்தையில் புதிது, புதிதாக அறிமுகமாகும் பொருட்களை உடனுக்குடன் வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆசையிலிருந்தும், நுகர்வுக் கலாச்சார போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெறுவோம்.

33. அறை புத்துணர்ச்சியூட்டிகள் (room freshners), துர்நாற்றம் அகற்றிகள்(deodorant), தெளிப்பான்கள் (spray) ஆகியவை அதிகம் பயன்படுத்துவது காற்றின் தரத்தை குறைத்து ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பதால் அவற்றின் பயன்பாட்டை முடிந்த அளவிற்கு தவிர்ப்போம்.

34. புகைபோக்கி, புகை நீக்கிகளின் மூலம் சமையலறையை காற்றோட்டமாக வைத்துக் கொள்வோம்.விறகடுப்புகளின் பயன்பாட்டை முடிந்த அளவிற்கு தவிர்ப்போம்.

35. உணவுப் பொருட்களை அதிகமாக சமைத்து வீணாக்குவதை தவிர்ப்போம்.

36. வீட்டில் அஞ்சறைப்பெட்டியில் உள்ள சோம்பு, வெந்தயம்,கடுகு,மல்லி ஆகியவற்றிலிருந்து கூட செடிகளை வளர்க்கமுடியும் என்பதால், சிறிய அளவிலாவது நமக்கு தேவையான செடிகளை வீட்டிலே வளர்த்துப் பயன்படுத்துவோம்.

37. கனிம உரங்கள், பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டைத் தவிர்த்து உயிரி உரங்களையும், பூச்சி விரட்டிகளையும் பயன்படுத்துவோம். இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்போம். இயற்கை விவசய விளை பொருட்களை வாங்குவதை வழக்கமாக்கிக் கொள்வோம்.

38. வீட்டை விட்டு அதிக நாட்கள் வெளியே இருக்கும் நிலை ஏற்படும் போது குளியலறையில் உள்ள நீரைச் சூடேற்றும் சாதனத்தை(heater) விடுமுறை பயன்முறையில் (vacation mode) வைப்போம்.

39. குளிக்கும் போது தூவாலைக் குழாயை(shower) பயன்படுத்தி நீர் பயன்பாட்டைக் குறைப்போம்.

40. மின் மோட்டார்கள் மூலமாகத் தான் நீர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.நீர் பயன்பாடு அதிகரிக்கும் போது நீர் விரயமாவதுடன், மின்சாரம் விரயமாகவும் காரணமாகிறது ஆகையால் நீர் பயன்பாட்டைக் குறைத்து சிக்கனமாகப் பயன்படுத்துவோம்.

41. நீர்க் குழாய்களில் கசிவு ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்வோம்.

42. துணி துவைக்கும் சாதனத்தை பயன்படுத்தும் போது ஓரிரு துணிகளுக்காக ஓடவிடாது,

அதிகபட்சமாக எவ்வளவு துணிகளை போட அறிவுறுத்தப்பட்டுள்ளதோ அதன் படி திறனுள்ள முறையில் பயன்படுத்தி ஆற்றல் விரயத்தைத் தடுப்போம். உலர்த்தியை(dryer) பயன்படுத்துவதற்கு பதில் துணிகளைக் கொடிகளில் காயப்போடுவோம்.

43. குழந்தைகளுக்கு நெகிழிப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் அரைக்கச்சுகளை (diaper) அறவே தவிர்த்து துணியிலான அரைக்கச்சுகளை பயன்படுத்துவோம்.

44. பெண்கள் நெகிழிப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் அரைக்கச்சுகளை(sanitary napkins) அறவே தவிர்த்து துணியிலான அரைக்கச்சுகளை பயன்படுத்துவோம்.

.

45. சூரிய ஆற்றலை அதிகம் பயன்படுத்துவோம், சூரிய அடுப்பு, சூரிய மின்தகடுகளை (Solar panels) பயன்படுத்துவோம்.

46. செடி,கொடி மரங்களை வளர்த்து காற்றின் தரத்தை மேம்படுத்தி சூழலை குளிர்விப்போம்.பறவைகளை வரவேற்போம். செடி,கொடி,மரம்,பறவைகளை நண்பர்களாக்கி நம் நட்புவட்டத்தையும் விரிவுபடுத்துவோம்.

47. புவி நேயர்களாய், சூழலுக்குகந்த, இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறையை பின்பற்றுவோம்.

## தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு

பெருந்தொற்றுக்காலம் விரைவில் முடிந்துவிடும் எனக்கொண்டு இயல்பான இயக்கச் செயல்பாடுகளுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது எனத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கருதுகிறது.

பெருந்தொற்றுக் காலத்தை இயன்ற வரை பயனுள்ளதாக்கிக் கொண்டோம். முகில்களின் மேல் அறிவு கொளுத்திய காலமாகவே அதைக் கருதலாம். இணைய வழியில் தோழர் சமந்தாவின் சூழலியல், பொருளியல் வகுப்புகளும், தோழர் தியாகுவின் அரசியல் வகுப்புகளும், நாம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளும் அவற்றில் கலந்து கொண்டவர்களின் அறிதலையும் புரிதலையும் வளர்த்துக் கொள்ள உதவின.

அவ்வாறே உரிமைத்தமிழ்த்தேசம் இதழையும் தொடர்ந்து இணையவழியில் வெளியிட்டுஅரசியல், பொருளியல், சூழலியல், வரலாற்றியல் கல்வி புகட்டிவந்தோம்.

என்றாலும் இந்தப்பணிகள் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே சுருங்கி நின்றதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். பெரும்பாலார் இன்றளவும் இணையத்துக்கும் சமூக ஊடகங்களுக்கும் புறத்தே தான் நிற்கின்றனர். இவர்களைச் சென்றடைய நம் செய்திகளை விரைவில் அச்சுவடிவாக்க வேண்டும். தோழர் சமந்தாவின் சூழலியல் கட்டுரைகளையும், தோழர் தியாகுவின் தமிழ்நாடு இனி பாடக்குறிப்புகளையும், ஈழம் மெய்ப்படும் இடுகைத் தொடரையும் விரைவில் அச்சிலேற்றி நூல் வடிவாக்க வேண்டும். அடுத்தடுத்து மற்றப் பல படைப்புகளுக்கும் நூல்வடிவம் கொடுக்கவேண்டும். நம் பழைய வெளியீடுகளையும் மீள்பதிப்புச் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

எல்லாவற்றையும் எல்லாரிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் எளியமக்கள்-பதிப்புகளாக வெளியிட வேண்டும். இந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்திட தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது:

தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். மதுரை வழக்கறிஞர் தோழர் நா. கதிர்வேல்அமைப்பாளராகவும், தோழர்கள் பால்ராஜ், அருண்மாசிலாமணி, சுந்தர் ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும், தோழர் தியாகு பதிப்பாசிரியராகவும் பொறுப்பு வகிப்பார்கள்.

தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு எளியமக்கள்-பதிப்புகள் வெளியிட இயன்றவரை எளிய மக்கள் தரும் நன்கொடைகளையே நம்பியுள்ளது. பணம் அனுப்ப அல்லது

**வைப்பகக்கணக்கில் செலுத்த:**

**நா. கதிர்வேல், வழக்கறிஞர்,**

**மகராஜன்நகர், 5/242, ஆசிரியர்குடியிருப்பு,**

**விரகனூர், மதுரை 625 009.**

**பேச: 9894913820மின்னஞ்சல்: vel.kathir325@gmail.com**

**Bank Details:**

**N. Kathirvel,**

**Tamilnadu Mercantile Bank,**

**Iravathanallur Branch,**

**Madurai. Account No. 343100050300634 I**

**FSC Code: TMBL0000343**